www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

இது வரவேற்பறை ஓவியமல்ல
தாமிரவருணியில் கொன்று வீசப்பட்ட உயிர்.

மாஞ்சோலைத்
தோட்டத்தின்
ஆர்கானிக்
டீ

உலகின்
தரமுயர்ந்த
ஓரே தேயிலை

உயிர்ச்சத்துள்ள
உரத்தால்
மட்டுமே
உருவாக்கப்படும்
தேயிலை

உண்மையான
உயிர்ச்சத்துள்ள



# தேநீர்



படிப்பகம்

www.padippakam.com



# வங்கத்திலிருந்து ஒரு சித்தன் : லாலன் பக்கீர்

பார்ப்பனிய இந்துமதத்தை விமர்சனம் செய்யும் பாரம்பரியம் இந்திய மண்ணில் நெடுங்காலம் உண்டு. இன்று நேர்ந்து கொண்டிருக்கும் அவமானங்களிலிருந்து நாம் வெளியேற வேண்டுமானால் பார்ப்பனீய இந்துமதம் கடுமையாக விமர்சிக்கப்பட்டுத் தூக்கி எறியப்பட வேண்டும். அண்மையில் படிக்கக் கிடைத்த 'லாலன் பக்கீரின் பாடல்கள்' (தொகுப்பு: ஆங்கிலம், நந்தகோபால் தாஸ், கல்கத்தா, நவம்பர் 1977) இதற்குத் துணை செய்யக் கூடியது.

★☆★

லாலன் 19-ஆம் நூற்றாண்டின் நாட்டுப்புறக் கவிஞர்; ஆயிரக் கணக்கான நாட்டுப்புறப் பாடல்கள் எழுதியவர்; அற்புதப் பாடகன். 1823-ல் அப்போதைய குஸ்தியா நகரில் (அதாவது இன்றைய பங்களா தேஷில் உள்ள நகரம்) பா-உல் (BAUL) என்ற சங்கம் ஒன்றை தன் குரு சிராஜ் செயினின் விருப்படி தொடங்கி பல ஆயிரம் தொண்டர்களைப் பெற்றிருந்தார் என்று சொல்கிறார்கள். சிராஜ் செயின் ஒரு பல்லக்குத் தூக்குபவர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே விவசாயிகள் - ஏழை முசுலீம்கள் தாழ்த்தப்பட்டோர் மத்தியில் வாழ்ந்ததாலும், சீடர்களைப் பெற்றிருந்ததாலும் ஊரறிந்த பாடகனாக அவர் இருந்தார்.

அவரது பாடல்களில் சிலநூறு மட்டும் ஆங்கிலத்தில் கிடைக்கின்றன. பங்களாதேஷில் அவரது பாடல்களின் மீது இன்று ஆராய்ச்சிகள் பல நடக்கின்றன.

அவர் ஓர் காயஸ்தா எனும் இந்து உயர்சாதிக் குடும்பத்தில் பிறந்தவர்; சிறுவனாக இருந்தபோது ஒருமுறை கிராமத்தாருடன் யாத்திரையாகச் சென்றபோது கடுமையான சின்னம்மையால் தாக்கப்பட்டார்; அப்படியே அவர் இறந்துவிடக்கூடும் என்று கருதி அவரை ஒரு நதிக்கரையோரம் விட்டுச் சென்று விட்டார்கள் குடும்பத்தினர்.

அவர்மீது இரக்கப்பட்டு ஓர் ஏழை முசுலீம் நெசவாளிப் பெண் தனது குடிசைக்கு எடுத்துச் சென்று கணவனின் உதவியோடு அவருக்குச் சிகிச்சை செய்து தன் மகன் போலவே வளர்த்தார். (இன்றைய பங்களாதேஷில் இவர்கள் அனைவரின் சமாதிகளும் அருகருகே உள்ளன). லாலன் உழைப்பாளியாகவும், அதேசமயம் பொது அறிவு மிகுந்த கவிஞனாக, பாடகனாகவும் வளர்ந்தார். திருமணம் செய்து கொண்டார்; கிட்டத்தட்ட 116 ஆண்டுகள் (1774-1890) உயிர் வாழ்ந்திருந்தார்.

— இவையே மக்கள் மத்தியில் திரட்டப்பட்ட லாலனின் வாழ்க்கை விவரங்கள்.

லாலன் எந்த மதத்தையும் பின்பற்றவில்லை. அவர் மனிதனை மையமாக வைத்த 'சாதனா' முறையைப் பின்பற்றியதாகச் சொல்கிறார்கள். ஆனால் அவர் வாழ்ந்தபோதும் சரி, பிறகும் சரி அவர் எந்த மதத்தவர் என்று வாத பிரதிவாதங்கள் நடந்தன. இன்றும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. லாலனின் விமர்சன அம்புகள் எந்த மதத்தையும் விட்டுவைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ''லாலன் எந்த மதம், அவர்கள் கேட்கிறார்கள்'' என்று லாலனே பாடியிருந்தாலும் தனது மதம் எதுவென்று சொன்னதேயில்லை. அவர் யார்? இந்துவா, சாக்தனா, வைணவனா, முசுலீமா, சூஃபியா? சிராஜ் செயின் என்ற முசுலீம் குருவின் வீட்டில் சாப்பிட்டு வந்ததால் லாலனை சாதி இந்துக்கள் சேர்க்கவில்லை, தீண்டவில்லை. ஆச்சார முசுலீம்களோ அவர் இசுலாமிய முறைப்படி வாழாததால் காஃபிர் (நாத்திகர்) என்றே அழைத்தனர். இறுதிப் பயணம் ஒருவரின் அடையாளத்தைச் சொல்லிவிடும் என்பார்கள். அவரது இறுதிப் பயணத்தில் எந்த ஒரு இசுலாமிய மவுல்வியும் கலந்து கொள்ளவில்லை; புறக்கணித்தார்கள். அவரது மகன் சோட்டா லாலன் (சின்ன லாலன்) அவருக்கு எந்தச் சடங்கையும் செய்யவில்லை.

உருவ வழிபாட்டை அவர் ஏற்கவில்லை; மூடநம்பிக்கைகள், சடங்குகள், குறி சொல்லுதல் போன்றவற்றை வெறுத்தார். அவரது புகழ்பெற்ற தொடர்: ''மனிதனைக் காட்டிலும் மேலானவர் எவரும் இல்லை'' (சபர் ஊபரே மனுஷ் சத்யா, தஹர் ஊபரே நை).

அவரது பாஉல் சங்கத்தைப் பற்றிச் சொல்பவர்கள் அவ்வழியானது ''தன்னறிவுத்தேட்டம்'' என்கிறார்கள். அரபியில் 'பா' என்றால் சுயம், தான் என்றும், பெர்சிய மொழியில் 'உல்' என்றால் அறிவுத் தேட்டம் என்றும் பொருள்படும். அவரது கருத்துகளில் சொர்க்கம் பற்றிய வெறியோ, நரகம் பற்றிய பயங்கரமோ இரண்டுமே கிடையாது.

லாலன் வாழ்ந்த காலத்தில் இந்திய சமூகத்தில் மக்கள் உள்ளூரக் குமுறிக் கொண்டிருந்தார்கள் - எரிமலை போல. பிறந்த மண்ணும், தொட்டிலுமான இயற்கையோடு வாழ்ந்த பல ஆயிரம் பழங்குடிகள் சுரண்டலுக்கு எதிராக, அடக்குமுறைக்கு எதிராகச் சீற்றத்தோடு இருந்தார்கள். பிரிட்டாஷாரின் உள்ளூர் ஏஜெண்டுகளான ஜமீன்தார்களுக்கு எதிராக அடக்கப்பட்டுக்கிடந்த பல இலட்சம் விவசாயிகள் குமுறிக் கொண்டிருந்தார்கள். பீகார் சந்தால் எழுச்சி, அவுரி

தொடர்ச்சி 27 ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 17
• குரல்: 4
• செப்டம்பர் '99

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# சிதம்பரம் தொகுதி: போலி ஜனநாயகமும் சாதி ஆதிக்கமும்

தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் - வன்னிய மக்களுக்கும் இடையில் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருந்த முரண்பாடு, நடந்து முடிந்த முதல்கட்ட நாடாளுமன்றத் தேர்தல்களின்போது, பெரும் சாதிச் சண்டையாக வெடித்துச் சிதறியிருக்கிறது. குறிப்பாக, ஆதிதிராவிடரைத் திரட்டும் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவனும், அதன் கடும் எதிரியாகக் கருதப்படும் வன்னிய சாதி பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக இன்னொரு ஆதிதிராவிடப் பிரமுகரும் போட்டியிடும் சிதம்பரம் தொகுதியில் பலரும் எதிர்ப்பார்த்தபடியே சாதிச் சண்டை கொழுந்து விட்டு எரிகிறது. அது இவ்விரு சாதி மக்களையும் எதிரும் புதிருமாக நிறுத்தி அரசியல் ஆதாயம் அடையும் நிலமையுள்ள கடலூர் தொகுதிக்கும் பரவியிருக்கிறது; அருகிலுள்ள திண்டிவனம் தொகுதியிலும் எதிரொலித்திருக்கிறது.

எதிர்த் தரப்பு ஆதரவு அதிகமுள்ள வாக்குச் சாவடிகளுக்கு எல்லாம் தனது கட்சி சமூகவிரோத கிரிமினல் குண்டர்களை ஏவி, வாக்காளர்களை அடித்து விரட்டுவதும், கள்ளவோட்டுப் போடுவதும் தேர்தல் அரசியலுக்குப் பழகிப்போன நடைமுறையாகி விட்டது. இவ்வாறோ, இருதரப்புமோ சமஅளவு ஆயுத-ஆள்-பண பலம் திரட்டி, தனியொரு ஆதிக்கம் முடியாமல் போகும்போதோ தேர்தல்கள் அமைதியாக நடந்ததாகவும் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டு விட்டதாகவும் அதிகாரிகள் அறிவிக்கிறார்கள். இத்தகைய சமூக விரோத கிரிமனல் குண்டர் ஆதிக்க அரசியலை எதிர்த்து எங்கெல்லாம் வாக்காளர்களும் எதிரணியினரும் திரண்டு "ஓட்டுப் போட்டே தீருவோம்!" என்று துணிந்து நிற்கிறார்களோ அங்கெல்லாம் தேர்தல்களில் வன்முறை - கலவரங்கள் வெடிக்கிறது, இதுதான் சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியிலும் நடந்திருக்கிறது. அந்தத் தொகுதி தாழ்த்தப்பட்ட சாதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது; போட்டியிடுபவர்கள் அனைவருமே ஒரே சாதியினர்தாம். இருந்தபோதும் விடுதலைச் சிறுத்தைகளின் அமைப்பு, அதுவும் அதன் தலைவர் திருமாவளவன் வெற்றி பெற்றுவிடக் கூடாது என்பதில் பா.ம.க.வும் அதன் தலைவர், பிரமுகர்கள் குறியாக இருக்கின்றனர்; இதற்காகவே, அக்கட்சியின் பெரம்பலூர் மாவட்ட தலைவர் காடுவெட்டி குரு என்கிற "வன்னியத் தளபதி" சிதம்பரம் தொகுதிப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்தலுக்கு முதல் நாள் இரவே தொகுதி பா.ம.க. பொறுப்பாளர் தலைமையில் பயங்கர ஆயுதங்களுடன் தொண்டர் குழுக்கள் வலம் வந்திருக்கின்றன. அப்போது மடக்கப்பட்ட பா.ம.க. பிரமுகரின் காரிலிருந்து வெடிகுண்டு உட்பட ஆயுதங்களைப் போலீசு கைப்பற்றியிருக்கிறது. மறுநாள் வாக்குப் பதிவின்போது தாழ்த்தப்பட்ட மக்கள் ஓட்டுப் போட விடாமல் துரத்தியடிக்கப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து பல தேர்தல்களிலும் ஓட்டு போடுவதற்கு தாழ்த்தப்பட்ட மக்கள் இங்கு அனுமதிக்கப்பட்டதில்லை. இந்த முறையும் அவ்வாறு அவர்கள் அடிபணிந்து போக மறுத்தபோதுதான் "சாதிச் சண்டை" வெடித்திருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் அடங்கிப் போக மறுக்கிறார்கள் என்பதற்காகவே பல கிராமங்களில் பா.ம.க.வினரால் வெட்டியும், வீடுகளுக்குத் தீ வைத்துக் கொளுத்தியும் விரட்டப்பட்டனர். இதை எதிர்க்கும் முகமாக திருப்பித் தாக்குவது, தீயிடுவதில் விடுதலைச் சிறுத்தைகளும் ஈடுபட்டனர். இருந்தாலும் வன்னியர்களின் வன்முறைத் தாக்குதலுக்கு இலக்காகி அகதிகளைப் போல காலனிகளை விட்டு ஓடி அண்டை கிராமங்களில் தஞ்சம் புகுவதும், சாலைகளில் அலைவதும் தாழ்த்தப்பட்ட மக்கள்தாம். போலீசிடம் முறையிடுவதும் நியாயமும் பாதுகாப்பும் கேட்டு சாலை மறியலில் ஈடுபடுவதும் தாழ்த்தப்பட்ட மக்கள்தாம். இப்படித் திரண்ட தாழ்த்தப்பட்ட மக்களைக் கலைந்து போகும்படி விரட்டும் போலீசு தடியடி, கண்ணீர் குண்டு வீச்சு, வானை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்துகிறது.

ஆனால், பா.ம.க. வன்னியர் எவரும் இப்படித் துரத்தப்பட்டு ஆதரவு தேடி அலைவதாக தெரியவில்லை. ஆயுதங்களுடன் அலைந்த போதும், தீயிடும் போதும் கைது செய்யப்பட்ட வன்னியரை விடுதலை செய்ய வேண்டுமென நிர்பந்தித்து, போலீசு நிலையத்தை முற்றுகையிட்டுக் கல்வீச்சு, மறியல் செய்கின்றனர். அப்படித் திரண்டவர்களைக் கலைக்கவே தடியடி, கண்ணீர்ப் புகைக் குண்டுவீச்சு, வானை

படிப்பகம்

www.padippakam.com

தலையங்கம் தொடர்ச்சி

நோக்கி துப்பாக்கி சூடும் நடந்திருக்கிறது. ஏற்கனவே வெடிக்கக் காத்திருந்த சாதிப் பகை, முரண்பாடு தேர்தலை ஒரு வாய்ப்பாக வைத்து வெடித்திருக்கிறது. இந்து மதவெறி பாசிச கும்பலுடன் அணி சேர்ந்துள்ள கருணாநிதியும் இராமதாசும் மீண்டும் ஒரு முறை சாதி ஆதிக்கத்துக்கு வக்காலத்து வாங்கி தாழ்த்தப்பட்ட மக்களின் மீது பழிபோடுகின்றனர். விடுதலைச் சிறுத்தைகள், குடியரசுக் கட்சி, புதிய தமிழகத்துடன் அணிசேர்ந்துள்ள தமிழ் மாநில காங்கிரசு மூப்பனார், சிதம்பரம் தொகுதி சம்பவங்களுக்கு வெறும் கண் துடைப்புக் கண்டனம் தெரிவித்துள்ளார். தலித் மக்களை வெறும் ஓட்டு வங்கியாகப் பயன்படுத்திக் கொள்வதைத் தவிர இவர்களை திருமாவளவன் - கிருஷ்ணசாமி கூறுவதைப் போல தலித் மக்களை ஒன்று திரட்டித் தலைமையேற்பதெல்லாம் வெட்டிப் பேச்சுதான் என்பதை மூப்பனார் நெல்லைப் படுகொலை சம்பவத்துக்குப் பிறகு மீண்டும் ஒரு முறை காட்டிவிட்டார். இவையெல்லாம் வியப்பக்குரியதில்லை. சிதம்பரம் சம்பவத்தைக் கண்டும் காணாமல் வேறுபக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு போகிறாரே, கிருஷ்ணசாமி அதை என்ன சொல்வது?

கிருஷ்ணசாமியோ, திருமாவளவனே தலித் மக்களைத் திரட்டுவதற்கும் அரசு அடக்குமுறையில் இருந்து மீட்பதற்கும், அதிகாரத்தில் பங்கு பெறுவதற்குத்தான் நாடாளுமன்றப் பங்களிப்பு என்றார்கள். இவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்தாலும் குட்டி முதலாளித் தலைவர்களாக உயர்ந்து விட்டதால் சீர்திருத்த மாயையில் சிக்கிக் கொண்டதன் விளைவு இது. இதற்கு மாறாக பிறப்பால் தலித்தாக இருந்தும் புரட்சியாளராய் மாறிவிட்ட தோழர் கத்தார் கூறுகிறார், ''நீயும் நானும் சுதந்திரமாக ஓட்டுப் போட முடியுமமா? நாம் வாக்குச் சாவடியை அடைவதற்கு முன்பாகவே நமது ஓட்டுகளை வேறொருவன் போட்டு விடுகிறான். இது ஒரு போலித் தேர்தல் என்பதை தவிர வேறென்ன? நான் பிரபலமானவன்தான். ஆனால் எனக்கு ஓட்டுப் போட யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.'' இனியெல்லாம் அனுபவத்தில் உணர்ந்தால்தான் பீகார் - ஆந்திரத் தலித் மக்களில் பெரும்பான்மையினர், நாடாளுமன்றத்தைப் புறக்கணித்து, புரட்சிப் பாதையில் திரளுவதே தமக்கு அதிகாரத்தையும் விடுதலையையும் தரும் என்று நம்புகின்றனர்.

## மாஞ்சோலை:

# தேர்தலுக்குப் பயன்படாத பிணங்கள்!

பிணங்கள், அதுவும் தேர்தல் நேரத்தில் விழும் பிணங்கள் சர்வவல்லமை வாய்ந்தவை. ராஜீவின் பிணம் ஜெயலலிதாவுக்கு தமிழகத்தைத் தந்தது; இந்திராவின் பிணம் ராஜீவுக்கு பிரமதர் பதவியைத் தந்தது; கோவை குண்டு வெடிப்பின் பிணங்கள் பாரதிய ஜனதாவுக்கு வாழ்வையும் ஜெயலலிதாவுக்கு மறு வாழ்வையும் தந்தன.

பிணத்தை வைத்து அரசியல் நடத்துவதில் வல்லமை பெற்ற தி.மு.க., காங்கிரசு ஆட்சியில் குண்டடி பட்டுச் செத்த வால்பாறைத் தோட்டத் தொழிலாளி ஒருவரை காட்டி ''கூலி உயர்வு கேட்டான் அத்தான், குண்டடி பட்டுச் செத்தான்'' என்று முழக்கம் வடித்து ஆட்சியையும் பிடித்தது.

மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர் போராட்டத்தில் கொல்லப்பட்ட 17 பேரின் உடல்களைத்தான் யாரும் அரசியலாக்க மறுக்கிறார்கள். தீண்டவே மறுக்கிறார்கள். இது ஏன் அரசியலாக்கப் படவில்லை?

''17 பேர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இத்தனை பேர் போலீசால் கொலை செய்யப்படுவது சமீப காலத்தில் நடந்ததே இல்லை. எனினும் திருநெல்வேலிப் படுகொலையைப் பற்றி அனைத்திந்தியப் பத்திரிகைகள் எதுவுமே எழுதவில்லை. ஒருவரது ஆடு செத்துப் போனால் கூட அதில் மனித உரிமை பாதிக்கப்பட்டு விட்டதாக விசாரணை நடக்கும் காலம் இது. 17 பேர் கொலை செய்யப்பட்டிருக்கும் போது மனித உரிமைக் கமிசன் தானே வந்து தலையிட்டிருக்க வேண்டும். தலையிடவில்லை'' என்றெல்லாம் புலம்பினார் ப. சிதம்பரம்.

கொலை செய்யப்பட்டவர்களில் த.மா.கா. தொண்டர்களும் அடக்கம். தன் சொந்தக் கட்சித் தொண்டரின் கொலையைக் கூட த.மா.கா. அரசியலாக்காதது ஏன்?

அமைதியாக ஊர்வலம் சென்ற நிராயுத பாணியான மக்கள் மீதும் பெண்கள் மீதும் காவல்துறை எப்படி வெறி கொண்டு தாக்குதல் நடத்தியது என்பதை விவரமாக எழுதியிருக்கிறது மார்க்சிஸ்டு கட்சியின் நாளேடான தீக்கதிர். எங்குமில்லாத வகையில் போலீசார் கல் வீச்சில் ஈடுபட்டதையும், தங்களது மாவட்டச் செயலாளர் பழனியை போலீசார் குறிவைத்து தாக்கியதையும் கோபம் கொப்புளிக்க எழுதியிருக்கிறது.

தேயிலைத் தோட்ட முதலாளிகளான பன்னாட்டு நிறுவனங்களையும், அவர்களது அடியாட்படையாக செயல்படும் போலீசையும், தொழிலாளி வர்க்க விரோத தி.மு.க. அரசையும் அம்பலப்படுத்த இதுவோர் பொன்னான வாய்ப்பல்லவா?

மதவாத பா.ஜ.க.-வுடன் கூட்டு வைத்தது மட்டுமல்ல, பா.ஜ.க.-வை ஆதரிக்கும் பணமூட்டைகளான பெருமுதலாளிகளுடனும் தி.மு.க. கள்ளக் கூட்டு வைத்திருக்கிறது என்பதை திரைகிழித்திருக்கலாமல்லவா?

சாக்கடைக்குத் தூர் வாரவில்லை, தெரு விளக்கு எரியவில்லை என்பதையெல்லாம் சொல்லி ஓட்டுக் கேட்பதைக் காட்டிலும் இது வலிமையான ஆயுதமல்லலவா? இந்த அரசியல் ஆயுதத்தை மார்க்சிஸ்டு கட்சி ஏன் பயன்படுத்தவில்லை?

எங்கள் பெண் போலீசிடம் தகாத முறையில் நடக்க முயன்றதால்தான் தாக்குதல் நடத்த நேர்ந்தது என்ற போலீசின் புளுகு மூட்டையை தீக்கதிர் அம்பலப்படுத்தியிருக்கிறது. மேலும் பெண்களிடம் போலீசு எப்படி நடந்து கொள்கிறது என்பதைப் பற்றி வாச்சாத்தி, அண்ணாமலை நகர் வழக்குகுளை நடத்தி வரும் மார்க்சிஸ்டுகளுக்கு ஆதாரபூர்வமாகத் தெரியும்.

அவற்றையெல்லாம் எடுத்துப் போட்டு ''ஒரு பெண் போலீசிடம் தவறாக நடக்க முயன்றதற்கு 17 பேரைக் கொல்லலாம் என்றால், பெண்களை பலாத்காரம் செய்வதை தம் உரிமையாகக் கருதும் போலீசாரையெல்லாம் சுட்டுத் தள்ளத் தயாரா'' என்று சுவரொட்டி போட்டு தாய்க்குலத்தின் வாக்குகளை



படிப்பகம்

www.padippakam.com

அள்ளியிருக்கலாமே! ஏன் செய்ய வில்லை?

மாஞ்சோலைத் தொழிலாளர்களை ஆதரித்து தர்ணா நடப்பதற்கு முன்னால் அவர்களை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள் மருத்துவர்கள். அடித்து எலும்பை முறித்து ஆற்றில் விரட்டிக் கொல்லப்பட்டவர்களைத் "தண்ணீரில் மூழ்கி இறந்ததாக" பிரேதப் பரிசோதனை அறிக்கை பொய்யாகத் தரப்பட்டுள்ளது. பொய் அறிக்கையும் கொடுத்து விட்டு அதைக் கேள்வி கேட்டால் நாங்கள் வேலை நிறுத்தம் செய்வோம் என்று தொழிலாளி வர்க்கத்தையே மிரட்டுகிறார்கள் மருத்துவர்கள். கேட்க நாதியில்லை.

பி.எச். பாண்டியன் மாவட்ட ஆட்சியரைத் திட்டிவிட்டாரென்று பாண்டியனை கண்டித்து வேலை நிறுத்தம் செய்கிறார்கள் தூத்துக்குடி அரசு ஊழியர்கள்; தாமரைக்கனியை ஜெயலலிதா திட்டி விட்டார் என்று குமுறி எழுகிறது நாடார் சமூகம்; சசிகலா மீது ஊழல் வழக்கு போட்டதை எதிர்த்து சுவரொட்டி ஒட்டுகின்றன தேவர் அமைப்புகள்.

அரசுக்குக் காவடி எடுக்கும் அரசு மருத்துவர்களை, ஊழல் மருத்துவர்களை எதிர்த்து ஒரு சுவரொட்டி கூட ஒட்டப்படாதது ஏன்?

கொலை செய்யப்பட்டவர்கள் பல சாதி மதங்களைச் சார்ந்தவர்கள். இருந்தும் முதலாளி வர்க்கத்துக்கெதிரான இந்தத் தொழிலாளிகளின் போராட்டத்தை, திசை திருப்பி, சாதிப் பிரச்சினை என்று அரசியலாக்கினார் கருணாநிதி.

"மாவட்ட ஆட்சியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கிருஷ்ணசாமி கோரியவுடன் பிற்படுத்தப்பட்டவர்கள் கொதித்தெழுவார்கள் என்று அதையும் சாதி அரசியலாக்கினார் கருணாநிதி.

ஆனால் இறந்தவர்களின் உடல்களை அடாவடியாகக் கொண்டு சென்ற காவல்துறை, அந்தந்த உடலை அவரவர்க்கு உரிய சாதிச் சுடுகாட்டில்தான் அடக்கம் செய்தது. சமத்துவபுரம் கண்ட செம்மலின் அரசே முன்னின்று செய்த இந்த தீண்டாமைக் கொடுமை அரசியலாக்கப் படாதது ஏன்?

இறந்தவர்களின் உடல்களை ஒரே இடத்தில் அடக்கம் செய்ய விடுக்கப்பட்ட கோரிக்கையை அரசு நிராகரித்தது. இறந்தவர்களை ஓரிடத்தில் புதைத்து / எரித்து நினைவுச் சின்னம் வைப்பதைக் கூடத் தடுப்பதற்கு அரசுக்கு ஏது அதிகாரம்? ராஜாஜிக்கும், பக்தவச்சலத்துக்கும் நகரின் மத்தியில் ஏக்கர் கணக்கில் நிலம் வளைத்து மணிமண்டபம் கட்டும் அரசு, தொழிலாளிகளுக்காக உயர்நீத்தவர்களை அநாதைப் பிணங்களாக்குகிறதே, இந்தக் கொடுமை கூட அரசியலாக்கப்படாதது ஏன்?

திருநெல்வேலிப் படுகொலையை விசாரிக்கும் ஒரு நபர் கமிசனின் ஓய்வு பெற்ற உச்சநீதி மன்ற நீதிபதி மோகன், தான் யாரென்பதை வாக்குமூலமாகவே தந்திருக்கிறார்:

"தமிழகத்தில் தன்னிகரற்ற தானைத் தலைவரே... இங்கிருக்கும் மூன்று நீதியரசர்களின் சார்பிலும் சொல்கிறேன்; நாங்கள் உயர்நீதி மன்றங்களை அலங்கரித்தோமென்றால் அது கலைஞரால்தான். அவர் இல்லையேல் நாங்கள் நீதிபதிகளாகவே ஆகியிருக்க மாட்டோம். இதை நான் எனது ஒப்புதல் வாக்குமூலமாகவே கூறுகிறேன்" (கலைஞரின் பிறந்தநாள் விழாவில் - துக்ளக் 16.6.99)

கமிசன் தீர்ப்பு எப்படி இருக்குமென்பதற்கு இதற்கு மேல் விளக்கம் தேவையில்லை. ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்ற நீதிபதிகள் ஒரு வார்த்தை அதிகம் பேசினால் "இவரிடம் எனக்கு நீதி கிடைக்காது" என்று கூறி 'அரசியலாக்குகிறார்' ஜெயலலிதா.

இந்த நீதிபதியின் நியமனத்தை, இந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் கேள்விக் குள்ளாக்காதது ஏன்?

அனைத்திந்திய அளவில் தோட்டத் தொழிலாளர்களின் கொத்தடிமை நிலை பற்றியும், தொழிலாளர் நலச் சட்டங்கள் அமல்படுத்தப்படாதது பற்றியும் ஏ.ஐ. டி.யு.சி. உள்ளிட்ட சங்கங்கள் ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளன. தமிழகத்தின் தேயிலைத் தோட்டங்களில் கொத்தடிமைத்தனம் இல்லையென்று சாதிக்கிறார் கருணாநிதி.

எடுத்துச் சொல்லலாமே, எத்தனை தலைமுறைகளாக தோட்டத் தொழிலாளிகள் மலைகளில் சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை; இருபதாண்டு பணி செய்தும் தற்காலிகக் கூலியாக இருக்கும் கொடுமையை; உறைய வைக்கும் குளிரில், அவர்கள் போர்த்தக் கம்பளியின்றித் தேயிலை பறிக்கும் துயரை; தகரக் கொட்டகையும் மண் தரையும் தான் அவர்களின் குடியிருப்பு என்பதை; வேலை நேரத்தில் மாதவிடாய்த் தொல்லைக்காக ஒதுங்க நேர்ந்தால் ஒதுங்கியது அதற்காகத்தான் என்று மேஸ்திரிக்கு ஆதாரம் காட்ட வேண்டும் என்ற அக்கிரமத்தை!

தொழிலாளிகளை நாயினும் கீழாக நடத்தும் இந்தச் செய்திகள் தமிழகத்



ராஜீவின் சிதைந்த உடலைச் சுவரொட்டியாக்கிப் பிரச்சாரம் செய்து வென்றார்களே, ரத்தம் சொட்டும் இந்த 17 உடல்களை சுவரொட்டியாக்கியிருக்க முடியாதா? சிறையில் இருக்கும் கணவனை விடுவிக்கக் கோரி மனுக் கொடுக்க வந்த மனைவி, குழந்தையை ஒருசேரக் கொன்றிருக்கிறார்களே, அந்த ஒரு சம்பவத்தை மட்டுமே அரசியலாக்கியிருக்கக் கூடாதா?



படிப்பகம்

www.padippakam.com



தொழிலாளிகளை எழுச்சி கொள்ள வைக்காதா? இவையெதுவும் அரசியலாக்கப் படாதது ஏன்?

**மா**ஞ்சோலையின் 8500 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தை அரசாங்கம் ஏக்கருக்கு ஆண்டுக்கு 10 ரூபாய்க்கு குத்தகைக்கு விட்டிருப்பதையும் ஆண்டுக்கு 350 கோடி வருவாய் ஈட்டும் மாஞ்சோலைத் தோட்டம் தொழிலாளிகளுக்குக் கொடுக்கும் கூலியும், போனசும் ஆண்டுக்கு 5 கோடிதான் என்பதையும், அரசியலாக்க முடியாதா?

**கு**த்தகைக்கு விடப்பட்ட தோட்டங்களை அரசு எடுத்துக் கொண்டால் தமிழக அரசுக்கு ஆண்டுக்குப் பல நூறு கோடி வருவாய் கிடைக்கும் என்பதையும், அதைக் கோரியதற்குத்தான் துப்பாக்கிச் சூடு என்பதையும் அரசியலாக்க முடியாதா?

**ரா**ஜீவின் சிதைந்த உடலைச் சுவரொட்டியாக்கிப் பிரச்சாரம் செய்து வென்றார்களே, ரத்தம் சொட்டும் இந்த 17 உடல்களை சுவரொட்டியாக்கியிருக்க முடியாதா?

**சி**றையில் இருக்கும் தன் கணவனை விடுவிக்கக் கோரி மனுக் கொடுக்க ஊர்வலத்தில் வந்த மனைவியையும், குழந்தையையும் ஒரு சேரக் கொன்றிருக்கிறார்களே, அந்த ஒரு சம்பவத்தை மட்டுமே அரசியலாக்கியிருக்கக் கூடாதா?

● ● ●

**த**மது தேர்தல் அரசியலின் உடனடி நலனுக்காகக் கூட இந்த உடல்களைத் தீண்டுவதற்கு ஓட்டுக் கட்சிகள் தயாரில்லை. கூட்டணி மோதல்கள், கூட்டணிக்குள் தொகுதிப் பங்கீட்டுத் தகராறுகள் என இவர்களுக்குள் ஆயிரம் முரண்பாடுகள் இருந்தாலும் இந்த விசயத்தில் மட்டும் ஒற்றுமை காட்டுகிறார்கள். மற்ற அற்ப விசயங்களில் ஒருவரையொருவர் அநாகரிகமாகத் தாக்கிக் கொண்டாலும் இதில் நாகரிகமாக மவுனம் சாதிக்கிறார்கள்.

ஏனென்றால் இவற்றை அரசியலாக்கினால் அவர்களே அரசியலில் நீடிக்க முடியாது. எழுப்புகின்ற பிரச்சினை ஒவ்வொன்றும் இந்த அமைப்பு முறையை கேள்விக்குள்ளாக்குவதை நோக்கித் தள்ளும்.

போலீசையும் நீதித்துறையையும் தங்கள் போராட்டத்தின் தாக்குதல் இலக்காக வைத்தால் ஆட்சியில் அமர்வது என்ற தம் இலக்கையே அவர்கள் மறக்க நேரும். தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற கொள்கையை ஒருமனதாக ஏற்றுக் கொண்டுள்ள இவர்கள், — விசேடமாக மார்க்சிஸ்டுகள் - பன்னாட்டு நிறுவனங்களின் குத்தகைய ரத்து செய்வதைப் பற்றியோ அரசுடைமை ஆக்குவதைப் பற்றியோ கனவிலும் எண்ணிப் பார்க்க முடியாது.

கொல்லப்பட்ட தொழிலாளிகளின் நினைவைக் கிளறும் வகையிலான பிரச்சாரங்களோ, ஒரே இடத்தில் அடக்கம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையோ தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் பெரும் உணர்ச்சி அலையை எழுப்பும். குறிப்பாக பலஇலட்சம் தொழிலாளர்களைக் கொண்ட தேயிலைத் தோட்டத் தொழிலை கையில் வைத்திருக்கும் தரகு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களை பகைத்துக் கொள்ள வேண்டியிருக்கும். இது எதிர்க் கட்சிகளின் நோக்கத்துக்கே எதிரானது.

ஏன், ஏன் என்ற இத்தகைய கேள்விகளை எழுப்பி அவற்றுக்கு தம் சொந்த அனுபவத்திலிருந்து விடை காண்பதன் வாயிலாகத்தான் தொழிலாளிவர்க்கம் அரசியல் உணர்வைப் பெறும். அரசியல் உணர்வு பெற்ற தொழிலாளி வர்க்கத்துக்கெதிராக மருத்துவர் சங்கச் செயலாளரைப் போன்ற பங்களா நாய்கள் குரைத்திருக்க முடியாது.

மூன்று புறமும் சுற்றி வளைத்துத் தாக்கப்பட்டதால் திருநெல்வேலி படுகொலை ஜாலியன் வாலாபாகிற்கு ஒப்பிடப்பட்டது. ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வை நசுக்கியொழிக்கும் நோக்கத்துடன் திட்டமிட்டே குரூரமாக நடத்தப் பட்டதுதான் ஜாலியன் வாலாபாக் படுகொலை; திருநெல்வேலிப் படுகொலையின் நோக்கமோ தொழிலாளி வர்க்க எதிர்ப்பை நசுக்குவது.

ஜாலியன் வாலாபாக் படுகொலை விவகாரத்தை அரசியலற்றதாக்கினார் காந்தி. அதற்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிப் போராட்ட உள்ளடக்கத்தை அளித்தான் பகத்சிங். தொழிலாளி வர்க்கத்தால் அரசியலாக்கப்படுவதற்காகத் திருநெல்வேலியில் கொன்று புதைக்கப்பட்ட உடல்கள் பூமிக்கடியில் காத்திருக்கின்றன.

• மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

ஒரு இராணுவ ஒத்திகையைப் போல் ஆயத்தங்கள் நடக்கின்றன. ஆசிரியர் விசில் ஊதுகிறார். போர்க்கால வேகத்தில் மாணவர்கள் இயங்குகிறார்கள். கதவு, சன்னல்களை சடுதியில் மூடி, அதன் பின்னால் நாற்காலி, மேசை இதர பொருட்களை குவியலாக அடுக்குகிறார்கள். இறுதியில் அந்தக் குவியலின் உள்ளே ஊர்ந்து சென்று பதுங்குகிறார்கள். நேரம் 30 விநாடியைக் கடக்கிறது. ஆசிரியர் திருப்தி அடையவில்லை. 20 விநாடி இலக்கை அடையும்வரை ஒத்திகை தொடருகிறது.

எதற்காக இந்தப் பயிற்சி? கொலம்பைன் பள்ளிப் படுகொலைக்குப் பிறகு, அத்தகைய திடீர்க் கொலைகாரர்களிடமிருந்து தப்பிப்பதற்கு, அமெரிக்கப் பள்ளிகளில் அன்றாடம் நடத்தப்படும் இந்த வகுப்பின் பெயர் 'சிவப்புப் பயிற்சி' (ரெட் டிரில்). பள்ளியிலோ, வீதியிலோ, வீட்டிலோ, அலுவலகத்திலோ தொடருகின்ற வன்முறைச் சம்பவங்கள் அங்கே அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன.

இத்தனைச் சம்பவங்களுக்குப் பிறகும், சில மாநிலங்கள் மட்டும், கைத்துப்பாக்கியை மட்டும் தடை செய்வது போன்ற பெயரளவு தடைகளை அமலாக்க முயல்கின்றன. அதையும் கூட அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது என 'தேசிய துப்பாக்கிச் சங்கம்' நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது, சந்தேகமில்லாமல் வெற்றியும் பெறும்.

இந்த லாவணிக்கு மத்தியில், 'காந்திய வழியிலான திட்டம்' ஒன்றையும் போலீசு அறிவித்திருக்கிறது. அதன்படி முறையாகவோ, கள்ளத்தனமாகவோ துப்பாக்கி வைத்திருப்பவர்கள் அதை போலீசிடம் ஒப்படைத்தால் ரூ. 5000 பரிசாகத் தரப்படும். சட்ட நடவடிக்கைகளும் கிடயாது. போதைப் பொருள் வியாபாரம் செய்பவர்களிடம் கைப்பற்றிய, பணத்தை இதற்கென செலவழிக்கிறார்களாம். அபாரமான யோசனை! அதன்படி இரண்டு திருட்டுத்தனங்களும் ஒழியப் போவதில்லை.

அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் அதிபர் தேர்தலையொட்டி இப்பிரச்சினை பெயரளவில்தான் என்றாலும் ஆரவாரமாக விவாதிக்கப்படுகிறது. இடையில் கிளிண்டன் நிர்வாகம் பள்ளிகளின் பாதுகாப்புக்கென ரூ. 75 கோடியை ஒதுக்கியிருக்கிறது. அதன்படி பள்ளிப் பாதுகாப்பு பற்றிய ஆய்வுகள், மெட்டல் டிடெக்டர்கள், கண்காணிப்புக் கேமராக்கள், போதை பொருள் சோதிப்புக் கருவிகள், வன்முறை கருக்

## தொடர்கிறது: அமெரிக்க வன்முறை



கொள்ளும் மாணவர்களை இனம் காணுதல் ஆகியவை அமெரிக்கப் பள்ளிகளில் மேற்கொள்ளப்படுமாம்!

80-களுக்குப் பிறகு பெருகி வரும் வன்முறைச் சம்பவங்களின் துணை விளைவாக 'பாதுகாப்புத் தொழிலும்' கொடிகட்டிப் பறக்கிறது. கொலைகாரர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்வது பற்றிய புத்தகங்கள், பயிற்சி பெற்ற நாய்கள், வீட்டு பாதுகாப்புக் கருவிகள், தனியார் பாதுகாப்பு கமெண்டோக்கள் என்று பட்டியல் நீளுகிறது. அடுத்த நூற்றாண்டில் அமெரிக்காவின் கொழுத்த லாபம் தரும் தொழில் இதுதான் என்கிறார் ஒரு பாதுகாப்பு வல்லுநர். துப்பாக்கியை விற்பதிலும் இலாபம்; அதன் வன்முறைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதிலும் இலாபம். முதலாளித்துவத்தின் அழுகி நாறும் ஆன்மா இப்படித்தான் இருக்கும்.

கொலம்பைன் பள்ளி கொலைகார மாணவர்கள், சுடுவதற்கு முன் கேஸி பெர்ணஸ் எனும் மாணவனிடம் கேட்ட கேள்வி, ''நீ கடவுளை நம்புகிறாயா?'' ''கடவுள் ஒருவர் உண்டு; நீயும் அவர் வழியில்தான் செல்ல வேண்டும்'' என்று பதிலளித்த கேஸி கொல்லப்படுகிறான். இன்று அவன் கிறித்தவத் தியாகியாகவும் - ஹீரோவாகவும் போற்றப்படுகிறான். ஞாயிற்றுக்கிழமை கூட கூட்டம் வராத காரணத்தினால் விற்கப்பட்ட, வாடகைக்கு விடப்பட்ட தேவாலயங்கள் அங்கே உண்டு. இன்று தூசிதட்டி, வர்ணம் பூசி கிறித்தவ மதம் தூக்கி நிறுத்தப்படுகிறது. தியாகம் செய்தால் சொர்க்கம் போகலாம் என்று, கேஸியை வைத்து பாதிரியார்கள் அறுவடை செய்கின்றனர். சிறிது காலம் இந்தக் கூத்துக்கள் தொடரலாம்.



பங்கு சந்தையில் பணமிழந்து கொலை-காரனாய் மாறிய மார்க் பர்ட்டன்

ஏற்கனவே அமெரிக்காவில்தான் மூடநம்பிக்கை உள்ளிட்ட கடுங்கோட்பாட்டு மத - வழிபாட்டுப் பிரிவுகள் ஏராளமிருக்கின்றன. வன்முறையை விட்டு அகல மதமெனும் மாயமானை நோக்கி ஓடும் மக்களையும் அவலம் விட்டகலவில்லை.

இன்றும், இன்டர்நெட் போன்ற நவீன வசதிகளுடன் அங்கே செயல்படும் ஒரு மதப்பிரிவின் பெயர் 'சொர்க்க வாசல்'. 97-ஆம் ஆண்டு, ''ஸ்டார் வரிசைப் படங்களைத் தொடர்ந்து பார்த்தோம். அதைச் செயலாக்கும் வண்ணம் இந்த விண்வெளிப் பயணத்தில் அனைவரும் கலந்து கொள்ளுங்கள், விரைவில் உலகம் அழியும்'' என்று வீடியோ கேசட்டில் தெரிவித்துவிட்டு, இக்குழுவைச் சேர்ந்த 38 பேர் தற்கொலை செய்து கொண்டனர். சொர்க்கம் போனர்களா என்பது தெரியவில்லை. இம்மதத்தில் உயர்பதவி - அலுவல்களில் இருப்பவர்களே அதிகம் இருக்கின்றனர். ஆக, மாணவர்களிடம் உருவாக்கப்படும் கிறித்தவ எழுச்சியிலும் அபாயம் மறைந்து விடவில்லை.

சமீபத்திய அமெரிக்க வன்முறை: 44 வயதான மார்க் பர்ட்டன், ஒரு பங்குச் சந்தை தரகன். அட்லாண்ட்டா நகரின் நிதித் தொழில் பகுதியில் வேலை பார்த்து வந்தவன். நமக்குப் புரியாத பங்குச் சந்தை குறியீட்டு எண்களை வெறித்துப் பார்த்து ஆய்வு செய்யும் அவனது நோக்கம், பங்குச் சந்தை சூதாட்டத்தில் மிகப்பெரும் பணத்தைச் சம்பாதிப்பது.

என்ன செய்வது? சூதாட்டத்தில் அபரிமிதமான வருமானமிருப்பதைப் போலவே, பேரிடியாக வரும் நட்டமும் உண்டே. அத்தகைய இழப்பைச் சமீபத்தில் சந்தித்த மார்க் கடந்த சூலை 30-ஆம் தேதியன்று அந்த வட்டாரத்தில் கண்ணில் பட்டவர்களைச் சுட்டான். அவனது மனைவி இரு குழந்தைகள் உட்பட 12 பேர் தோட்டாக்களினால் மரித்தார்கள். பின்னர் வெகுதூரம் துரத்தி வந்த போலீசிடம் அகப்படாமல் தற்கொலையும் செய்து கொண்டான். சந்தை வாழும் வரை ஹிட்லருக்கு மரணமில்லை!

• இளநம்பி



படிப்பகம்

www.padippakam.com

# இது எப்படிச் சாத்தியம்?

"நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சியைத் தருக'' என்று சொல்லி, 1980 இல், இந்திராவுடன் கருணாநிதி மீண்டும் கூட்டு வைத்த காலம். அவசர நிலை ஆட்சியின் ரத்தக் காயங்கள் ஆறுமுன்னே இப்படி ஒரு முடிவு.

இதெப்படி சாத்தியம், உடன் பிறப்புகள் இதற்கெப்படி மனமொப்புவார்கள் என்ற கேள்விக்கு தி.மு.க பேச்சாளர் நன்னிலம் நடராசன் ஒரு பொதுக்கூட்டத்தில் விளக்கம் சொன்னார்:

''ஆமாய்யா... அடிச்சானுங்க... அதுக்கென்ன இப்போது? யாருய்யா அடிச்சாங்க? நேரு யாரு... நம்ம மாமா. இந்திரா காந்தி யாரு... நம்ம அத்தாச்சி. நீர் அடிச்சு நீர் வெலகுமா?''

உடன் பிறப்புகள் கோபப்படவில்லை; சிரித்தார்கள்.

இன்று பா.ஜ.க வுடன் தி.மு.க கூட்டு. தீப்பொறி ஆறுமுகம் பேசுகிறார்: ''போன தேர்தல்ல பாரதீய ஜனதாவ எதிர்த்துப் பேசினேன்; இந்தத் தேர்தல்ல ஆதரிச்சுப் பேசுறேன். எனக்கே அலுத்துப் போச்சுய்யா. ஆனா தலைவா, அடுத்தவாட்டி இவளோட (ஜெயலலிதா) கூட்டணி வெச்சிடாதீங்க. நான் தீக்குளிச்சுடுவேன்.'' இதற்கும் சிரிக்கிறார்கள் உடன் பிறப்புகள்.

''சாப்பிட்டது வாழைப்பழமாக இருந்தாலும் வயிற்றுக்குள் போனால் வெளியே வருவது மலம்தான். எப்பேர்ப்பட்ட யோக்கியனாக இருந்தாலும் இந்தத் தேர்தல் பாதைக்குள் போனால் அயோக்கியனாகத்தான் வெளியே வர வேண்டும். எனவேதான் புறக்கணிக்கிறோம்'' என்று முன்பு விளக்கம் தந்தாராம் விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவன். ''இப்போது நாம் வெளியேவரும்போது என்னவாக இருப்போம் பஞ்சாமிருதவாகவா?'' என்று சிறுத்தைகள் கேட்கவில்லை போலும்!

புரட்சியின் நாயகர்கள் என்றும் எங்கள் தலைவர்கள் என்றும் மார்க்சையும் லெனினையும் மக்களிடையே கொண்டு செல்லத் தயங்கிய போலி கம்யூனிஸ்டுகள், புரட்சித் தலைவியின் ஆசி பெற்ற சின்னம் அரிவாள் சுத்தியல் என்று கூச்சமில்லாமல் தெருத் தெருவாகக் கூவுகிறார்கள்.

வாழப்பாடியிடம் ஒரு நிருபர் கேட்கிறார். ''உங்கள் கட்சியின் கொள்கை என்ன?'' ''என்னை மட்டும் கோமணம் கட்டச் சொல்கிறீர்களா?'' என்று கோபத்தில் வெடிக்கிறார் வாழப்பாடி.

''இன்றைக்குக் கொள்கை, திட்டம், செயல்பாடு, லட்சியம் இவற்றை மீறி நடக்கமாட்டோம் என்று சொல்கிற ஒரே ஒரு கட்சியைச் சொல்லுங்கள் பார்க்கலாம்'' என்று சவால் விடுகிறார் ராமதாஸ்.

இந்த அருவெறுக்கத்தக்க அரசியல் சந்தர்ப்ப வாதங்களையெல்லாம் இக்கட்சிகளின் தொண்டர்கள் எப்படிச் சகித்துக் கொள்ளப் பழகினார்கள்? கொள்கை லட்சியங்கள் என்று சொல்லி வந்தவற்றைக் கைகழுவிவிட்டதனால் எந்தக் கட்சியிலும் சிறு சலசலப்பு கூட இல்லையே? ம.தி.மு.க வைப் பாருங்கள்!



பாசிச அதிபராட்சி வேண்டும் என்று பேசிவரும் அத்வானி வெங்கய்யா நாயுடு முன்னிலையில் ம.தி.மு.க நடத்தும் மாநாட்டுக்குப் பெயர் ''மாநில சுயாட்சி மாநாடு.''

அதில் அணிவகுத்துவரும் தொண்டர்களோ வை.கோவைக் கண்டால் தமிழ் முழக்கம் செய்கிறார்கள்; அத்வானி வந்தவுடன் ''பாரத் மாதா கி ஜெய்'' என்கிறார்கள். இவர்கள் நேற்று 'புரட்சித்தலைவி வாழ்க!' என்று கோஷம் போட்டவர்கள்; நேற்று முன்தினம் 'ஊழல்நாயகி ஒழிக' என்றும் கூச்சலிட்டவர்கள்.

கட்சியின் தோற்றத்துக்குக் காரணமான 'வில்லன்' கருணாநிதி மேடையில் நிற்கிறார். கருணாநிதியை எதிர்த்துத் தீக்குளித்த தொண்டர்களோ படமாக மேடையில் தொங்குகிறார்கள்.

சந்தர்ப்பவாதம், பிழைப்புவாதம் என்று ஏற்கனவே அரசியல் சொல்லகராதியில் இருக்கும் எந்தச் சொல்லைக் கொண்டும் விளங்க வைக்க முடியாதது பா.ம.க வின் அரசியல் ஒழுக்கம்.

பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ் படங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கம்பெனியை, அறிவுஜீவிகள் என்றழைக்கப்படும் மேடைக் கச்சேரி வித்துவான்கள் 'புரட்சிகரமாக' அறிமுகம் செய்தார்கள். கட்சிப் பத்திரிகையின் பெயர் தினப்புரட்சி என்றிருந்த போதிலும், கொள்கை முடிவுகளும், கூட்டணி மாற்றங்களும் காலையில் ஒருபுரட்சி, மாலையில் ஒரு புரட்சி என்ற அளவுக்கு வேகம்!

தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் உழுபவனுக்கு நிலம் சொந்தம், தமிழனுக்குத் தமிழ்நாடு சொந்தம், அது சொந்தம் இது சொந்தம் என்று நாயனப் பேராசிரியர்கள் மேடையில் கல்யாணக்கச்சேரி வாசித்துக் கொண்டிருக்க இன்னொருபக்கம் உண்மையான 'பாட்டாளிச் சொந்த'மான வாழப்பாடி, கள்ளத்தாலி கட்டி ராமதாசைக் காங்கிரசுடன் சேர்த்துவிட்டார்.

''இது பெரியார் பிறந்த மண்; இங்கே பாரதிய ஜனதா முளைக்காது; முளைத்தாலும் எரித்துவிடுவோம், பொசுக்கி விடுவோம்'' என்று சவடால்களைத் தொடர்ந்தார் ராமதாஸ்.

''அதானே பார்த்தோம். பெரியார் பிறந்த மண்ணா, கொக்கா? ங்கொப்பன் மவனே சிங்



படிப்பகம்

www.padippakam.com

கண்டா'' என்று தமிழின அமைப்புகள் ராமதாசின் பின்னால் ஒளிந்து கொண்டு முண்டா தட்டி னார்கள்

அந்தச் சத்தம் அடங் குவதற்குள் அன்புச் சகோ தரியின் முந்தானையைப் பிடித்தபடியே பா.ஜ.க வுடன் பா.ம.க சங்கமம். ''கூட்டணியிலேயே நீங் கள்தான் தொல்லை கொடுக்காத கட்சி'' என்று வாஜ்பாயிடம் சத்சூத்தி ரன் (விசுவாசமான நல் அடிணிம) 'சர்டிபிகேட்!'

பா.ஜ.க ஆட்சி கவிழ்ந்த பின், ''எந்த அணிக்கு வெற்றி வாய்ப்பு உள்ளது, யார் அதிக சீட் தரு வார்கள் என்பதை வைத்தும் வெளியில் சொல்லமுடியாத வேறுசில விசயங் களை வைத்தும் கூட்டணியை முடிவு செய்வோம்'' என்று பச்சையாகப் பேசுகி றார் ராமதாஸ்.

மதவெறி பா.ஜ.க வுடன் மீண்டும் கூட்டணி என்று முடிவானதும் அரியலூ ரில் பா.ம.க நடத்திய மாநாட்டின் பெயர் ''மத நல்லிணக்க மாநாடு.''


மேடைக்கேற்றபடியெல்லாம் திரு மாவளவன் ஆற்றிய வீர உரைகளை எழுதி மாளாது.

ராமதாசின் 'தமிழர் விடுதலைக்' கச் சேரியிலிருந்து விரட்டப்பட்ட பேராசிரி யர்கள் தமிழகமெங்கும் 'தலித் விடுத லைக்' கச்சேரிகள் நடத்தியதையும் இந்த நிமிடத்தில் கச்சேரிக்கு மேடை தேடிக் கொண்டிருப்பதையும் இங்கே விவரிக்க இடம் இல்லை.

சிறுத்தைகள் முதலில் புரட்சித் தலைவியிடம் சரணம்; அங்கே சீட் கிடைக்காததால் மூப்பனாரை நோக்கிப் பயணம். ''தாழ்த்தப்பட்டோர் அமைப்பு களை ஓரணியில் சேர்த்த ஒப்பற்ற ஒரே தலைவர்'' என்று மூப்பனாருக்கு திருமா வளவன் புகழாரம். இப்போது காமராஜ் ஆட்சி அமைக்க சபதம்!

தாழ்த்தப்பட்டோர் தலைமையில் புரட்சி செய்யும் அம்பேத்கரியம் போய், நலிந்தவர்களுக்கு அதிகாரத்தில் பங்கு வாங்கும் மூப்பனாரியம்!

த.மா.கா. கூட்டணியில் எங்கள் சுயமரியாதை போய்விட்டது என்றார் கிருஷ்ணசாமி; பத்து தொகுதிகள் கிடைத்தவுடன் போன சுயமரியாதை திரும்பிவிட்டது. ஜனநாயகத்துக்கும் மதச்சார்பின்மைக்கும் சோனியா காந்தி



தான் உறைவிடம் என்கிறார் கிருஷ்ண சாமி.

'மகாத்மா காந்தியைத்தான் நம் பாதே என்றார் அம்பேத்கார்; சோனியா காந்தியைச் சொல்லவில்லை. அனைத் திந்திய காங்கிரசைத் தான் நம்பாதே என் றார் அம்பேத்கர்; தமிழ் மாநில காங்கிர சைச் சொல்லவில்லை' என்பார்களா?

தேர்தலைப் புறக்கணிப்போம் என்று சொல்லிவிட்டு இப்போது பங் கேற்கிறீர்களே என்று கேட்டபோது ''புறக்கணிப்பு என்பது கோட்பாடு; பங் கேற்பு என்பது நிலைப்பாடு'' என்று ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறார் திருமா வளவன்.

அதாவது அம்பேத்காரியம் என் பது கோட்பாடு; மூப்பனாரியம் என்பது நிலைப்பாடு!

இடது, வலது போலிகளுக்கும் தி.மு.க விற்கும் நடந்துவரும் ஊழலா - மதவாதமா என்ற லாவணி ரொம்பச் சுவையானது. ''ஊழல்தான் பிரதான எதிரி, அதனால்தான் மதவாதத்துடன் கூட்டு சேர்ந்துள்ளோம்'' என்று தி.மு.க பேசுவதில்லை. மாறாக பா.ஜ.க மதவா தக் கட்சியல்ல என்று சாதிக்கவே முயல் கிறது.

அதேபோல மதவாதமே பிரதான எதிரி எனவேதான் ஊழல் ஜெயலலிதா வுடன் கூட்டு வைத்துள்ளோம் என்று போலிகம்யூனிஸ்டுகளும் பேசுவ தில்லை. (பேசிவிட்டு மேடையை விட்டு உயிருடன் இறங்க முடியுமா என்பது வேறு விசயம்) ''ஊழலா இல்லையா என்பதை நீதிமன்றம்தான் சொல்ல வேண்டும், நீ மட்டும் யோக்கியமா?'' என்பதுதான் போலிகளின் வாதம்.

பா.ஜ.க வின் ஊழல்களைப் பட்டி யல் போட்டு, ''எனவே தினகரனை ஆதரிப்பீர்'' என்று நோட்டீசு அடிக்கி றது தேனி மாவட்ட மார்க் சிஸ்டு கட்சி. தமது கட்சிக் காரனைக் கொலை செய்த குடவாசல் ராசேந்திரன் எனும் அ.தி.மு.க சாதி வெறி ரவுடியின் ஜீப்பில் செங்கொடி பள பளக்க ஓட்டு வேட்டையாடுகி றார்கள் 'காம்ரேடு'கள்.

ஜெயித்தவுடன் நாளைக்கே பா.ஜ.க அணிக்கு ஜெ. பேகமாட் டார் என்பதற்கு என்ன உத்திரவாதம்?'' என்று கேட்டால், அதற்கு நாங் கள் பொறுப்பல்ல, தொகு திப் பங்கீடு தேர்தலோடு முடிந்தது'' என் கிறார் நல்லக்கண்ணு.

●●●

இனி துவங்கிய இடத்திற்கே வரு வோம். ராமதாஸ் சொன்னதைப் போல ''எங்களுக்குக் கொள்கையும் இல்லை; கோவணமும் இல்லை.'' என்று ஒப்புக் கொண்டு இவர்கள் ஓட்டுக் கேட்கிறார் களா?

இல்லை. இதுதான் சரி என்று பேசு கிறார்கள். மடக்கிக் கேட்டால் ''இதைத் தவிர வேறு எதுவும் சாத்தியமில்லை'' என்று தங்கள் அயோக்கியத்தனத்தை நியாயப்படுத்தி வாதாடுகிறார்கள்.

அதற்கு மேல் மடக்கினால் சமூ கமே அப்படித்தான் இருக்கிறது. நாங் கள் மட்டும் வேறெப்படி இருக்கமுடியும் என்று பழியை மக்கள் மீது போடுகிறார் கள்.

மக்கள் அப்படியா இருக்கிறார் கள்? எது லட்சியம், என்ன சாத்தியம் என்பதற்கிடையிலான முரண்பாடும் இடைவெளியும் அன்றாட வாழ்க்கையி லும் இருக்கிறது; அரசியலிலும் இருக்கி றது.

கனவு கண்ட வாழ்க்கை கிடைக் காத மக்களெல்லாம், கனவை நனவாக்க 'இதைத்தவிர வேறெதுவும் சாத்தியமில் லை' என்று கூறி கயவாளித்தனத்தில் இறங்குவதில்லை; தாம் வரித்துக் கொண்ட நெறிமுறைக் கேற்ப வாழ்வதற் குத்தான் போராடுகிறார்கள்.

பலநூறு அடி உயரச் சாரத்தில் உயி ரைப் பணயம் வைத்துக் கல் சுமக்கும் பெண்கள் அந்த வேலையைத் தெரிவு செய்யக் காரணம் என்ன - விபச்சாரம் செய்து சம்பாதிக்கும் வாய்ப்பு கிடைக்கா ததால் 'இதைத்தவிர வேறெதுவும் சாத்தி



படிப்பகம்

www.padippakam.com

யமில்லை, என்பதால் கல் சுமக்க வந்தார்களா? இல்லை.

அல்லது கோடம்பாக்கத்தில் உடலை விற்று சொகுசு வாழ்க்கை நடத்துகிறார்களே நடிகைகள், அவர்கள் உழைத்து வாழமுயன்று வேலையெது வும் கிடைக்காததனால் 'இதைத்தவிர வேறெதுவும் சாத்தியமில்லை' என்று நடிகையானார்களா? அதுவும் இல்லை.

உழைத்து வாழ்வதென்பது உழைக்கும் மக்களின் நெறி; உழைக்காமலேயே சொகுசு வாழ்க்கை வாழ்வதென்பது நடிகைகளின் ஒழுக்கம். ஓட்டுப் பொறுக்கிகள் இரண்டாவது ரகம்.

''வாஜ்பாயி - கழிப்பறையில் கிடக்கும் அல்வா'' என்றாராம் கருணாநிதி; உடன் பிறப்புகள் நாக்கைச் சுருட்டிக் கொண்டார்கள். இப்போது ''கழிப்பறையில் கிடந்தாலும் அல்வா, அல்வாதான்'' என்கிறார். உடன்பிறப்புகள் மூக்கைப் பொத்திக் கொண்டு நாக்கை நீட்டுகிறார்கள்.

''வயிறா - மானமா'' என்று கம்யூனிஸ்டுகளுடன் முன்னொரு காலத்தில் பட்டிமன்றம் நடத்தி மானத்திற்காக வாதாடியதாம் திராவிட இயக்கம்.

திராவிட இயக்கத்தின் அருட்கடாட்சம் படாத ஏழைகள் இன்னமும் மானத்துடன் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். மானமிரு சுயமரியாதை வீரர்கள்தான் கழிப்பறை அல்வாவுக்கு நாக்கைச் சுழற்றுகிறார்கள்.

உழைக்கும் மக்களிடம் பல குறைகள் இருக்கலாம். ஆனால் அவர்களிடம் நேர்மையும் வாக்கு நாணயமும் தன்மான உணர்வும் இருக்கிறது. இவையெதுவும் ஓட்டுப் பொறுக்கிகளிடம் கிடையாது.

நாங்கள் ''பாசாணத்தில் புழுத்த புழு'' என்று தங்கள் வீரத்தைத் தாங்களே மெச்சிக் கொள்வார்கள் திராவிட இயக்க பேச்சாளர்கள். சாக்கடையில் புழுத்த புழு தவறுதலாக பாசாணத்தில் வீழ்ந்திருக்கலாம்; அதனால்தான் உடனே தப்பித்துச் சாக்கடையில் குதிக்கிறது.

ஆயிரம் இடர்ப்பாடுகளுக்கிடையிலும், ஆசைகாட்டல்களுக்கிடையிலும் நேர்மையாய் வாழப் போராடும் மக்கள்தான் பாசாணத்தை வென்று வாழ்பவர்கள். அந்தப் புழுக்கள் இவர்களின் பிரதிநிதியாவது எப்படிச் சாத்தியம்?

''என் மீது அபாண்டமாகக் கொலைப்பழி போடுகிறார் கருணாநிதி'' என்ற கூச்சலை நம்பித் தீக்குளித்த முட்டாளுக்கு மலர் வளையம் வைத்துவிட்டு, கொலைப்பழி சுமத்தியவருக்கு

*தேர்தலைப் புறக்கணிப்போம் என்று சொல்லிவிட்டு இப்போது பங்கேற்கிறீர்கள் என்று கேட்ட போது ''புறக்கணிப்பு என்பது கோட்பாடு; பங்கேற்பு என்பது நிலைப்பாடு'' என்று ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறார் திருமாவளவன். அதாவது அம்பேத்காரியம் என்பது கோட்பாடு; மூப்பனாரியம் என்பது நிலைப்பாடு!*

மலர்மாலை போடுவதும், தனிக்குடித்தனம் போன மகன் என்றும், என் தானைத் தலைவன் என்றும் கூறி ''கொள்ளைக்காரனும் - கொலைகாரனும்'' கட்டித் தழுவிக் கண்ணீர் வடிப்பதும், என்ன வகை அரசியல் ஒழுக்கம்!

இந்த ஆபாசக் காட்சியை, உணர்ச்சி மயமான சித்திரமாகப் பத்திரிகைகள் வருணிப்பதும் எப்படிச் சாத்தியமாகியது?

ஒரேயொரு சுடுசொல் பொறுக்காமல் பெற்ற பிள்ளையைக்கூடத் துறந்து, தள்ளாத வயதிலும் ஏதாவதொரு வேலை செய்து வயிற்றைக் கழுவும் கவுரவம் வாய்ந்த எம் உழைக்கும் மக்களுக்கு, மனிதத்தோற்றம் அணிந்திருக்கும் இந்தக் கயவர்களா பிரதிநிதிகள் இது எப்படிச் சாத்தியம்?

வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் கடன்காரன் பேச்சைக் கேட்டு உடல் குறுகி, வாக்கு தவறிவிட்டோமே என்று உள்ளம் நொந்து குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகள் இருக்கிறார்கள்.

நிலம் இருந்தும் பணமில்லாததால், பெங்களூருக்கு ஓடி அங்கே கூலிக்கு மூட்டை தூக்கும் தருமபுரி விவசாயிகள் இருக்கிறார்கள்.

உழைத்துக் கடனை அடைக்க முடியாமல் உடல் உறுப்பை விற்றுக் கடன் அடைத்து, நடைபிணமாய், ஆனால் தலைநிமிர்ந்து நடக்கும் கைத்தறித் தொழிலாளிகள் சேலம் பள்ளிபாளையத்தில் இருக்கிறார்கள். அந்த விவசாயிகள், தொழிலாளிகளில் வன்னியர் சமூகத்தினர் ஏராளம்.

வாழ்வது என்றால் மதிப்பீடுகளோடு வாழ்வதுதான். உயிரோடிருப்பது வேறு, வாழ்வது வேறு. 'வாழ' முடியும் என்றால் உயிர் தரிப்போம், இல்லையேல் மரிப்போம் என்பது அம்மக்களின் கொள்கை.

கொள்கை இல்லை, கோவணமும் இல்லை. நேற்று வரை ஜெயலலிதாவுக்கு வெற்றிலைப் பெட்டி, இன்று அறிவாலயத்தில் அடைப்பக்காரன்; ''அமைச்சர் பதவிகொடு, அம்மணமாக வேண்டுமானாலும் நின்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்கிறேன்'' என்று பல்லிளிக்கும் வாழப்பாடி இம்மக்களின் பிரதிநிதியா?

'பாப்பாத்தி, கொள்ளைக்காரி' என்று வீரவசனம் பேசி தமிழினப் போராளி என்று பட்டம் வாங்கி,

அந்தப் பட்டங்களைக் கழற்றிக் கக்கத்தில் வைத்துக் கொண்டு வன்னிய சமூகத்தின் 'அன்புத்தாய்' என்று ஜெயலலிதாவுக்குப் பட்டம் சூட்டிவிட்டு,

''வன்னிய சமூகத்தின் முதல் எதிரி'' என்று சொன்ன வாயால் ''கலைஞரே, இடஒதுக்கீடு தந்த உங்களை மறந்தால் நாங்கள் நன்றி கொன்றவர்கள் ஆவோம்'' என்று இப்போது பேசிக் கொண்டிருக்கும் ராமதாசும் இம்மக்களின் பிரதிநிதியா?

மானத்துக்காகச் சிறுநீரகத்தை விற்கத்துணியும் மக்களின் பிரதிநிதிகள், பதவிக்காகக் கோவணத்தை விற்பார்களா? இது எப்படிச் சாத்தியம்?

கோடிக்கணக்கான தியாகிகளின் இரத்தத்தால் சிவந்த செங்கொடி, ஒரு கொள்ளைக்கூட்டத்தை வரவேற்கும் தோரணமாகத் தொங்க முடியுமா?

வீரத்தின் சின்னமாக உயிர்நீத்த களப்பால் குப்புவும் இரணியனும் எண்ணியிருப்பார்களா, புரட்சியின் சின்னமான அரிவாள் - சுத்தியல் ஒருநாள் புரட்சித்தலைவியின் ஆசி பெற்ற சின்னமாக அறியப்படும் என்று?

பா.ஜ.க ஆட்சியை என்ன நோக்கத்துக்கு வேண்டுமானாலும் ஜெயலலிதா கவிழ்த்திருக்கட்டும். அதைப்பற்றிக் கவலையில்லை என்கிறார் சங்கரய்யா.

*கோடிக்கணக்கான தியாகிகளின் இரத்தத்தால் சிவந்த செங்கொடி, ஒரு கொள்ளைக் கூட்டத்தை வரவேற்கும் தோரணமாகத் தொங்க முடியுமா? வீரத்தின் சின்னமாக உயர்நீத்த களப்பாள் குப்புவும் இரணியனும் எண்ணியிருப்பார்களா, புரட்சியின் சின்னமான அரிவாள் - சுத்தியல் ஒருநாள் 'புரட்சித் தலைவி'யின் ஆசி பெற்ற சின்னமாக அறியப்படும் என்று?*



படிப்பகம்

www.padippakam.com

அதை நாங்கள் எப்படிப் பயன்படுத்திக் கொண்டோம் என்பதைப் புரிய வைக்க ''கிறுக்கன் கிழிச்ச துணியானாலும் கோவணத்துக்கு ஆகும்'' என்று ஒரு பழமொழியைச் சொல்கிறார் நல்லக்கண்ணு.

கிழிபட்ட துணி சிவப்புத்துணி; அது யாருடைய கோவணமாகப் பயன்படப் போகிறது என்பதைப் பற்றி அந்தக் கட்சித் தொண்டர்களே கவலைப்பட்டதாகத் தெரியவில்லையே! இதெப்படிச் சாத்தியம்?

**நா**ம் ''மூப்பனார்களுக்கு எதிராக ஒன்றுபட வேண்டும்'' என்றோம். 'முடியாது சாதியை ஒழித்த பிறகுதான் வர்க்கப் பிரச்சினை என்றார்கள் தலித் அமைப்புகள்; இப்போது மூப்பனார் தலைமையில் ஒன்றுதிரண்டிருக்கிறார்கள்.

பொது எதிரி என்ற முறையில் மூப்பனாரின் வர்க்கம் தாழ்த்தப்பட்டோரையும் பிறசாதி உழைக்கும் மக்களையும் ஒன்றுபடுத்துகிறது என்றோம்; இல்லை மூப்பனாரின் தலைமைதான் தலித்துகளை ஒன்று படுத்தியிருக்கிறது என்கிறார் திருமாவளவன். கபிஸ்தலத்தில் மூப்பனாரின் தலைமையிலும், பூண்டியில் வாண்டையாரின் தலைமையிலும் தலித்துகள் 'ஒற்றுமை' யாகத் தானிருக்கிறார்கள்!

'தாழ்த்தப்பட்டோர் தலைமை' மூப்பனார் தலைமையாக மாறியதெப்படி? மூப்பனார் ஆதிக்கச் சாதி உணர்வை இழந்து வருகிறாரா? தலித் தலைவர்கள் ஆளும் வர்க்க உணர்வைப் பெற்று வருகிறார்களா?

''அதிகாரத்தில் பங்கு தருகிறாராமே மூப்பனார், நிலத்தில் பங்கு தருவாரா?'' நாம் கேட்கவில்லை கருணாநிதி கேட்கிறார். ''சீப்பு கொடுத்துவிட்டாளே மயிலு, சில்லறை கொடுத்து விட்டாளா?'' என்பது போல நக்கலாகக் கேட்கிறார். கருணாநிதிக்கு என்ன யோக்கியதை என்று சீறலாம். அது பதில் இல்லையே!

பதிலைப் பச்சைத் தமிழர் காமராசர் ஏற்கனவே கல்வெட்டில் பதித்திருக்கிறார்: ''உழுபவனுக்கு நிலம் சொந்தமென்றால் வெளுப்பவனுக்கு வேட்டி சொந்தமா?'' இதைக்கேட்ட பிறகு தானே மூப்பனார் வாண்டையார் வகையறா கதர்ச்சட்டைக்குக் கஞ்சி போட்டார்கள்!

தலித்துகளை மைய நீரோட்டத்தில் இணைக்கும் ப. சிதம்பரம், தன் தொகுதி தலித் மக்களை கண்டதேவி தேரோட்டத்தில் இணைத்தாரா?

தாழ்த்தப்பட்ட மக்கள் அடிமையாக்கப்பட்டார்கள்; அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். ஆனால் மனமுவந்து தங்களை அடிமைகளாகப் பதிவு செய்து கொண்டதில்லை. சீர்திருத்த அரசியல் பெற்றெடுத்த இந்த ''மனநிறைவு கொண்ட அடிமைகள்'' தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாவது எப்படிச் சாத்தியம்?

●●●

**ஒ**ரு கொள்கை, அதை நிறைவேற்றுவதற்கான நடைமுறை, அதற்கென ஒரு கட்சி, அக்கட்சியின் வெற்றிக்குப் பாடுபடுவதன் மூலம் அக்கொள்கையை வெற்றிபெற வைப்பது என்பது வாய்ப் பேச்சுக்குக்கூட இல்லாமல் போய்விட்டது.



வெற்றி பெறுவதே கொள்கை; அதற்காக கொள்ளைக்காரியோ, மதவெறிக் கொலைகாரனோ யாரோடு வேண்டுமானாலும் கூட்டுச் சேரலாம். ஏன், எப்படி என்ற கேள்விகளுக்கே இடமில்லை.

'பங்குச் சந்தை ஜனநாயகத்தை திரைபோட்டு மூடவந்த பாராளுமன்ற ஜனநாயகம் பங்குச்சந்தையை அச்சாகப் பிரதிபலிக்கிறது. ''ஏன் இந்த நிறுவனத்தின் பங்குகளை விற்றாய், ஏன் இன்னொன்றை வாங்கினாய்'' என்று கேள்விக்கு பங்குச் சந்தையில் ஒரே விடைதான் இருக்கிறது. ''இதில்தான் லாபமிருக்கிறது.'' கூட்டணிகளின் இன்றைய நியாயமும் அதுதான்.

இருந்தாலும் தேர்தலில் வேறொரு பிரச்சினை இருக்கிறது. எந்த லாபமும் இல்லாத வாக்காளர்களிடம் ''உங்கள் வாக்குகளை எங்களிடம் முதலீடு செய்யுங்கள்'' என்று ஓட்டுப்பொறுக்கிகள் கேட்க வேண்டியுள்ளது.

எனவேதான் தங்களது மாபெரும் ஒழுக்கக் கேட்டை நியாயப்படுத்த இன்னொரு மாபெரும் ஒழுக்கக் கேடான சாதியை வாக்காளர்கள் மீது ஏவுகிறார்கள் ஓட்டுப் பொறுக்கிகள். எல்லா அயோக்கியத் தனங்களும் சாதியின் சன்னிதியில் புனிதப்படுத்தப்படுகின்றன.

இந்த ஒழுக்கக் கேட்டைக் காணச் சகிக்காதது போலவும், வேதனைப்படுவது போலவும் நடிக்கும் பத்திரிகைகள், ஓட்டுப் பொறுக்கிகளின் அருவெறுக்கத்தக்க ஆபாசக் கூத்துகளையே ''சவால், மோதல், ஆவேசம்'' என்று தலைப்பிட்டு விற்றுக் காசாக்குகின்றன. எப்படிக் கெட்டாலும் இந்த நாடாளுமன்றக் குட்டிச் சுவரை விட்டால் உங்களுக்கு கதி இல்லை என்றும் உபதேசிக்கின்றன.

நம்மையும் அவர்களுடைய பண்பாட்டிற்கே பழக்குகிறார்கள் ஓட்டுப் பொறுக்கிகள். 'இதெப்படிச் சாத்தியம்' என்ற கேள்வியை எழுப்பாமல் 'இதுதான் இப்போது சாத்தியம்'. சாத்தியமானது எதுவோ அதுவே நல்லொழுக்கம் என்று நம்மைப் பயிற்றுவிக்கிறார்கள்.

நோக்கத்தில் நேர்மையிருந்தால் நடைமுறையில் அது பிரதிபலித்தே தீரும். நடைமுறையில் நேர்மை இல்லாமல் போனால் நோக்கமும் கேடானது என்பது சொல்லாமலே விளங்கும்.

இதெப்படிச் சாத்தியம் என்ற கேள்வியை உரக்க எழுப்புவதன் மூலம், ஓயாமல் எழுப்புவதன் மூலம் இனி இது சாத்தியமில்லை என்றாக்குவோம்.

இனி இது சாத்தியமில்லை என்று பாராளுமன்ற மோசடியை எதிரிகளே கைகழுவுமுன்னால் நாம் அதைக் கைகழுவுவோம்.

கறைகளைக் கழுவி ஒழித்த புதிய கைகளால் புதிய ஜனநாயகமொன்றை உருவாக்குவோம்!

• சூரியன்



படிப்பகம்

www.padippakam.com

# பெற்றது நீங்கள் வளர்ப்பது 'அவர்கள்'

சிறார்கள் என்றாலே அவர்களின் இயல்பான தேவையும், ஆசையும் ஆவலும் இரண்டே விசயங்களில்தான் - தின்பண்டங்கள், விளையாட்டு. மற்ற விசயங்கள் எல்லாம் அப்புறந்தான். இவை இரண்டும் கிடைத்துவிட்டால்போதும், அவர்கள் இந்த உலகத்தையே மறந்து விடுவார்கள். பெற்ற தாய் - தந்தையையும் கூட.

பள்ளிக்குப் போய்வர மறுக்கும் சிறுமிக்குச் சொல்கிறார் பாவேந்தர் பாரதிதாசன்,

மலைவாழை அல்லவோ கல்வி-நீ
வாயார உண்ணுவாய்
போஎன் புதல்வி.

கல்வியைக்கூட ஒரு தின்பண்டமாய்ச் சொல்லி ஏற்க வைக்கும் முயற்சி. அது மட்டுமல்ல. கடினமான கல்வியைக்கூட விளையாட்டு மூலம் விளையாட்டாய்ச் சொல்லித்தரும் முயற்சியும் உண்டு.

சிறுவயது வாழ்க்கையைப் பறிகொடுத்துவிட்ட சிறார்கள் தீக்குச்சி அடுக்குவதையும் ஊதுபத்தி தேய்ப்பதையும் பார்த்திருக்கிறேன். கடும் உழைப்பையும் ஒரு விளையாட்டாய்ச் செய்வதன் மூலம் தம் வேதனையை அந்த இளம் கரங்கள் மறக்கின்றன.

விளையாட்டின் மீதும், தின்பண்டங்களின் மீதும் சிறார்களுக்குள்ள ஆவலைக் கொண்டு அவர்களை நல்வழிப்படுத்தும் திசையில் முடுக்கிவிடுவது ஆரோக்கியமான, ஆக்கபூர்வமான மனிதர்களின் சிந்தனை. ''ஐஸ் கிரீம்,'' ''பிஸ்கோத்து'' போன்றவற்றில் மருந்து கலந்து கொடுத்து பள்ளிச் சிறார்களைப் போதைக்கு அடிமையாக்குவது கிரிமினல் சிந்தனை. அப்படிச் செய்வது அந்தச் சிறார்களை மட்டும் பாதிக்கும் கேடு. ஆனால் அவர்களின் விளையாட்டுப் புத்தியை வெறும் வன்முறை வெறியாக மாற்றுவது அதைவிடக் கேடானது. இந்தச் சமூகத்துக்கு எதிராகவே ஏவிவிடும் கொடிய குரூரமான சிந்தனை.

தம்சுயநலனுக்காகச் சிறார்களை போதை அடிமைகளாகவும் வன்முறை வெறியர்களாகவும் மாற்றும் செயலை இப்போது சமூக விரோத கிரிமினல்களான ஒரு தனிநபரோ, ஒரு சிறு குழுவோ மட்டும் செய்யவில்லை. அனைத்துச் செல்வாக்கும் பெற்ற, சட்டபூர்வ சமூக அங்கீகாரம் பெற்ற பன்னாட்டுக் கூட்டுக் கம்பெனிகள் செய்கின்றன.

உலக அளவில் செய்கின்றன. ஆம், சிறார்களை ஒரு விதத் தின்பண்ட போதைக்கு அடிமையாக்கும் வேலையை பெப்சி, கோக், மெக்டொனால்டு, கெண்டுகி, கெல்லாக், நெஸ்லே போன்ற பன்னாட்டு, தேசங்கடந்த தொழிற்சங்கங்கள் செய்கின்றன. சிறார்களை வன்முறை வெறியர்களாக்கும் வேலையை ரீபோக், நைக்ஸ், டபிள்யூ. டபிள்யூ. எஃப், கார்டூன் நெட்வொர்க், எம்.டி.வி. போன்ற விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வீடியோ, ''சேடிலைட்'' அலை வரிசைகள் செய்கின்றன.

பன்னாட்டு, தேசங்கடந்த தொழில் கழகங்களைப் பொறுத்தவரை அவை உள்ளூர் வியாபாரிகளைப் போல ஏதோ ஒரு கொத்து மதிப்பாகக் கண்ணைமூடிக் கொண்டு, கடையை விரித்து வைத்துக் கொண்டு காத்திருப்பதில்லை. வந்த வரை இலாபமென்று விசிறிவீசிக் கொண்டிருப்பதில்லை. வியாபாரத்தைத் தொடங்கு முன்பே என்ன சந்தை வாய்ப்பிருக்கிறது என்று சந்தை வல்லுநர்களை வைத்து மதிப்பீடு செய்கின்றன. அதைக் கொண்டு வியாபாரம் தொடங்கிவிட்டு, பிறகு வியாபாரத்தில் நிலைத்து நிற்கவும், சந்தையை மேலும் மேலும் விரிவுபடுத்தவும் புதுப்புது உத்திகளை வகுக்கின்றன.

உலகின் மேலை பணக்கார நாடுகளைப் போலவே பின்தங்கிய, ஏழை நாடுகளில் மிகப்பெரிய நுகர்வோர் சந்தை இருப்பதைக் கண்டுகொண்டார்கள். அதிலும் கணிசமான அளவு சிறார் சந்தை. இந்தியச் சந்தையில் 25 முதல் 30 சதவீதமானவை 5 வயது முதல் 14 வயது வரையிலான சிறுவர் சந்தை. இதைக் குறிவைத்தாலே பெரும் இலாபம் குவிக்க முடியும். அதிலும் குறிப்பாக மாதம் பத்தாயிரம் ரூபாய்க்குமேல் சம்பாதிக்கும் குடும்பங்கள் மட்டும் பல இலட்சங்கள் இருக்கின்றன. அக்குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு சிறுவன் அல்லது சிறுமி இருக்கிறார். இவர்களைத் தாம் உற்பத்தி செய்யும் தின்பண்டங்கள், விளையாட்டுப் பொருட்களின் மீது பைத்தியங்கொள்ளும்படி செய்து விட்டால் போதும். கோடிகோடியாகப் பணம்மழை பெய்யும் என்று சில பன்னாட்டு, தேசங்கடந்த தொழிற்கழகங்கள் கண்டு கொண்டுவிட்டன.

சிறார்களின் நச்சரிக்கும் சக்தி இருக்கிறதே, அது சந்தையைப் பிடிப்பதற்கு மிகவும் வசதியான வழிவகை. அதற்கு மசியாத பெற்றோர்கள் நிரம்பவும் குறைவு. பரம ஏழையான தாய் - தந்தையானாலும் தமது பிள்ளைகள் நச்சரிக்கும்போது பத்துக் காசுக்கு மலிவான மிட்டாய், முறுக்காவது வாங்கிக்கொடுத்து விடுவார்கள். நச்சரிக்கவே வேண்டாம். ஆசைப்பட்டாலோ, அடம்பிடித்தாலோ ஆயிரம் ரூபாய்க்கும் விளையாட்டுப் பொருளை வாங்கித்தரும் பணக்காரப் பெற்றோரும் இருக்கத்தானே செய்கிறார்கள்.

பெப்சி கம்பெனி, ''லே சிப்ஸ்'' எனப்படும் செயற்கையான வாசமும், சுவையும் கொண்ட உருளைக் கிழங்கு வறுவலை விற்கிறது. அதன் ஒவ்வொரு பொட்டலத்தோடும் ஒரு பெரிய ஒரு ரூபாய் நாணய அளவு முப்பரிமாணப் படம் அச்சடித்த ''பிளாஸ்டிக்'' வில்லையை இலவசமாகத் தருகிறது. அதில் பிரபல சினிமா நட்சத்திரங்கள், விளையாட்டுவீரர்கள், கேலிச் சித்திரங்கள் அச்சிடப்பட்டிருக்கும். அதன் பின்புறம், சூதாட்டச் சீட்டுக்குள்ளது போல மதிப்பு எண் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த வில்லைகளைச் சேகரிப்பது, காற்றில் வீசி விளையாடுவது, ஒருவருக்கொருவர் கடன் கொடுப்பது, சூதாட்டம் போல சிறு விளையாட்டுகளில் பந்தயம் வைப்பது போன்றவாறு சிறார்கள் பயன்படுத்துகிறார்கள். ''டோஜோ'' எனப்படும் அந்த வில்லைகளைச் சேகரிப்பதற்காகவே ''லே சிப்ஸ்'' வாங்க வேண்டும் என்று சிறார்கள் அடம் பிடிக்கிறார்கள்.

பத்து நாட்களுக்கு ஒரு வகை ''டோஜோ'' வில்லைகளை கம்பெனி புழக்கத்தில் விடுகிறது. நான்கே மாதத்தில் 2 கோடி வில்லைகள் சந்தையில் போயிருக்கின்றன. அதாவது 2 கோடி உருளைக் கிழங்கு வறுவல் பொட்டலங்கள் விற்றிருக்கின்றன. ஒரு பொட்டலம் 10 ரூபாய் என்று 20 கோடி ரூபாய்க்கு வியாபாரம். இந்த டோஜோ வில்லைகள் வந்தபிறகு ''லே சிப்ஸ்'' விற்பனை நமது நாட்டில் மட்டும் 50 சதவீதம் அதிகரித்திருக்கிறது. இன்னும் சில நாடுகளில் 200 சதவிகிதம் அதிகரித்திருக்கறது. இந்த ''டோஜோ'' வில்லைகளின் தொகுப்பு சேகரிப்பதில் விடுபட்டுப்போகும் வில்லைகளை விற்பதற்கென்றே தனி



படிப்பகம்

www.padippakam.com

மையங்களைத் திறந்திருக்கிறது, ''பெப்சி'' கம்பெனி. இந்த வில்லைகளைச் சேகரிப்பதற்காக வேண்டி பொட்டலங்களை விலை கொடுத்து வாங்கிவிட்டு உருளைக் கிழங்கு வறுவல்களை வீசிவிடும் கொழுத்த பணக்காரச் சிறார்களும் உண்டு.

பொருட்களின் மீதுள்ள ஆவலை விட, அவற்றோடு தரும் விளையாட்டு இலவசங்கள் மீது மோகத்தை ஊட்டி வளர்ப்பது சந்தையை விரிவுபடுத்தும் எளிதான வழியாக மாறிவிட்டது. கிரிக்கெட், டென்னிஸ், கூடைப்பந்து, கால்பந்து வீரர்கள், பிரபல ''ஆலிவுட்'' நடிகர்-நடிகைகள், இயக்குநர்கள், குத்துச் சண்டை வீரர்கள் படங்கள் அச்சிட்ட அட்டைகளை இலவசமாகத் தருவது. சக்திமான், பிராணிகளின் ஒட்டிகள்(ஸ்டிக்கர்கள்), டயனோசர், பாண்டா கரடிக் குட்டி போன்ற அதிசய விலங்குகளை உடம்பில் பச்சை குத்துவதைப்போல படம் அச்சிடும் ஒட்டிகள் என்று புதுப் புது வடிவங்களில் மெக்டொனால்டு, கோக், கெல்லாக், நெஸ்லே கம்பெனிகள் இலவசமாய்த் தருகின்றன. கெண்டுகி, மெக் டொனால்டு, விம்பி, டோமினோ, பிட்ஸா அட், ஸ்லைஸ் ஆஃப் இத்தாலி போன்றவை பெரும் நகரங்களில் துரித உணவகங்களை நடத்தும் வெளிநாட்டுக் கம்பெனிகள். இங்கெயெல்லாம் பழக் கூழ், கோழிவறுவல், பிட்ஸா (நடுவில் காய்கறி மசாலா வைத்த கோதுமை ரொட்டி) போன்ற மேலை ருசியும் வாசனையும் கொண்ட தீனிகளை விற்கின்றனர். இத்துரித உணவகங்களிலேயே சிறு சிறு கார், மோட்டார் சைக்கிள், இயந்திர மனிதர்கள் மற்றும் பொம்மைகளைத் தருகிறார்கள். கேளிக்கை விளையாட்டு அறைகளும் கட்டிவிட்டிருக்கிறார்கள். உணவுப் பொருட்கள் வாங்கித் தின்பதற்காக மட்டுமல்ல, கேளிக்கை, விளையாட்டுக்காகவே இந்தத் துரித உணவகங்களில் போய் ஈக்களாக மொய்க்கிறார்கள் சிறார்கள்.

மெக்டொனால்டு துரித உணவகத்தில் விற்கும் ஒரு ''சந்தோஷ சாப்பாடு'' விலை ரூ 59.'' பிட்ஸா ஹட்டில் விற்கும் ''பிட்ஸா'' விலை ரூ. 50. ஒரு கெண்டுகியில் விற்கும் கோழி வறுவல் விலை ரூ 80. ஒரு பிள்ளைக்கு வாரம் ஒரு முறையாவது இவற்றில் ஏதாவது ஒன்று வாங்கித் தருகிறார்கள், நடுத்தர வர்க்கப் பெற்றோர். ''மாதம் 250 முதல் 300 ரூபாய் வரைதான் செலவாகிறது, ஆனால் கூடவே தரப்படும் இலவசப் பொருட்களை விளையாட்டுப் பொருள் கடைகளில் வாங்கினால் கூடுதல் செலவாகும்'' என்று சமாளிக்கிறார் ஒரு தந்தை.

ஒருமுறை வாங்கும் பொருளோடு நின்றுபோய் விடக்கூடாது என்பதற்காக சங்கிலித் தொடர்போல விளையாட்டுக்களை, தொகுப்பு சேகரிப்புகளை இலவசமாகக் கொடுத்து சிறார்களை ஈர்க்கிறார்கள். ''டோஜா'' தொகுப்பு ஆல்பம், பார்பி பொம்மைக் குடும்பம், ஜோ சித்திரத் தொகுப்பு போன்றவற்றை அறிமுகப் படுத்தியிருக்கிறார்கள். அதாவது, ''டோஜா'' வில்லைகள் என்றால் இதுவரை வந்த அத்தனை வில்லைகளையும் இடைவெளிவிடாமல் ஒரு தொகுப்பாக சேகரிக்க வேண்டும். பார்பி என்னும் பொம்மைப் பெண் வாங்கினால் போதாது; அவளுடைய நண்பன் கென், அவளுடைய குழந்தைகள், அவளுடைய வரவேற்பு அறை, சமையல் அறை, குளியல் அறை எல்லாம் சேகரிக்க வேண்டும். நான்கைந்து சக்திமான் அட்டைகளைச் சேர்த்து பிஸ்கோத்துக் கம்பெனிகளுக்கு அனுப்பினால் ''சக்திமான்'' சீருடை இலவசமாகத் தருகிறார்கள்.

''இதெல்லாம் ஏதோ சிறார்கள் சமாச்சாரம், விளையாட்டுச் சமாச்சாரம், இதில் காசு செலவாகிறது என்பதைத் தவிர முக்கிய விசயம் ஒன்றுமில்லை'' என்று ஒதுக்கிவிட முடியாது.

புதுதில்லியில் உள்ள சிரீராம் பள்ளி முதல்வர் அபா ஆடம்ஸ் சொல்லுகிறார், ''இந்தப் பன்னாட்டு நிறுவனங்கள் பொருளை மட்டும் விற்கவில்லை. ஒருவித நுகர்வுக் கலாச்சாரத்தையே விற்கிறார்கள். முழுக்காலணி என்பது நடக்கவும், ஓடவும், குதிக்கவும் பயன்படும் காலணியாக இப்போது கருதப்படுவதில்லை. ஒருவருடைய வாழ்க்கைப் பாணியை அறிவிப்பதாக உள்ளது. கூடைப்பந்து என்பது நைக் கம்பெனியின் காலணி போட்டு அமெரிக்க வீரர் மைக்கேல் ஜோர்டன் விளையாடும் ஒரு விளையாட்டு என்றே இப்போது அறியப்படுகிறது.

''இப்போது விளையாட்டு வீரனுக்குரிய மதிப்பும்கூட பின்னுக்குத் தள்ளப்பட்டு, விளையாட்டு வீரன் அணிந்துள்ள அணிகலன்களின் மதிப்பு, அதன் வியாபாரப்பெயர் முத்திரைக்குத் தான் மதிப்பு. இதன்மூலம் பன்னாட்டு, தேசங்கடந்த தொழில் கழகங்கள் தமது வியாபார முத்திரையின் மீது ஒருவித மோகத்தை ஏற்படுத்தி, வியாபாரக் கொள்ளையை நிரந்தரமாக்குகின்றன.

நடுத்தர, மேட்டுக்குடி வர்க்க சிறார்களின் சந்தையைத் தமது கொள்ளைக்குப் பயன்படுத்தும் அதேசமயம், அவர்களை அமெரிக்கப் பண்பாட்டு வார்ப்படமாக மாற்றிவிடும் நோக்கில் பன்னாட்டு, தேசங்கடந்த தொழில்கழகங்கள் வியாபாரத்தை முடுக்கிவிட்டுள்ளன.

இங்கே நமது நாட்டுத் தலைவர்கள், விஞ்ஞானிகள், நமது நாட்டு விளைபொருட்கள், உற்பத்திப் பொருட்கள், நமது நாட்டு ஊர்கள் - நகரங்கள், நமது நாட்டுப் பழக்க வழக்கங்கள் பற்றி எதுவுமே தெரியாத நகர்ப்புற நடுத்தர வர்க்க சிறார்கள், அமெரிக்க ஆலிவுட் சினிமாக்களையும் ஜிம் கெரி, சில்வஸ்டர் ஸ்டெல்லான், வில்ஸ்லெட், ஆர்னால்டு, வான் டெமி, ஸ்பீல்பர்க், ஜேம்ஸ் கெமரூன் போன்ற பிரபல நடிகர்-நடிகைகள், இயக்குநர்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். மைக்கேல் ஜோர்டான், பீட் சாம்ராஸ்,டாவன்போர்ட்,ராஃட்டர்,செரீனா-வீணா வில்லியம்ஸ் சகோதரிகளைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். பாஸ்டன், ஒக்லகாமா, லாஸ்வெகாஸ் நகரங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். உலக அளவு பிரபலமான கிரிக்கெட் வீரர்கள், உலகக் குத்துச் சண்டை வீரர்களின் தரவரிசையைக் கடகடவென்று ஒப்பிக்கிறார்கள்.

தங்கள் குழந்தைகள் அமெரிக்கப் பண்பாட்டின் கடும் செல்வாக்கில் சிக்கியிருப்பதாக 66 சதவீத இந்தியப் பெற்றோர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்; அவுட்லுக் - பசிபிக் களஆய்வு நிறுவனம் இணைந்து நடத்திய மதிப்பீடு இப்படிச் சொல்லுகிறது. ''ஒரு வாய்ப்புக் கிடைத்தால் எந்த நாட்டுக்குப் போக விரும்பு






படிப்பகம்

www.padippakam.com

கிறாய்?'' என்று சிறார்களிடம் கேட்டால் மிகப் பெரும்பான்மையினர் ''அமெரிக்கா!'' என்று கூச்சலிடுகின்றனர்; ''கார்ட்டூன் நெட்வொர்க்'' - வானொளி நடத்திய கருத்துக்கணிப்பு இப்படிச் சொல்கிறது.

இங்கே பணக்காரப் பெரியவர்களிடயே சுதேசி - விதேசி வாதப் பிரதிவாதம் நடந்து கொண்டிருக்கும்போதே, அவர்களின் குழந்தைகள், ரீபோக் அல்லது நைக்ஸ் காலணிக் கயிறுகளை இறுக்கிக் கட்டுகிறார்கள்; நீல ஜீன்ஸ் ஜிப்புகளைப் பூட்டுகிறார்கள்; மெக்டொனால்டின் வெண்ணெயும் பழங்களும் நிரப்பிய ரொட்டித் துண்டுகளை வாயில் திணிக்கிறார்கள்; பெப்சி அல்லது கோக் பானங்களை உறிஞ்சுகிறார்கள்.

சிறார்களின் திண்பண்டங்கள் - உணவு, விளையாட்டு - வேடிக்கை மூலம் அவர்கள் வாழ்க்கைமுறை, கல்வி - சிந்தனைமுறை, பண்பாடு எல்லாவற்றிலும் உலகமயமாக்குவதில் ''கார்ட்டூன் நெட்வொர்க்'' என்ற வானொளி அலைவரிசை முக்கியப் பங்காற்றுகிறது. 52 விளம்பரதாரர்களை நிரந்தர வாடிக்கையாளர்களாக வைத்திருக்கும் இதனுடன் மற்றபிற அலைவரிசை வானொளிகள் போட்டி போட முடியவில்லை. இந்த அலைவரிசையின் நிகழ்ச்சிகள் முழுக்கவும் சிறார்களுக்கான கேலிச் சித்திரங்கள்தாம்.

படிக்கும் பழக்கமும் மாறிவருகிறது. விக்ரமும் வேதாளமும், அம்புலி மாமா, அமர் சித்திர கதா படித்தவர்கள், மார்வின் - மார்ட்டின், சக்திமான் கதைகள் மீது பைத்தியமாக அலைகிறார்கள்.

டப்பா உணவுதின்று, புட்டி பானங்கள் குடித்து, வானொளி காமிக்குகள் பார்த்து, திகில் கதைகள் படித்து வெறும் வேகம் - வெறிபிடித்த அமெரிக்க சிறார்களின் ''குளோன்''களாக உலகம் முழுவதும் உள்ள சிறார்கள் வார்த்தெடுக்கப்படுகிறார்கள். குறிப்பாக ஒரு குழந்தை மட்டுமே உள்ள, தாய் தந்தையர் இருவருமோ, தாயுமோ அலுவலகப் பணியாற்றும் குடும்பங்களில் சிறார்களுக்குக் கேட்டதெல்லாம் கிடைக்கிறது. சிறார்களுடன் செலவழிப்பதற்குப் போதிய நேரம் ஒதுக்க முடியாத பெற்றோர்கள், இதன் மூலம் அதற்கு ஈடுகட்ட முடியும் என்று நம்புகிறார்கள். ஆனால் சிறார்களின் உடலும் உள்ளமும் நாசமடைவதுதான் நடக்கிறது.

நடுத்தரக் குடும்பங்கள் மேட்டுக்குடி அளவுக்கு செலவு செய்ய முடியவில்லை என்றாலும் அவற்றின் கனவு - இலட்சியமெல்லாம் அதுதான். இந்தப் பண்பாடு அடிமட்டம் வரை கசிகிறது. மலிவான வடிவமெடுக்கிறது. ஆனால் நம்மைச் சுற்றியுள்ள எதார்த்தம் எப்படி இருக்கிறது?

உலகம் முழவதும் மூன்று கோடி சிறார்களின் கனவு தெருவில் தொடங்கி அங்கேயே வாழ்ந்து, அங்கேயே முடிகிறது. பல நாடுகளில் இந்தத் தெருச் சிறார்கள் நகரங்களின் அழகைக் கெடுப்பதாகக் கூறி அரசே ஏவிவிடும் கொலைக் கும்பல்களால் எவ்விதக் காரணமுமின்றி கொல்லப்படுகிறார்கள். குறிப்பாக, பிரேசில், கொலம்பியா, கௌதமாலா ஆகிய



*உலகம் முழுவதும் மூன்று கோடி சிறார்களின் கனவு தெருவில் தொடங்கி, அங்கேயே வாழ்ந்து, அங்கேயே முடிகிறது. பல நாடுகளில் இந்தத் தெருச் சிறார்கள் நகரங்களின் அழகைக் கெடுப்பதாகக் கூறி அரசே ஏவிவிடும் கொலைக் கும்பல்களால் எவ்விதக் காரணமுமின்றி கொல்லப்படுகிறார்கள்.*

நாடுகளில் சமூகத்தின் வீக்கமெடுக்க புண்களைச் சுத்தம் செய்வதாகச் சொல்லி சிறுவர் - சிறுமிகள் நள்ளிரவு நடவடிக்கைகள் மூலம் போலீசு, இராணுவக் குழுக்களால் கொன்றொழிக்கப்படுகிறார்கள்.

கென்யாவில் ''கார்நிறுத்துமிடப் பையன்கள்'' என்றும் பாப்பா நியூகினியாவில் ''இளம் பொறுக்கிகள்'' என்றும் கெமரூனில் ''கொசுக்கள்'' என்றும் இந்தியாவில் ''தெருப் பொறுக்கிகள்'' என்றும் தெருவையே வாழுமிடமாகக் கொண்ட சிறார்கள் அழைக்கப்படுகிறார்கள். பல நாடுகளிலும் அவர்களில் பலர் பாலியல் வன்முறைக்குப் பலியாக்கப்பட்டு பிறகு கொல்லப்படுகிறார்கள். பெல்ஜியத்தில் நடந்தது; அமெரிக்காவில் நடக்கிறது; இந்தியாவில் கொலை செய்யப்படும அளவு இல்லை என்றாலும் சமூக விரோதிகளாலும் போலீசாலும் வேட்டையாடப்படும் பீதியிலேயே வாழுகிறார்கள்.

நமது நாட்டில் மட்டும் 1.1 கோடிக்கும் மேலான தெருச் சிறார்கள் வாழுகிறார்கள். கல்கத்தாவில் மட்டும் ஒரு இலட்சம் தெருச் சிறார்கள் வாதிகிறார்கள். அவர்களில் 30 சதவீதத்தினர் பிளாஸ்டிக் சாமான்கள், காகிதங்கள் பொறுக்குவது, சாலையில் நிற்கும் கார்களைத் துடைப்பது, நெடுந்தொலைவு இரயில் வண்டிகளைக் கூட்டுவது போன்ற அற்ப வேலைகள் செய்து பிழைக்கிறார்கள். எப்போதும் தொற்றுநோயும் பசியும் கவ்விக் கொண்டுள்ள இச்சிறார்களுக்கு வீசியெறியப்படும் கந்தலே உடை, மேலே கூரை கிடையாது, கீழே விரிப்பு கிடையாது, நடைபாதையில் கோணிப் பைகளைப் போர்த்திக் கொண்டு பயங்கரக் கனவுகளோடு தூங்குகிறார்கள். பட்டினி, தொற்றுநோய், உடல் ஊனம், சாராயம் - போதை மருந்து கிரிமினல்கள், போலீசின் தாக்குதல்கள் சாவும் கூட அவர்களுக்குப் பழகிப் போய்விட்டது. அவர்கள் எல்லோரும் பெற்றோர் இல்லாத அனாதைகள் அல்ல. இருந்தும் கைவிடப்பட்டவர்கள் அல்லது பெற்றோர்களும் தெருவாசிகள்.

இந்தத் தெருச் சிறார்கள் பன்னாட்டு தேசங்கடந்த கம்பெனிகளுடைய சுதந்திரச் சந்தையின் மறுபக்கம்; சுதந்திரச் சந்தையின் கழிவுகள். சுதந்திரச் சந்தைக்குத் தேவையானவர்கள் எல்லாம் பொம்மைகள் அச்சிட்ட சட்டையும், ஜீன்ஸ் பேண்டும், நைக்ஸ் முழுக் காலனியும் அணிந்த கொழு கொழு சிறார்கள். வெண்ணையும் பழத்துண்டுகளும் நிரப்பிய மெக்டொனால்டு பண் ரொட்டிகளை விழுங்கி, யாங்கீ டூடுல், ஐஸ்கிரீம் உறிஞ்சி, கோக் அல்லது பெப்சி குடித்து, ''டோஜோ''க்களைச் சுண்டிவிட்டு, வீடியோ விளையாட்டுக் குறுந்தகடுகளையும் டெட்டி கரடியையும் வாரிக் கொண்டு போகும் சிறார்கள். கூடவே பணம் பிதுங்கும் பாக்கெட்டுகள், கைப்பைகளுடன் பெற்றோர்கள். இதன்மூலம் நடப்பது திண்பண்டங்கள், விளையாட்டுப் பொருட்களின் விற்பனை மட்டுமல்ல; அமெரிக்கப் பண்பாட்டுப் படையெடுப்பு, ஆக்கிரமிப்பு. எங்கே போனது இந்திய தேசியம்? இதற்குக் காவடி தூக்குகிறது!



படிப்பகம்

www.padippakam.com

# புதிய அடிமைத்தனம்

எனது நண்பர் மதி நல்ல ஓவியர். ஓவியக்கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே நன்னிலம் சுற்று வட்டாரங்களில் விளம்பரப் பலகையின் மூலமாகப் பலரது கண்களைக் கவர்ந்தவர். கூடுதலாக ஓவியத்துறையில் சாதனை படைக்கும் ஆர்வமும் உந்தித் தள்ள சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

''அந்த ஆர்ட் டைரக்டரைப் பார்த்து அசிஸ்ட்டென்டாக சேரப் போகிறேன் நீ கூட வந்தா வீட்டைக் கண்டுபிடிக்க உதவியா இருக்கும். வா''.

மதி கட்டாயப்படுத்த போக வேண்டியதாயிற்று. ''கௌரவமும் கிடைக்காது, நீ நெனைக்கிற மாறி சிறந்த கலைஞனாகவும் ஆக முடியாது, நான் என்ன....'' நான் பேசி முடிப்பதற்குள் மதி இடை மறித்தான்.

''யப்பா வாதமே வேணாம், உங்க அரசியலைப் பேசி என்னைக் குழப்பிடாதே. தயவு செய்து பேசாம இருக்கியா.'' மதியின் தெளிவான அரசியலை தெரிந்து கொள்ளக் காத்திருக்கத் தயாரானேன்.

அந்த ஆர்ட் டைரக்டரின் வீட்டு கேட்டுக்கு வெளியே வெயில் கடுமையாக எங்களை விசாரித்துக் கொண்டிருந்தது. தயக்கத்துப் பிறகு அழைப்பு மணி பொத்தானை மதி அழுத்தினான்.

''யாருப்பா அது? என்ன வேணும்'' எங்களை வெளியில் வைத்தே விசாரித்த அந்தக் குரலோடு கன்றுக்குட்டியளவில் வந்த ஒரு நாயும் தன் பங்குக்கு விசாரித்தது.

''நான் நன்னிலத்திலிருந்து வர்றேன். சாருடைய பிரண்ட் வெங்கடேஷ் லெட்டர் குடுத்து அனுப்பிச்சார், சாரைப் பார்க்கணும்''

''சார் சூட்டிங் முடிச்சு வந்து தூங்கரார். லஞ்ச் அவர் வாங்க'' எங்களது ஆமோதிப்பை எதிர்பார்க்காமல் உள்ளே போனார் பெண்மணி.

''கிராமத்திலே திண்ணையில் உக்கார வச்சு தண்ணியாவது தருவாங்க, தெருவிலேயே பேசி அனுப்பிட்டாங்க பாத்தியா''

எனது பேச்சை ஆமோதிப்பதற்குப் பதில் மதி அலுத்துக் கொண்டான்.

''இதெல்லாம் மெட்ராஸ்ல பெரிய விசயமா? சினி ஃபில்டு ஆளுங்களைப் பத்தி உனக்கு இன்னுந் தெரியல ரவி வா திரும்ப வருவோம்'' என்றான்.

நண்பர்கள் வட்டாரத்தில் யாராவது வா என்றழைக்கா விட்டால் ''இவன்லாம் ஒரு மனுசனாடா'' என்று கோபம் கொள்கிற மதியா இவன் என்று நான் திகைத்துப் போனேன். 'லஞ்ச் அவரி'ல் குறியாய் இருந்தான் மதி. அழைப்பு மணி சடங்கிற்குப் பிறகு வந்த பெண்மணி ''சார் இப்பதான் லஞ்ச் முடிச்சி ரிலாக்ஸ் பண்ணிக்கிட்டு இருக்காரு. இப்ப அவரை டிஸ்டர்ப் பண்ண முடியாது. ஈவினிங் வாங்க'' என்று போய்விட்டார்.

''என்னடா இவன் நம்ம ஊரு பண்ணையாரை விட மோசமான ஆளா இருப்பான் போல இருக்கு. வீடு தேடி வந்த ஆள பாக்கறதுக்கு இவ்வளோ பந்தா காட்ரான். இவன்ட போயி என்னடா கத்துக்கப் போற.'' மதி திரும்பவும் எனக்குப் புத்தி சொல்ல ஆரம்பித்தான்.

''என்ன நீ இவ்ளோ சீப்பா பேசற. அவர் எவ்ளோ பெரிய ஆர்ட்டிஸ்ட் தெரியுமா. எவ்வளவோ பேரு அவரப் பாக்க அப்பாய்ண்ட்மென்ட் இல்லாம தவிக்கிறாங்க, நம்மள ஈவினிங் வரச்சொன்னது பெரிய விசயம் தெரியுமா.''

பார்க்க வேண்டிய ஆள் உள்ளே இருந்து கொண்டு கேட்டைக் கூடத் திறக்காமல் மதியம் வா, சாயங்காலம் வா என்று அலைய விடுவது என் மான உணர்ச்சியைப் பிடுங்கித் தின்றது. இதை மதியிடம் புரியவைக்கும் என் முயற்சி தோற்றுப் போனது.

சாயங்காலம் ஆர்ட் டைரக்டரின் வீடு பரபரப்பாய் இருந்தது. ''டிரைவர் வண்டிய எடு'' என்று சொல்லிய வண்ணம் ஆர்ட் டைரக்டர் படி இறங்க, காத்திருந்த மதி வேகமாக சிபாரிசு கடிதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அவரை நெருங்க எத்தனித்தான்.

அதற்குள் ஆர்ட் டைரக்டரின் உதவியாளர் ''கிளம்புற நேரத்தில மேனர்சே இல்லாம எதுத்தாப்ல வற்ரே'' என்று எரிந்து விழ மதி திடுக்கிட்டுப் போனான். 'சாரி சார், சார் ஈவினிங் வரச் சொல்லி இருந்தாரு'', என்று மதி முடிப்பதற்குள் உதவியாளர் ''சரி நீங்க லெட்டர் குடுத்துட்டுப் போங்க. சாருக்கு லேட்டாவுது, யாரையும் வீட்ல பாக்குறது சாருக்கு பிடிக்காது. நீங்க நாளைக்கு ஏவிஎம் கிரௌண்ட் ஃபிளோருக்கு வந்து என்னப் பாருங்க, அப்பாயிண்ட் மென்ட் ஃபிக்ஸ் பண்ணிக்கலாம்'' மதி அவசரமாக தனது ஓவியத் தொகுப்பை நீட்ட ''நோ, நோ மொதல்ல இங்கேருந்து நகருங்க, சாருக்கு இந்தமாறி வாசல்ல டிஸ்கசன்லாம் பிடிக்காது''

காரில் ஏறியபடியே ஆர்ட் டைரக்டர் ''என்ன ரமேஷ்'' என்று அழைப்புவிட, நாங்கள் நகர்ந்து கொள்ள கார் சீறிப்பாய்ந்து எங்களைக் கடந்து சென்றது.

இப்பொழுதாவது மதியின் மான உணர்ச்சி தூண்டப்பட்டு மாயை கலைந்திருக்கும் என்று அவன் முகத்தைப் பார்த்தேன்.

''என்ன ரவி நாளைக்கு ஏவிஎம் போவலாமா'' என்று அவன் உற்சாகமாகக் கேட்க நான் உறைந்து போனேன்.

''பொழுதன்னைக்கும் வயல்ல வேல செஞ்சுட்டு சாயங்காலம் ஆனா வொடையார் எப்போ கூலி தருவார்னு வாசல்ல காத்துக் கெடக்கறது எந்தலையோட போகட்டுன்னு ஒங்கப்பா சொல்லுவார்னு அடிக்கடி சொல்லுவ, இப்பக் காத்துக் கெடந்தியே அதுக்கு என்னடா அர்த்தம்'' என்று கேட்க ''நீ ரொம்ப உணர்ச்சி வசப்படற ரவி. அது வேற இது வேற'' என்றவன் ''சரி ஏவிஎம் ஸ்டுடியோவுக்கு எப்படிப் போகணும்?'' என்றான்.

''உன்னமாதிரி மரத்துபோவணும்.'' என்றவுடன் சுயநினைவுக்கு வந்தவன் போல் என்னை வெறித்துப் பார்த்தான் மதி.

— ர. சுடர் விழி

> ''என்னடா இவன் நம்ம ஊரு பண்ணையாரை விட மோசமான ஆளா இருப்பான் போல இருக்கு. வீடு தேடி வந்த ஆள பாக்கறதுக்கு இவ்வளோ பந்தா காட்ரான். இவன்ட போயி என்னடா கத்துக்கப் போற.''



படிப்பகம்

www.padippakam.com

# அறிவாளியா, உளவாளியா

பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் ஒரு மாபெரும் அறிஞர், கணித விஞ்ஞானி, சமூகவியல் ஆய்வாளர், எழுத்தாளர், ஜனநாயகவாதி, நாத்திகர், கல்வியாளர் என்றெல்லாம் அறியப்படுபவர் பாடநூல்களில் அவரது கட்டுரைகள் இடம் பெறுகின்றன. அவருடைய நூல்கள் இன்றும் உலகெங்கிலும் விற்பனையாகின்றன.

அப்பேர்ப்பட்ட அறிஞர் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் உளவாளியாக இருந்தார் என்றால் நம்பமுடிகிறதா? நம்ப இயலாவிட்டாலும் அதுதான் உண்மை.

பிரிட்டிஷ் உளவுத்துறையே இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறது. "ஒரு அறிஞர் என்ற முறையின் கம்யூனிச எதிர்ப்பு நூல்கள் எழுதவேண்டும்; தமக்கு அறிமுகமாகின்ற நண்பர்களில் கம்யூனிஸ்டுகள் மற்றும் கம்யூனிச ஆதரவாளர்கள் யார் யார் என்பதை போலீசுக்குக் காட்டிக் கொடுக்க வேண்டும். இந்த முக்கியமான பணிகளுக்காகத்தான் அவருக்கு சம்பளம் கொடுத்தோம்" என்கிறது பிரிட்டிஷ் உளவு நிறுவனம்.

ரஸ்ஸல் மட்டுமல்ல, ஜார்ஜ் ஆர்வெல், ஸ்டீபன் ஸ்பெண்டர், ஆர்தர் கீஸ்லர் ஆகிய நான்கு பிரபல அறிவாளிகள் உண்மையில் கம்யூனிச எதிர்ப்பு உளவாளிகள் என்கிறது பிரிட்டிஷ் உளவு நிறுவனம். அறிவுலகத்தினரைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கிய இச்செய்தி 1996 ஜூலையில் வெளியாகியிருக்கிறது. இது பற்றி ஃபிரான்டியர் வார இதழ் சமீபத்தில் வெளியிட்டுள்ள ஓர் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகிறது.

● ● ●

ரஸ்ஸல் இங்கிலாந்தின் மிகப்பெரிய பிரபுக்களின் குடும்பத்தில் பிறந்தவர். அவரது பாட்டனார் பிரிட்டிஷ் பிரதமர். இளமைக்காலத்திலிருந்தே ரஸ்ஸல் இடதுசாரியாக இருந்தாலும் "கம்யூனிஸ்டு அல்லாத இடது சாரியாக இருக்க வேண்டும் என்பதில் வெகு கவனமாக இருந்தவர்.

எனவே ரசிய சோசலிசப் புரட்சி வெற்றி பெற்றவுடனேயே அதை எதிர்த்தார். பிறகு 1920 இல் ரசியா சென்று லெனினையும் சந்தித்தார். திரும்பி வந்தவுடன் "போல்ஷ்விக் கோட்பாடும் நடைமுறையும்" என்ற நூலின் மூலம் தனது மார்க்சிய எதிர்ப்பை மீண்டும் உறுதி செய்தார்.

மார்க்சிய தத்துவம், பொருளாதாரம் இரண்டையுமே அவர் நிராகரித்தார். ஒரு குறிப்பிட்ட உலகக் கண்ணோட்டம், அதன் அடிப்படையில் வரலாற்றைப் புரிந்து கொள்வது, புதிய சமுதாயத்தை அமைக்கப் போராடுவது என்பதெல்லாம் தவறு என்று அவர் கருதினார்.

ஒரு கொள்கையின் மீது நம்பிக்கை வைத்து அதன் வெற்றிக்காகப் பாடுபடுபவர்கள் வன்முறையிலும் கொலைவெறியாட்டத்திலும் ஈடுபடத்தயங்க மாட்டார்கள் என்பதும் அந்த வகையில் மதம், நாசிசம், கம்யூனிசம் ஆகியவை அனைத்தும் ஒன்றே என்பதும் அவர் கருத்து. ஐயவாதமும் அறியொணாவாதமும் 'சிந்தாந்தம்' என்ற ஒன்று இல்லாதிருப்பதும்தான் சகிப்புத்தன்மைக்கும் ஜனநாயகத்திற்கும் அடிப்படையானது என்று அவர் கருதினார்.

ஆனால் இரண்டாம் உலகப்போர் முடிந்தவுடனே ரஸ்ஸல் வெளியிட்ட ஒரு அறிவிப்பு அனைவரையும் துணுக்குறச் செய்தது. அளப்பரிய தியாகங்கள் செய்து நாஜி ஜெர்மனியை முறியடித்திருந்தார்கள் ரசிய மக்கள். உலக மக்களும், ஒடுக்கப்பட்ட நாடுகளும் கம்யூனிசத்தை நோக்கியும், ரசியாவை நோக்கியும் ஈர்க்கப்பட்டனர். கம்யூனிசக் கொள்கை காட்டுத்தீயாய்ப் பரவிய காலமது.

அப்போது ரஸ்ஸல் அறிவித்தார்: "ரசியா மேலை நாடுகளிடம் நிபந்தனையின்றிச் சரணடைய வேண்டும். இல்லையேல் அதனை அணுகுண்டு வீசி அழித்துவிட வேண்டும்."

ஒரு கொள்கைக்காகத்தான் என்றாலும் வன்முறையில் ஈடுபடக் கூடாது என்று பேசிய அகிம்சாவாதி, கம்யூனிசக் கொள்கையைப் பின்பற்றுகிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக ஆறில் ஒரு பங்கு மனித இனத்தையே அழிக்கக் கோரியதை என்னவென்பது?

ஆனால் 60 - களில் ரஸ்ஸல் மீண்டும் 'ஜனநாயகவாதி' ஆகிவிட்டார். அணு ஆயுத எதிர்ப்பியக்கத்தை முன்நின்று நடத்தினார். அதற்காகக் கைது செய்யப்பட்டார். இதற்குக் காரணம் சமாதானத்தில் நாட்டமா, அல்லது ரசியாவும் அணுகுண்டு தயாரித்துவிட்டது என்ற அச்சமா எனும் கேள்வி எழுகிறது.

அதேபோல அமெரிக்காவின் வியத்நாம் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் இயக்கம் நடத்தினார் ரஸ்ஸல். அந்த காலகட்டத்தில் உளவு நிறுவனத்துடன் அவருக்கிருந்த உளவு அறுபட்டதால் இந்த 'ஜனநாயக உணர்வு' தோன்றியதா, அல்லது உலகு தழுவிய அமெரிக்க எதிர்ப்பு கம்யூனிச ஆதரவாக மாறிவிடாமல் தடுக்க பிரிட்டிஷ் உளவுத் துறை தீட்டிய திட்டத்தின் அங்கம்தான் ரஸ்ஸலின் அமெரிக்க எதிர்ப்பா என்ற கேள்வியும் எழுகிறது.

● ● ●

ஜார்ஜ் ஆர்வெல் இந்தியாவில் பிறந்து பர்மாவில் சிறிது காலம் போலீஸ் அதிகாரியாகப் பணியாற்றிய பிரிட்டிஷ்காரர். பிறகு அவர் ஒரு 'சுதந்திர' இடதுசாரி எழுத்தாளராக அறியப்பட்டார்.

1943 இல் ஜெர்மனியின் ஆக்கிரமிப்புக்கெதிராக ரசிய மக்கள் போராடிக் கொண்டிருந்தபோதுதான் கம்யூனிசத்தை இழிவு படுத்தும் **'விலங்குப் பண்ணை'** எனும் நாவலை எழுதினார் ஆர்வெல்.

இரண்டாவது உலகப்போர் முடிந்தபின் ரசியாவுக்கெதிரான பனிப்போரை அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் தொடங்கின. அந்தத் தருணத்தில்தான் வெளிவந்தது ஆர்வெல்லின் "1984" எனும் நாவல்.

ஆர்வெல்லின் இந்த இரண்டு கம்யூனிச எதிர்ப்பு நாவல்களையும் பிரபலப்படுத்தி விற்பனை செய்யுமாறு மூன்றாம் உலக நாடுகளிலுள்ள தனது தூதரகங்களுக்கு உத்தரவிட்டது பிரிட்டிஷ் அரசு. குறிப்பாக முஸ்லீம்கள் பன்றிகளையும் நாய்களையும் வெறுப்பவர்களாதலால், "விலங்குப் பண்ணை நாவலில் வரும் பன்றி, நாய் ஆகிய பாத்திரங்கள் கம்யூனிஸ்டுகளைத்தான் குறிக்கின்றன" என்று இசுலாமிய நாடுகளில் பிரச்சாரம் செய்யுமாறும் தனது தூதரகங்களுக்கு வழிகாட்டியது.

பிரிட்டிஷ் உளவு நிறுவனத்தில் முக்கியப் பொறுப்பில் பணிபுரிந்த செலியா என்ற பெண் 1996 இல் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்:

"1949 இல் ஆர்வெல்லை கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரம் மற்றும் உளவு வேலை தொடர்பாக சந்தித்தேன். அவருக்கு இவ்வேலையில் பெரும் ஆர்வம்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தபோதிலும் உடல்நிலை சரியில்லாததால் இயலவில்லை என்று கூறிவிட்டு, பத்திரிகைத்துறையில் உள்ள கம்யூனிச ஆதரவாளர்கள் யார் யார் என்ற பட்டியலைக் கொடுத்தார். தான் ஆள் காட்டிய விசயம் வெளியே தெரிய வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டார்.''

சமுதாயம் முழுவதையும் எப்போதும் வேவு பார்த்துக் கொண்டிருக்கும் அரசுதான் சோசலிச் அரசு என்று சித்தரிப்பதற்காக ''1984'' எனும் நாவலில் ஆர்வெல் உருவாக்கியது தான் ''பெரியண்ணன் உன்னைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறான்'' (Big Brother is watching you) என்ற பிரபலச் சொற்றொடர்.

ஆனால் இந்தச் சொற்றொடரை உருவாக்கிய 'மேதை'யோ ஒரு போலீசு உளவாளி!

● ● ●

ஸ்பென்டர் 1930 களில் பிரிட்டனில் இருந்த பிரபல இடதுசாரி கவிஞர்களில் ஒருவர். பின்னர் இவர் ஒரு வன்மம் கொண்ட கம்யூனிச எதிர்ப்பாளராக மாறினார்.

பனிப்போர் காலகட்டத்தில் விதவிதமான கம்யூனிச எதிர்ப்புப் பத்திரிகைகள் மேற்குலகிலிருந்து வெளியாயின. ரீடர்ஸ் டைஜஸ்ட் போன்றவை அத்தகைய சனரஞ்சகப் பத்திரிகைகள். **'என்கவுண்டர்' (ENCOUNTER)** (சந்திப்பு அல்லது மோதல் என்று பொருள்) என்ற பத்திரிகை 'அறிவுத்தரம்' கொண்ட ரகத்தைச் சேர்ந்தது.

ஸ்பென்டர் இந்தப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். ''பண்பாட்டு சுதந்திரத்திற்கான காங்கிரஸ்'' என்ற அமைப்பு இந்தப் பத்திரிகைக்கு நிதி கொடுத்து வந்தது.

இந்தப் பத்திரிகை அமெரிக்க உளவு நிறுவனத்தால் (சி.ஐ.ஏ) நடத்தப்படுகிறது என்ற ரகசியத்தை **கனார் க்யூரி ஓ ப்ரியன்** என்ற ஐரிஷ் ராசதந்திரி அறுபதுகளின் மத்தியில் வெளியிட்டார். உடனே ஸ்பென்டரும் அவருடன் சேர்ந்த அறிவாளி/உளவாளிகளும் இதை மறுத்தனர்.

ஆனால் என்ன துரதிருஷ்டம்! ''நாங்கள் தான் பணம் கொடுக்கிறோம்'' என்ற உண்மையை அமெரிக்க உளவு நிறுவனமே ஒப்புக்கொண்டது. உடனே கவிஞர் ஸ்பென்டர் பல்டியடித்தார். தனக்கு எதுவுமே தெரியாதென்றும் தான் ஏமாற்றப்பட்டு விட்டதாகவும் புலம்பினார். ஆசிரியர் பதவியையும் உடனே ராஜினாமா செய்தார்.



***மார்க்சிய தத்துவம், பொருளாதாரம் இரண்டையுமே, பெர்டான்டு ரஸ்ஸல் நிராகரித்தார். ஒரு குறிப்பிட்ட உலகக் கண்ணோட்டம், அதன் அடிப்படையில் வரலாற்றைப் புரிந்து கொள்வது, புதிய சமுதாயத்தை அமைக்கப் போராடுவது என்பதெல்லாமே தவறு என்று கருதினார்.***

ஆனால் இந்த 'அப்பாவி முற்போக்குக் கவிஞர்' பிரிட்டிஷ் உளவாளியாகவும் இருந்திருக்கிறார் என்ற உண்மை இப்போது வெளிவந்துள்ளது.

தனது பத்திரிகைக்கு யார் பணம் தருகிறார்கள், என்ன நோக்கத்துக்காகப் பணம் தருகிறார்கள் என்பதெல்லாம் கவிஞர் ஸ்பெண்டருக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கிறது. ராஜினாமா நாடகமெல்லாம் ''சுதந்திரமான முற்போக்குக் கவிஞர்'' என்ற தன்னைப் பற்றிய கருத்துருவைப் பாதுகாத்துக் கொள்ளும் கீழ்த்தரமான மோசடியே.

உளவாளி என்று ஊர் சிரித்துப் போனபின்னரும் 'அறிவாளி'யின் ஆன்மா தனது கவுரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள எத்தனை தந்திரங்கள் செய்கிறது!

● ● ●

**கீ**ஸ்லர் பிரிட்டிஷ்காரரல்ல. ஹங்கேரி நாட்டுக்காரர். பிறப்பால் யூதர். 30 களில் ஜெர்மன் கம்யூனிஸ்டு கட்சியில் சேர்ந்தார். சோவியத் யூனியனுக்கும் சென்று வந்தார்.

ஸ்பெயினில் நடந்த பாசிச எதிர்ப்புப் போரில் பங்கேற்றுக் கைது செய்யப்பட்டார். பிறகு சர்வதேச நிர்ப்பந்தம் காரணமாக விடுதலை செய்யப்பட்டார். அந்தப் போரில் அவர் பாசிச எதிர்ப்புப் பத்திரிகையாளராகச் செயல்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஒருவேளை அப்போதே அவர் உளவாளியாகவும் இருந்தாரா எனத் தெரியவில்லை.

கீஸ்லரின் பிரபலமான (பிரபலம் ஆக்கப்பட்ட) நூல் ''பகலில் இருள்'' தோழர் ஸ்டாலினைக் கொடுங்கோலனாகச் சித்தரிக்கும் நூல் இது.

சோவியத் அரசுக்கெதிராகச் சதி செய்ததற்காக புகாரின், ஜினோவியேவ் போன்ற மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் மீது அப்போது நீதிமன்ற விசாரணை நடந்தது. பகிரங்கமாக நடைபெற்ற இந்த விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். தண்டனை விதிக்கப்பட்டனர்.

சோவியத் ஆட்சியை ஒழிப்பதற்கு அப்படியொரு சதியை மேலை ஏகாதிபத்தியங்கள் செய்தன என்பதும் பலவிதமாக நிருபிக்கப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, இந்த விசாரணை தொடர்பாக கீஸ்லர் எழுப்பும் கேள்வி முக்கியமானது. ''அவர்கள் ஏன் குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள்?'' என்று கேட்கிறார் கீஸ்லர். உலகப் பத்திரிகையாளர்களின் முன்னிலையில் பகிரங்கமாக விசாரணை நடைபெற்றதால் மிரட்டி ஒப்புதல் வாக்குமூலம் வாங்கிவிட்டார்கள் என்றும் கீஸ்லரால் சொல்ல முடியவில்லை. ''அவர்கள் இத்தனை காலம் பொருள் முதல்வாதிகளாக இருந்தார்கள்; எனவே மார்க்சியம்தான் அவர்களுடைய எதிர்ப்புணர்வையே உறிஞ்சி விட்டது'' என்கிறார் கீஸ்லர்.

இந்தக் கூற்று கோமாளித்தனமானது என்பது ஒருபுறமிருக்கட்டும். இந்தக் 'கோமாளித்தனத்தின்' தத்துவ ஞானம் எது என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

கம்யூனிசக் கோட்பாட்டிற்கு எதிரான கீஸ்லரின் மையமான வாதத்தில் அது வெளிப்படுகிறது.

''நாம் முரணற்றவர்கள் அல்ல; முரணற்றவர்களாக மாற வேண்டும் என்பதற்கான முயற்சி நம்மை எங்கே கொண்டு சேர்க்கும் தெரியுமா? அதோ கம்யூனிஸ்டுகளைப் பாருங்கள்!'' என்கிறார் கோஸ்லர்.

முரண்பாட்டை 'உறிஞ்சும்' மார்க்சியத்தின் முயற்சி, எதிர்ப்பு உணர்வை உறிஞ்சும் நடவடிக்கையாகக் கீஸ்லருக்குப்படுகிறது. 'தவறிழைத்தவன் தன்னுடைய தவறை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்' என்பதுதான் கீஸ்லரின் கேள்வி.

எனவே சொல்லுக்கும் செயலுக்கும், தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் இடையில் உள்ள முரண்பாட்டைக் களைவதற்கு மார்க்சியம் மேற்கொள்



படிப்பகம்

www.padippakam.com

ளும் முயற்சி அவருக்குத் தீயொழுக்கமாகவும், மோசடியாகவும் படுகிறது.

முரண்பாடுகளுடன் வாழ்வதை ஏற்றுக் கொள்வதும், அதை அங்கீகரிப்பதுமே நல்லொழுக்கமாகவும், நேர்மையாவும் அவருக்குத் தெரிகிறது.

எனவே ஏற்றத்தாழ்வு, சுரண்டல், கொடுமைகள் ஆகிய அனைத்து முரண்பாடுகளும் நிறைந்த முதலாளித்துவம், அதன் முரண்பட்ட நிலையின் காரணமாகவே ஒழுக்கமானதாகவும், எனவே சுதந்திரமானதாகவும் அவருக்குத் தோன்றுகிறது.

நாஜிகளும், கம்யூனிஸ்டுகளும் மதவாதிகளும் ஒரே ரகம்தான் என்று ரஸ்ஸல் கூறியதைப் போலவே கீஸ்லரும் கூறுகிறார், ''ஸ்பெயின் நாட்டின் பாசிச சர்வாதிகாரமும் சோவியத்தின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் ஒன்றுதான். பிராங்கோ தனது சர்வாதிகாரத்தை ஸ்பெயினுடன் நிறுத்திக் கொள்கிறான்; ரசியாவோ அதை உலகெங்கும் பரப்ப முயல்கிறது.''

கீஸ்லரின் கவலை கம்யூனிச அபாயம் பற்றித்தான். மெக்கார்த்தியிசம் என்ற வெறிகொண்ட கம்யூனிச எதிர்ப்புக் கொள்கை அமெரிக்க அரசால் அமல்படுத்தப்பட்டு கம்யூனிஸ்டுகளும், கம்யூனிச ஆதரவாளர்களும் வேட்டையாடப்பட்டபோது அவர் மெக்கார்த்தியிசத்தை ஆதரித்தார்.

''மேற்கத்திய ஜனநாயக நாடுகள் பாசிசத்திற்கெதிராக சோவியத் யூனியனுடன் ஐக்கிய முன்னணி அமைத்ததைப் போல, இன்று கம்யூனிசத்திற்கெதிராக ஜனநாயகவாதிகளாகிய நாம் மெக்கார்த்தியுடன் ஐக்கிய முன்னணி அமைக்க வேண்டும்'' என்றார் கீஸ்லர்.

''முதலாளித்துவ சர்வாதிகாரமும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் ஒன்றே'' என்று சொல்லி இரண்டையும் எதிர்ப்பதாகப் பம்மாத்து காட்டும் அறிஞர்கள், தீர்மானகரமான தருணங்களில் முதலாளித்துவத்தின் வெறிபிடித்த ஏவல் நாயாகத்தான் மாறுவார்கள் என்பதற்கு இது இன்னுமோர் சான்று.

● ● ●

இந்த நூற்றாண்டின் மாபெரும் ஜேம்ஸ்பாண்டுகள்! இந்த அறிவாளிகள் ஏன் உளவாளிகள் ஆனார்கள் என்ற கேள்வியைக் காட்டிலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் உளவுத்துறை இந்த அறிவாளிகளை ஏன் உளவாளிகளாகத் தேர்ந்தெடுத்தது என்பதுதான் விடை காண வேண்டிய முக்கியமான கேள்வி.

இவர்கள் நான்கு பேருமே இடது



**கம்யூனிச எதிர்ப்பையே மூலதனமாகக் கொண்டு கோடி கோடியாகச் சம்பாதித்திருக்கும் ஜார்ஜ் ஆர்வெல் என்ற இந்த உளவாளி - அறிவாளி 1949-இல் செத்துப் போனது, பிரிட்டிஷ் - அமெரிக்க ஏகாதிபத்தியங்களுக்கு மாபெரும் இழப்புதான்!**

சாரிகளாக அறியப்பட்டவர்கள்.

சோசலிசத்தை ''விலங்குப்பண்ணை'' எனத் தூற்றி நூல் வெளியிட்ட கம்யூனிச எதிர்ப்பு நச்சுப்பாம்பான ஜார்ஜ் ஆர்வெல், கம்யூனிச எதிர்ப்பு நஞ்சைச் கக்கும் ஒவ்வொரு முறையும் ''தான் சோசலிச எதிர்ப்பாளன் அல்ல'' என்று கூறிக்கொள்ளத் தவறியதே இல்லை.

கீஸ்லரோ முன்னாள் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்; ஸ்பென்டர் இடதுசாரி முற்போக்குக் கவிஞர்; ரஸ்ஸலோ 'மாபெரும்' முற்போக்காளர்.

''பாருங்கள், சோசலிசத்தைப் பற்றி நாங்கள் (அதாவது முதலாளிகளாகிய நாங்கள்) குறை சொல்லவில்லை. அப்பேர்ப்பட்ட ரஸ்ஸலும், ஆர்வெலும், கீஸ்லரும் ரசியாவைப் பற்றி என்ன சொல்கிறார்கள் பாருங்கள்! அப்பேர்ப்பட்ட முற்போக்காளர்கள் ஏன் பொய் சொல்ல வேண்டும்? யோசித்துப் பாருங்கள்!''

இதுதான் இவர்களைப் பயன்படுத்திய முதலாளித்துவத்தின் ஒரே வாதம். முன்னாள் கம்யூனிஸ்டுகள், அல்லது இடதுசாரிகள் என்ற பட்டம்தான் இவர்களது பொய்களும் பித்தலாட்டங்களும் புனிதத்தன்மை பெறுவதற்குப் பயன்பட்ட ஒரே தகுதி.

ஏகாதிபத்திய போலீசின் மோப்ப நாய்களான இந்த அறிவாளிகளுக்கு, செத்தபிறகும் இடதுசாரி ஒளிவட்டத்தை விட்டுவிட மனமில்லை. ஆர்வெல் ஒரு உளவாளி என்ற செய்தியை 1996 இல் வெளியிட்ட பிரிட்டிஷ் உளவு நிறுவன அதிகாரி செலியா மறக்காமல் அதற்கு ஒரு பின்குறிப்பு தருகிறார்.

''ஆர்வெல் சோசலிசத்துக்குத் துரோகம் செய்யவில்லை. அவர் கம்யூனிசத்தைத்தான் எதிர்த்தார். மக்கள் இதைக் குழப்பிக் கொள்ளக் கூடாது''

நாங்கள் கட்சியைத்தான் எதிர்க்கிறோம் - கம்யூனிசத்தை அல்ல என்பதும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தான் எதிர்க்கிறோம் - சோசலிசத்தை அல்ல என்பதும், யுரோ கம்யூனிசம், பிராங்பர்ட் மார்க்சியம், கட்சி சாராத மார்க்சியம், புதிய இடது ஆகியவையும், கம்யூனிசத்தின் மீதான இடதுசாரி விமர்சனம் ஆகியவையும் ஆர்வெல் - செலியாவின் சந்ததிகளே!

ஆனால் அன்றைய சூழலுக்கும் இன்றைய சுழலுக்கும் பாரிய வேறுபாடுகள் உள்ளன. ரசியப் புரட்சியின் வெற்றியும், இரண்டாம் உலகப் போரில் பாசிசத்திற்கு எதிரான சோசலிசத்தின் வெற்றியும் உலகெங்கும் கம்யூனிச ஆதரவு எழுச்சியை உருவாக்கியிருந்தன. உலகெங்கும் அறிவுத்துறையினர் மார்க்சியத்தின் பால் பெருமளவில் ஈர்க்கப்பட்டனர். மார்க்சியத்திற்கு மாற்றாக வேறு எந்த 'இயமும்' இல்லை.

இன்றோ சோசலிசம் பெரும் பின்னடைவைச் சந்திந்துள்ள காலம். கறுப்பியம், பெண்ணியம், தலித்தியம், சுற்றுச்சுழலியம் — என ஒன்றையொன்று ஊடறுக்கும் பல்வேறு இயங்களையும், எந்த இயமும் வேண்டாமெனும் பின் நவீனத்துவத்தையும் ஏகாதிபத்தியங்கள் சீராட்டி வளர்க்கின்றன. அமெரிக்க அங்கீகாரம் பெற்ற இந்த 'கலகக் கோட்பாடுகள்' பல்கலைக் கழகங்களாலேயே சந்தைப்படுத்தப்படுகின்றன.

அதுமட்டுமல்ல; உளவு என்ற 'அநாகரிகமான' சொல் நீக்கப்பட்டு அது 'தொண்டு' 'ஆய்வு' என்பதாகக் கவுரவமாக அழைக்கப்படுகிறது. தனியார் மயமாக்கலுக்கு 'சீர்திருத்தம்' என்று பெயர் சூட்டியிருப்பது போல! இன்டெலிஜென்ஸ் ஏஜென்சிக்கு (உளவு நிறுவனம்) இப்போது வாலன்டரி ஏஜென்சி (தன்னார்வத் தொண்டு நிறுவனம்) என்று பெயர்.

ஆர்வெல்லை செலியா ரகசியமாகச் சந்தித்ததைப் போன்ற துன்பமோ, என்கவுன்டர் பத்திரிகைக்கு சி.ஐ.ஏ விடம் காசு வாங்கிய கவிஞர் ஸ்பென்டரின் 'தர்ம'சங்கடமோ இப்போது தேவையில்லை.



படிப்பகம்

www.padippakam.com

எந்தவித சங்கடமும் இல்லாமல் சி.ஐ.ஏ வின் தருமத்தை அறிவாளிகள் பெற்றுக் கொள்ளலாம். பலவிதமான காலனியாக்க வேலைகளுக்கும் கம்யூனிச எதிர்ப்பு வேலைகளுக்கும் உளவாளிகள் தேவை என்று ஆங்கில ஏடுகளில் விளம்பரமே தருகிறார்கள். கூச்சமோ தயக்கமோ இல்லாமல் அறிவாளிகள் விண்ணப்பிக்கலாம். ஆய்வாளர், பணியாளர், திட்ட இயக்குனர், ஒருங்கிணைப்பாளர் என்பனவெல்லாம் உளவாளிகளுக்கு அவர்கள் வழங்கியுள்ள சங்கேதப் பெயர்கள்.

வறுமை, சாதி, தீண்டாமை, பெண்ணடிமைத்தனம் ஆகிய அனைத்து கொடுமைகளையும் 'ஒழிக்க' அமெரிக்க, பிரிட்டிஷ், ஜெர்மன் முதலாளிகள் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவை விவரங்கள். தமிழகத்தில் தலித் சாதிகள் எத்தனை, தீண்டாமையின் வடிவங்கள் என்ன, சாதி முரண்பாடுகளின் வரலாறு என்ன, அரசியல் கட்சிகளின் பாத்திரம் என்ன போன்ற பல விவரங்கள்.

புரட்சிகர இயக்கங்களையும், போராளி அமைப்புகளையும் தன்னுடைய உளவுத் துறையால் சரியாக வேவு பார்த்து விவரம் திரட்ட முடிவதில்லை என்பதால் ஊனமுற்றவர்கள், பிச்சைக்காரர்கள், தொழுநோயாளிகள் போன்றோரை குறிப்பிட்ட வேலைக்கான (piece rate) உளவாளிகளாக நம்மூர் காவல் துறை நியமித்துக் கொள்கிறது. இதே வேலைக்கு அறிவாளிகளை நியமிக்கின்றன அந்நிய ஏகாதிபத்தியங்கள்.

தம்முடைய பிழைப்பு நாயினும் இழிந்தது என்பதை இந்த போலீசு உளவாளிகள் உணர்ந்திருக்கிறார்கள். அறிவாளிகளோ கூச்சமின்றி கம்பீரமாக உளவு வேலை பார்க்கிறார்கள்.

ஊனமுற்றவர்கள் என்பதால் ஏற்படும் அனுதாபம் மேற்படி போலிசு உளவாளிகளின் தகுதி. முன்னாள் கம்யூனிஸ்டுகள் என்பதால் கிடைக்கும் அனுதாபம் அறிவாளி / உளவாளிகளின் தகுதி.

ஆந்திராவிலும், காஷ்மீரிலும் போலீசுக்கு ஆள்காட்டும் முன்னாள் போராளிகள் முகத்தை மூடிக் கொள்கிறார்கள் - உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு மட்டுமில்லை, மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும்தான்.

ரஸ்ஸல், ஆர்வெல் போன்றவர்கள் இப்படி முகத்தை மூடிக் கொள்ள முயன்ற உளவாளிகள்.

''சொல்லுக்கும் செயலுக்கும், தத்துவத்துக்கும் நடைமுறைக்கும் இடையில் உள்ள முரண்பாட்டைக் களைவதற்கு கம்யூனிஸ்டுகள் செய்யும் முயற்சி என்பது ஒரு மோசடி'' என்று அவர்கள் கூறிய போதும், இரட்டை வேடம்தான் மனிதத்தன்மை என்று கருத்தியல் ரீதியாக அவர்கள் பிரகடனம் செய்த போதிலும், தங்கள் இரட்டை வேடத்தை கம்பீரமாகப் பிரகடம் செய்து கொள்ளும் 'தைரியம்' அவர்களுக்கு அன்று இல்லை. எனவேதான் முக்காடு போட்டுக் கொண்டார்கள்.

---

*ActionAid works with over five million of the world's poorest people in more than 30 countries across Asia, Africa, Latin America and the Caribbean.*

**Country Director India**

Since 1972, ActionAid has worked in India in partnership with local organisations with a poverty eradication focus

As Director of ActionAid India, you will provide leadership to a large team of experienced development professionals spread across 8 regional offices. You will strengthen the impact of ActionAid's actions both at the grassroots level and in the national and international advocacy arena.

We expect a deep understanding of the development processes in India at the micro and macro levels and at least 10 years senior management experience.

The appointment will be on international terms and conditions.

***Please send detailed CV by 30 June, 1999 to the Asia Director, D6 Blessington Apartments, Bangalore 560 025. Fax: 0091-80-2273933. Email: roasia@actionaidindia.org PLEASE NOTE ONLY SHORT-LISTED APPLICANTS WILL BE CONTACTED.***

*For further information about ActionAid please visit our web site: www.oneworld.org/actionaid.*

We aim to be an equal opportunities employer

**ACTIONAID®**

**ஆக்ஷன் எய்ட் எனும் தன்னார்வ நிறுவனத்தின் விளம்பரம்:**

உள்ளூர் அளவிலும், விரிந்த அளவிலும் நிர்வாகப் பணியாற்றி 10 ஆண்டு அனுபவம் உள்ள நபர் வறுமை ஒழிப்புப் பணிக்குத் தேவை.

பதவி: அனைத்திந்திய இயக்குநர்.

---

இன்றோ அந்த ஜேம்ஸ்பாண்டுகளின் தத்துவம் பின் நவீனத்துவமாக முற்றிக் கனிந்திருக்கிறது. அதுவா, இதுவா என்று கேட்டால் அதுவும் இதுவும்தான் என்று தத்துவஞான ரீதியில் 'தெளிவாக' பதில் சொல்லும் பின் நவீனத்துவ அறிஞர்கள், ''நீங்கள் அறிவாளியா - உளவாளியா'' என்று கேட்டால் ''அறிவாளியும் உளவாளியும் தான்'' என்று தைரியமாகக் கூறலாம்.

● ● ●

''கருத்தைக் கருத்தால் சந்திக்க வேண்டும்''என்பது அறிவுலகத்தினர் வலியுறுத்தும் அறிவொழுக்கக் கோட்பாடு. ''ஒவ்வொரு கருத்திற்குப் பின்னாலும் ஒரு வர்க்க நலனும் ஒரு பொருளாயத சக்தியும் உள்ளது'' என்பது மார்க்சியக் கொள்கை.

அந்தப் பொருளாயத சக்தி போலீசாகவும் இருக்கக் கூடும் என்பதுதான் ரஸ்ஸல் வகையறாவின் அனுபவம் தெரிவிக்கின்ற படிப்பினை. அறிவாளியின் கருத்தைக் கருத்தால் சந்திக்கலாம்; உளவாளியின் கருத்தை எதைக் கொண்டு சந்திப்பது?

இந்தக் கருத்து இன்ன வர்க்கத்தின் கருத்து என்று கூறினாலே முத்திரை குத்தாதீர்கள் என்று அலறுகிறார்கள் அறிவாளிகள். உளவாளி முத்திரையை மறைத்துக் கொண்டு உலவியிருக்கிறார்களே இந்த அறிவாளிகள் இனி என்ன செய்வது?

இனி 'பேரறிஞர்' ரஸ்ஸலின் எழுத்துக்களை எப்படி வாசிப்பது? கம்யூனிசத்தின் மீதான அவரது விமர்சனங்களை ஒரு அறிவாளியின் கருத்துக்கள் என்று கருதி பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு விவாதிப்பதா? அல்லது ஒரு உளவாளியின் அவதூறுகள் என்ற முறையில் 'மறு வாசிப்பு' செய்வதா?

''இடப்புறம் தர்க்கவியல் - வலப்புறம் படிமங்கள், உணர்ச்சி எனப்பிரிந்தும், ஒன்றோடொன்று உள்ள உறவில் இணைந்தும் இயங்குகிறது மூளை'' என்கிறது நரம்பியல் ஆய்வு.

தர்க்கத்துக்கும் உணர்ச்சிக்குமிடையிலான உறவை எழுத்தில் இனம்பிரித்துப் புரிந்துணரலாம். ரஸ்ஸலின் எழுத்துக்களில் அறிவுக்கும் உளவுக்கும் உள்ள உறவை பிரித்தறிவது எப்படி?

கட்டிடத்தைச் சுரண்டிப் பார்த்து சிமென்டில் கலந்த மணலை வைத்தே அமைச்சரின் ஊழலைக் கண்டுபிடித்து விடலாம் என்றால், அறிவாளிகளின் எழுத்தைச் சுரண்டிப் பார்த்து, இதோ டாலர் பேசுகிறது, பவுண்டு ஸ்டார்லிங் பேசுகிறது, டாயிஷ் மார்க் பேசுகிறது என்று கூறுவதில் என்ன தவறு? அமைச்சருக்கு ஒரு நீதி, அறிவாளிக்கு ஒரு நீதியா?

'இன்டெலிஜென்ஸ்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு அறிவு, உளவு என்ற இரண்டு அர்த்தங்கள் உண்டென்பது ஒரு குரூரமான நகைச்சுவை!

இனி மார்க்சியத்திற்கு எதிராகப் பலான இயங்களை முன்வைத்து அறிஞர் பெருமக்கள் எழுதும் போது ''ஐயா / அம்மணி! தாங்கள் அறிவாளி என்ற முறையில் எழுதியிருக்கிறீர்களா, உளவாளி என்ற முறையில் தயார் செய்திருக்கிறீர்களா?'' என்று நாம் கேட்டறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு கேட்பது பிற்காலத்தில் மறுவாசிப்பு செய்யும் வேலையை நாம் மிச்சப்படுத்திக் கொள்வதற்குத்தானேயொழிய, அறிவாளிகளை இழிவு படுத்துவதற்கல்ல.

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com

## மெட்ரிக்குலேசன் பள்ளிகள்:

# கல்வியா? செல்வமா? ஊழலா?

மெட்ரிக்குலேசன் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரியும் என் நண்பர் ஒருவரைச் சந்திக்கப் போயிருந்தேன். பள்ளிக்கூடத்தில் வளர்த்தியாக தென்பட்ட ஒரு மாணவரிடம் அந்த ஆசிரியரின் பெயரைச் சொல்லி விசாரித்தேன். அந்த மாணவன் 'ஓ! டீச்சர் இன் த பாட் (Teacher in the Pot) என்றான். என்னது! நான் தேடி வந்த ஆசிரியர் பானைக்குள்ளா' என்று எனக்கு சிரிப்பும், திகைப்பும் வந்தது.

''இன்னைக்கு எங்க போனாலும் இங்கிலீசுக்குத்தான் சார் மதிப்பு, நம்ம புள்ளையாவது நாலு எழுத்து இங்கிலீசுல பேச கத்துகட்டமே'' என்று இன்பக் கேணியில் குதிக்கும், பெற்றோர்கள் அங்கு மாணவர்கள் கரை சேரும் கதையைக் கேட்டால் அவை மெட்ரிக்குலேசன் பள்ளிகளா? இல்லை மெரினா பீச்சில் பலூன் சுடும் வியாபாரமா என்று பதைக்க நேரிடும்.

புராணங்கள் போலவே மெட்ரிக்குலேசன் பள்ளிகளின் தோற்றமும், வளர்ச்சியும் அதிசயமானவை. சில இடங்களில் ஒரு பக்கம் அட்மிசனைப் போட்டுக் கொண்டே இன்னொரு பக்கம் செங்கல்லை இறக்கிக் கொண்டிருப்பார்கள். அங்கு செங்கல்லை கணக்கு பார்த்துக் கொண்டிருப்பவரை நீங்கள் மேஸ்திரி என்று தப்புக் கணக்கு போட்டால் அதற்கு நிர்வாகம் பொறுப்பல்ல, அவரும் ஒரு ஆசிரியர் என்றால் உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கிறதா?

அதே அதிர்ச்சியை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார் உடற்பயிற்சி ஆசிரியர் செல்வராஜ் (சீர்காழி). 'பி.இ.டி. சார்னு அப்பாயின்ட் பண்ணாங்க, இன்னும் சில வகுப்புகள் கட்டி வேலை நடக்குது, நீங்களே அப்படியே கொஞ்சம் ஸ்டோர்ஸ் வேலையையும் பார்த்துகுங்கோன்னு நிர்வாகம் சொல்லிட்டாங்க, தட்டி கழிக்க முடியல சார்' என்றார் வேதனையுடன்.

சென்னை மேனாம்பேடில் ஒரு தந்தையின் அனுபவம் இது, ''அங்க, இங்க அலைய வேணாம், பக்கத்திலேயே ஒரு மெட்ரிக்குலேசன் தெறக்கப் போறாங்கன்னு ஆவலா போனா சுத்தி ஒரு காம்பவுண்டு, உள்ளார அஸ்திவார கல்லுதான் சார் இருந்திச்சி. கேட்டா, அதுக்குதான் நாங்க ஜனவரி மாசமே அட்மிசன் போடறோம், ஜுன், ஜூலையில வகுப்பு ரெடியாயிடும் என்று சாதாரணமாக சொன்னார்கள். நான் பயந்து ஓடியாந்திட்டேன்'' என்றார்.

கல்வித்துறை இயக்கக அலுவலர் ஒருவர் சொன்ன தகவல் இது: ''மெட்ரிக்குலேசன் பள்ளிகளுக்கு உரிமை வழங்க விதிகள் பல இருக்கு. சென்னையில் ஒரு குறைந்த அளவு மெட்ரிக்குலேசன் பள்ளி தொடங்க 1 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும் கட்டாயமாக விளையாட்டு மைதானம் இருக்க வேண்டும், வேலை செய்யும் ஆசிரியர்கள் முதுநிலை பட்டதாரியாகவும், கட்டாய பி.எட். செய்தும் அனுபவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். இப்படி பல விதிமுறைகள் இருக்கு.

ஆனா நடைமுறையில் இதை பொருத்திப் பார்த்தா பல ஸ்கூலை இழுத்து மூடவேண்டியிருக்கும். எல்லாம் காசை அடிச்சி சிபாரிசுல உரிமம் வாங்கிடுவாங்க. முதல்ல இவனுங்க பிரைமரி ஸ்கூல்னு ஒரு குடிசையைக் காட்டி அனுமதி வாங்கிடுவானுங்க, பின்னால அதையே டெவலப் பண்ணி பிளஸ் டூ வரைக்கும் கொண்டு வந்துடுவாங்க.''

இதுமட்டுமல்ல வகுப்பறை எத்தனை இருக்க வேண்டும்? என்ன அளவில் இருக்க வேண்டும்? தண்ணீர் வசதி, காற்றோட்டம் இப்படி உள்ள விதிகளுக்கு உட்பட்டு இயங்கும் பள்ளிகளை நாம் விரல் விட்டு எண்ணிவிட முடியும்.

மெட்ரிக்குலேசன் பள்ளி செல்லும் மாணவர்கள் ஏதோ இமயமலை சிகரத்தில் தனிக்குடித்தனம் நடத்தப் போகிறவர்கள் மாதிரி பெரிய புத்தகப் பொதியுடன் தண்ணீர் சீசா, விசிறி உட்பட சில இடங்களில் எடுத்துச் செல்வதைப் பார்த்தாலே மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இருக்கும் லட்சணத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியும். இதற்கும் சேர்த்து தானே காசு வாங்கினீர்கள் என்று பெற்றோர்களும் நிர்வாகத்தைக் கேட்பதில்லை; காசு வாங்கியதால் கல்வித் துறை அதிகாரிகளும் கேட்பதில்லை.

ஒரு வகுப்பிற்கும் மற்றொரு வகுப்பிற்கும் போதுமான இடைவெளி கூட இல்லாமல் 20 X 40 அறையில் 4 வகுப்புகள் நடத்தும் அளவுக்கு வகுப்பறைகள் ஒதுக்கப்படுகின்றன. இந்த லட்சணத்தில் நூலகம், விளையாட்டு மைதானம் பற்றி கேட்கவே வேண்டாம்.




மாணவர் சேர்க்கை ஆசிரியர் சேர்க்கை இரண்டுமே ஒரு வியாபார நுட்பத்தோடு செய்யப்படுகிறது. ''நுழைவுத் தேர்வு'' என்ற பெயரில் ஆறாம் வகுப்பில் சேரும் மாணவனுக்கு கடுமையான கேள்விகளைக் கேட்டு வடிகட்டி மதிப்பெண்



படிப்பகம்

www.padippakam.com

போட்டு பெரும்பாலும் தேர்ச்சி இல்லாதவாறு செய்துவிடுவார்கள். நேர்முகத் தேர்வு பெற்றோர்க்கு நடக்கும். "என்ன சார் உங்க பையனுக்கு அடிப்படையே சரியில்ல, ரொம்ப பயிற்சி எடுக்கனும், டியூசன், கோச்சிங் எல்லாம் தந்தாதான் தேறுவான்" என்று கறவை மாட்டுக்கு சுழி சரியில்லை என்று காரணம் காட்டி தரகர் பணம் கறப்பது போல பேசி 'நன்கொடையை' அதிகமாகக் கறக்கும் அட்மிஷன் படலம் நடக்கும் என்கிறார் ஆசிரியர் ஒருவர்.

நம்மிடம் இவ்வளவு வக்கணை பேசும் மெட்ரிக்குலேசன் பள்ளிகள் ஏதாவது ஒரு அடிப்படையோடு நடக்கிறதா என்று பார்த்தால் பெரும்பாலும் இல்லை. அயன்புரத்தில் இயங்கும் ஒரு மெட்ரிக்குலேசன் பள்ளி ஆசிரியரின் அனுபவம் இது: "ஆகஸ்டு மாதம் முடிந்து காலாண்டு தேர்விற்கான தயாரிப்புகள் நடந்து கொண்டிருக்கும்போது 12-ஆம் வகுப்பில் 2 மாணவர்கள் புதியதாகச் சேர்ந்துள்ளனர். விசாரித்ததில் நிர்வாகத்தில் ஆளுக்கு ரூ. 5000 பெற்றுக் கொண்டு சேர்த்துள்ளது தெரிய வந்தது."

"இப்படி மாணவர் சேர்க்கையில் மட்டுமின்றி, ஆசிரியர் சேர்க்கையிலும் காசு பார்க்கின்றனர் மெட்ரிக்குலேசன் பள்ளிகள். "கையில் 1500 ரூபாய் கொடுத்து விட்டு சம்பளப் பதிவேட்டில் 4000, 5000 என்று கையெழுத்து வாங்குகிறார்கள். இதற்கு சம்மதித்துத்தான் நாங்களும் வேலைக்குச் சேர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதைவிட கேவலம் எங்களுடைய சர்டிபிகேட்டுகளை நிர்வாகத்திடம் ஒப்படைத்துவிட்டுத் தான் நாங்கள் வேலையில் இருக்க முடியும். யாருக்கும் இங்கு நிரந்தரப் பணியோ, பணிப் பாதுகாப்போ கிடையாது. இருக்கிற சூழ்நிலையில் இங்கு யாரும் நிரந்தரமாக வேலை செய்யவும் முடியாது" என்றார் மற்றொரு ஆசிரியர்.



**பத்மா சேஷாத்ரி பள்ளியின் திருமதி ஒய்.ஜி.பி. மெட்ரிக்குலேஷன் தொழிலுக்கு ஒரு முன்னோடி**

மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்குவதாய் மோசடி செய்யும் மெட்ரிக்குலேசன் பள்ளிகளின் உள்ள நிலைமை இதுதான். மாணவர்களின் கல்வித்தரம் பற்றி கவலைப்பட்ட ஆசிரியரின் அனுபவம் இது: "நான் இந்த மெட்ரிக்குலேசன் பள்ளியில் ஏழாம் வகுப்பு ஆசிரியர். ஜூலை மாத தேர்வு முடிந்து விடைத்தாள் திருத்தினேன். ஒரு சில மாணவர்களே 40-க்கு மேல் மதிப்பெண் பெற்று இருந்தனர். மற்றவர்கள் ஒற்றை இலக்க (SINGLE DIGIT) மதிப்பெண்ணே வாங்கி இருந்தனர். இந்த விசயம் தெரிந்து பள்ளித் தாளாளர் என்னை அழைத்திருந்தார். கறாராகத் திருத்தியதற்காக என்னைப் பாராட்டுவார் என எதிர்பார்த்தேன்."

அவரோ என்னைக் கடிந்து கொண்டார். "இப்படித் தான் பேப்பர் திருத்துவதா? முதல் தேர்விலேயே ஸ்டூடன்ட்ஸ் இப்படி லோ-மார்க் வாங்கினால் எந்த பேரன்ட்ஸ் பாத்துட்டு சும்மா இருப்பாங்க. இப்படி 10, 20 மார்க் வாங்கவா என் பையனை மெட்ரிக்குலேசன் கொண்டாந்து சேர்த்தோம்னு கேட்க மாட்டாங்களா? அதனால நீங்க என்ன செய்யரீங்கன்னா இந்த சிங்கிள் டிஜிட் மார்க் எடுத்தவங்களை ஒரு 20 அல்லது 30 போட்டு பெயில் பண்ணிடுங்க, டூ டிஜிட் மார்க் எடுத்தவங்களை 40 போட்டு பாஸ் பண்ணிடுங்க" என்றார். என் தயக்கத்தைப் பார்த்தவர் "உங்களுக்கு எக்ஸ்பீரியன்ஸ் இல்லேன்னா அந்த கெமிஸ்ட்ரி மிஸ்கிட்ட சொல்லி மார்க் போட்டு தர சொல்லுங்க என்றார்."

"இதுமட்டுமில்ல பப்ளிக் எக்சாம் வரைக்கும் இதே மோசடிதான். அதனால தான் மெட்ரிக்குலேசன் பள்ளிகள் எக்ஸாமினேசன் சென்டரை கேட்டு வாங்குவாங்க. அந்தந்த எக்ஸாமுக்கு அந்தந்த ஆசிரியரை அனுப்பி பதில் சொல்லித் தரதிலேருந்து எல்லா வேலையும் நடக்கும். இத்தினிக்கும் மேல எவனாச்சும் பெயில் ஆயிட்டான்னா, அந்த மாணவனைத் திரும்ப 10-ஆவதில் சேர்த்து அவனுக்குப் புதுசா ரிஜிஸ்டர் ஏற்பாடு செஞ்சி அவன் சர்டிபிகேட்ல பெயில்ங்கிறதே வராம ஆக்கிடுவாங்க" என்றார் வேதனையுடன்.

"கல்வி - விலை போட்டு வாங்கவா முடியும்?" என்று பாரதிதாசன் கேட்ட கேள்விக்கு முடியும் என்று கடை விரித்துக் காண்பிக்கின்றன மெட்ரிக்குலேசன் பள்ளிகள். இப்படி விலை பேசிட முடியாதவர்க

## மெட்ரிக்குலேசன் பள்ளிகள் மேலும் சில விவரங்கள்

☐ மெட்ரிக் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பத்தடிமானம் என்று பொருள். 10-வது வரையிலான ஆங்கில வழிப் பள்ளிகள் என்று பெயர். நாளடைவில் புதிய கல்வித் திட்டத்தின்படி பனிரெண்டாம் (+2) வகுப்பு வரையில் இயங்குகின்றன.

☐ அரசினர் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் தமிழ்வழிப் பள்ளிகளில் அனைத்துப் பாடங்களும் தமிழில் இருக்கும், ஆங்கிலம் மட்டும் சேர்ந்து இருக்கும். மெட்ரிக்குலேஷன் பள்ளிகளில் அனைத்துப் பாடங்களும் ஆங்கிலத்தில் இருக்கும். தமிழ் அல்லது தாய்மொழி மட்டும் ஒரு பாடமாகத் தனியாக இருக்கும்.

☐ தமிழ்நாட்டில் படிக்கும் மெட்ரிக்குலேஷன் பள்ளி மாணவன் இறுதி வகுப்புவரை தமிழே கூடப் படிக்காமல் மொழிப் பாடமாக இந்தி, சமஸ்கிருதம், பிரெஞ்சு என்று தனக்குத் தேவையானதைத் தேர்ந்தெடுத்துப் படிக்க முடியும்.

☐ ஆங்கிலோ - இந்தியர்களுக்கு ஒரு பாட திட்டமும், வசதி படைத்த தனியார் பள்ளிகளில் படிப்பவருக்கு ஒரு பாடத் திட்டமும், அரசுப் பள்ளித் துறை உதவியுடன் இயங்கும் பள்ளிகளுக்கு ஒரு பாடத்திட்டமும் கொண்டு இயங்குகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

ளுக்கு என்ன நடக்கும் என்பதற்கும் பாடம் உண்டு இங்கே.

''பணம் ஒழுங்கா கட்டாதவங்க ளைக் கூட பெயில் போடுவாங்க, இல்லை இந்த ஸ்கூலைவிட்டு போகப் போறான்னு தெரிஞ்சாகூட பெயில் போடுவாங்க. இதுக்கெல்லாம் எந்த வரைமுறையும் கிடையாது'' என்கிறார் ஒரு ஆசிரியர்.

ஏன் இன்ஸ்பெக்சன் உண்டே, புகார் செய்ய இயக்குநர் அலுவலகம் இருக்கிறதே? இதில் யாரும் புகார் செய்வதுண்டா? என்று கேட்டதற்கு, ''இதே மாதிரி பல தடவை நடந்திருக்கு. என் மகன தேவையில்லாம பெயில் போட்டாங்கன்னு சிலர் கம்ப்ளைன்ட் கொடுப்பாங்க. அங்கேந்து என் கொயரிக்கு ஆள் வரப் போகுதுன்னு முதல் நாளே பள்ளிக் கூடத்துக்கு தகவல் வந்துவிடும். இவங்க எல்லாத்தையும் கச்சிதமா தயார் பண்ணி வைச்சிடுவாங்க. அப்புறம் பேருக்கு ஒரு என்கொயரி நடக்கும். மத்தபடி பள்ளிக் கூடத்துக்கு சாதகமாதான் நடக்கும்.''

மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் தரம் பற்றிய மாயை சில இடங்களில் தகர்ந்து விடுவதால்தான் பெரும்பாலோர்க்கு தங்கள் பகுதியிலே இருக்கும் மெட்ரிக்குலேசன் பள்ளிகள் மீது நல்ல அபிப்ராயம் கிடையாது. உதாரணமாக சென்னை பெரம்பூர் - அயன்புரம் சுற்று வட்டாரத்தில் இருக்கும் (BETHAL) பீத்தல் மெட்ரிக்குலேசன் பள்ளிக்குப் பக்கத்தில் இருப்பவர்கள் தொலைவில் இருக்கும் (BEIN) பெயின் ஸ்கூலுக்கும், பெயின் ஸ்கூலைச் சுற்றியுள்ளவர்கள் பீத்தல் ஸ்கூலுக்கும் பிள்ளைகளை அனுப்புகிறார்கள்.

மெட்ரிக்குலேசன் பள்ளிகளின் கல்வித்தரம் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை ஒரு ஆசிரியர் பகிர்ந்து கொண்டே அனுபவம் இது: ''10-ஆம் வகுப்பில் ஒரு நாள் நான் 10-ஐயும் 12-ஐயும் கூட்டினால் என்ன வரும் என்று ஒரு மாணவனைக் கேட்டேன். அவன் விழித்தான். சரி நாம் ஆங்கிலத்தில் கேட்டதால்தான் புரியவில்லை போல என்று தமிழில் கேட்டபோதும் விழித்தான். சரி மொழிதான் ஒரு பிரச்சினை என்று 10+12=? எழுதிக் காட்டிய போதும் அவன் விழித்தது அதிர்ச்சியாய் இருந்தது.''

அதுமட்டுமல்ல, கையில் பணத்தையும் சில்லரையும் கொடுத்து இதிலிருந்து ஒரு தொகையைப் பெற்றுக் கொண்டு மீதி எவ்வளவு இருக்கும் என்று கேட்டதற்கு ஒரு மாணவன் விழித்த விழி இன்னும் என்னால் மறக்க முடியவில்லை. நீளத்தின் அலகு மீட்டர் என்ற ஆங்கிலப் பதம் கூட பலருக்கு தெரிவதில்லை'' என்றார் இன்னொரு ஆசிரியர். ஆசிரியர்களின் கல்வித் தரமும் ஆளை விடு சாமி என்கிற அளவுக்கு மோசமானது.

தனது மோசமான அனுபவத்தை பகிர்ந்து கொண்டார் ஒரு ஆசிரியர்: ''நான் பேசிக்கலா பி.ஏ. இங்கிலீஷ் லிட்ரேச்சர். ஆனால் நான் ஸ்கூல்ல சேர்ந்த உடனே காமர்ஸ் எடுக்க சொன்னாங்க,



**'கல்வி - விலை போட்டு வாங்கவா முடியும்?' என்று பாரதிதாசன் கேட்ட கேள்விக்கு முடியும் என்று கடை விரித்துக் காண்பிக்கின்றன மெட்ரிக்குலேஷன் பள்ளிகள்**

எனக்கு காமர்ஸ்னா என்னன்னே தெரியாது, ஒரு வருசம் நோட்ஸ்சை வைச்சே ஒப்பேத்திட்டேன், அடுத்த வருஷம் மேத்ஸ் எடுக்கச் சொன்னாங்க. அதுக்கும் இதே பாணிதான்; டெஸ்டுக்கு முன்னாலேயே கொஸ்டின் பேப்பரையும் அதுக்கான ஆன்ஸரையும் பசங்களுக்கு படிக்கக் கொடுத்துடுவோம். இதான் சார் எங்களோட டெக்னிக்'' என்றார் சிறிதும் நெருடல் இல்லாமல்.

''நம் புள்ளை இங்கீலிசுல பேச வேணும்'' என்று செலவு செய்து ஆசைப்படும் பெற்றோர்களின் எதிர்பார்ப்பாவது இங்கு பூர்த்தி செய்யப்படுகிறதா என்று பார்த்தால், அந்த அனுபவங்களும் அதிர்ச்சி தருவதாய் இருக்கிறது.

ஒரு ஆசிரியரின் அனுபவம் இது, ''முதன் முதலா நான் +2-க்கு ஆங்கிலத்திலேயே வகுப்பு எடுத்தேன். ''பள்ளியின் தாளாளரோ 'நாம இங்கிலிஸ் மீடியம் ஸ்கூல் தான், ஆனாலும் பாருங்க நெறய பசங்களுக்கு இங்கிலிஸ் புரியரதில்லை, அதனால நீங்க இங்கிலீசுல பாடம் நடத்திட்டு அ...ப்பப்..ப தமிழ்ல டவுட் கிளியர் பண்ணுங்க' என்று அதிர்ச்சி கொடுத்தார்,'' என்றார்.

தமிழும் கற்காமல், ஆங்கிலமும் தெரியாமல் ஒரு அரை வேக்காட்டுத் தனத்தை ஆளாக்குவதுதான் இந்தப் பள்ளிகளின் வேலை என்று கூறும் ஒரு ஆசிரியர் ''எங்க மெட்ரிக்குலேசன் பள்ளியில் +2 வரைக்கும் படிக்கிற மாணவர்களில் ஒருவருக்குக் கூட ஒழுங்காக ஆங்கிலம் பேச வராது. உதாரணமா தண்ணி குடிக்கணும் என்றால் Sir Water (ஐயா, தண்ணி) என்பார்கள். சிறுநீர் கழிக்கச் செல்ல Sir Bathroom (ஐயா! குளியல் அறை) என்பார்கள். ஆங்கிலத்திற்கு பதிலாக இங்கிலிஷ் பாவனை தான் இருக்கும். ஒரு மாணவன் தன்னை அடித்துவிட்டதை ஒருவன் இப்படி சொன்னான். ''சார் ஹீ கம்மிங் சார்! பீட்டிங் சார்.''

CBSE மெட்ரிக்குலேசன் பள்ளியில் ஆசிரியராகப் பணி புரியும் ஒருவர் இதையே வழிமொழிந்தார்: ''இங்க வேலைக்கு வந்தப்ப ஸ்கூலைப் பத்தி பெரிசா நெனச்சு வந்தேன். ஆனால் 10-ஆவதுல இருக்கிற ஸ்டூடண்டுக்கே A, B, C, D தெரியுமான்னு கேட்டுத் தெரிஞ்ச பிறகுதான் பாடத்தையே ஆரம்பிக்கணும்னு ஒரு விசயத்தை இங்க வந்த பிறகு தான் தெரிஞ்சிகிட்டேன்'' என்றார்.

மெட்ரிக்குலேசன் பள்ளிகளுக்குப் பிள்ளைகளை அனுப்பிவிட்டு நம்ம பையனும் ஒரு சில்வர் டங்கு (வெள்ளி நாக்கு) சீனிவாச சாஸ்திரியா வெளியே வருவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பெற்றோர்கள் முதலில் அவர்களின் மூளை துருப்பிடிப்பதற்குள் வெளியே கொண்டுவர முயற்சி எடுப்பது நல்லது.

• சித்தன்
அனுபவம், தகவல்,
உதவி: வாசு, செல்வராசு



படிப்பகம்

www.padippakam.com

# ‘அரசியல் பேசாதே’ – பாரதீய ஜனதா கட்டளை’ சி.பி.எம். சரணடைவு

‘மார்க்சிஸ்ட்’ கட்சியின் இலக்கிய அமைப்பான த.மு.எ. சங்கத்தின் கலை இரவு நாகப்பட்டினத்தில் 3.7.99 அன்று நடைபெற்றது. வழக்கமான முறையில் புரவலர்களான முதலாளிகள் முன்வரிசையில் அமர்ந்திருக்க, சன் டி.வி.யின் (கேவலமான) பாணியில் ஆடல், பாடல், உரைகள் நடக்க, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நிகழ்ச்சிகளைப் போல இடையிடையே போட்டி, பரிசு என்று தொடர்ந்தது.

பரிசு கொடுத்த புரவலர்களில், நாகை மு.ரா. சன்ஸ்-இன் உரிமையாளர் அடிக்கடி புகழப்பட்டார். காரணம், அந்த வள்ளல்தான் இந்நிகழ்ச்சிக்கான விளம்பரங்களை நகரம் முழுவதும் செய்திருந்தார். இருப்பினும் வள்ளலின் உண்மையான யோக்கியதை வேறு. நாகை மு.ரா. சன்ஸில் இருநூறுக்கும் மேற்பட்ட ஊழியர்கள், ஒரு நாளைக்கு பதினான்கு மணி நேரம் வேலை செய்கிறார்கள். சொற்ப ஊதியமும், அற்ப சலுகைகளும் வழங்கப்படும் அவர்களை ஒரு பண்ணையாரைப் போல நடத்துபவர்தான் மேற்படி ‘வள்ளல்.’

நிகழ்ச்சிக்குக் காசு கொடுத்தவர்களின் யோக்கியதை இதுவென்றால், பார்க்க வந்தவர்களின் நிலை என்ன? ரிக்கார்டு டான்சுக்கு நடுவில் (பரிதாபமான) த.மு.எ.ச. பேச்சாளர் ஒருவர் பா.ஜ.க.வை விமர்சனம் செய்யத் தொடங்கினர். உடனே கூட்டத்திலிருந்த பா. ஜனதா, தி.மு.க. தொண்டர்கள் ‘அரசியல் பேசாதே, பேசினால் கலாட்டா செய்வோம்’ என்று கூச்சலிட்டனர். பயந்துபோன பேச்சாளர், அதை விடுத்து ஃபயர் திரைப்படம், பால்தாக்கரே என்று மாற்றினார். அப்போதும் எதிர்ப்பு வரவே, அவரை மேடையிலிருந்து வலுக்கட்டாயமாக இறக்கினார்கள்.

மேடைக்கு வந்த த.மு.எ.ச. அறிவிப்பாளர் ‘இனி அரசியல் பேசப்படமாட்டாது’ என உத்தரவாதம் தர, மீண்டும் டமுக்குடப்பா டான்ஸ் தொடர, ரசிகர்களின் விசில், சத்தம் ‘அரசியலை’ ஒழித்தது. கலாட்டா செய்த பா.ஜ., தி.மு.க. தொண்டர்களிடம், ‘ஒருவரின் கருத்துச் சுதந்திரத்தை மறுப்பது என்ன நியாயம்’ என்று கேட்டபோது, ‘‘சார், ஜாலியா இருக்கணும்னுதான் நிகழ்ச்சி நடத்துறானுவ, அதுல எதுக்கு அரசியல் பேசணும்? நானும் காசு கொடுத்தேன், என்னை திருப்திப்படுத்தறமாதிரிதான் நிகழ்ச்சி இருக்கணும்,’’ என்று திருப்பிக் கேட்டார்கள்.

வீடு திரும்பும்போது யோசித்துப் பார்த்தேன், த.மு.எ.ச. - பெயரில் உள்ள முற்போக்கை ‘‘பிற்போக்கு’’ என்று மாற்றிவிட்டால் இந்தப் பிரச்சினைகள் எதுவும் வராதே!

— நாகப்பட்டினத்திலிருந்து,
ஒரு வாசகர்.

# ‘சமூக விஞ்ஞானிகளி’ன் புதிய திருட்டு

வாஜ்பாயியின் ஆட்சி கவிழ்வதற்கு முன், கடந்த தமிழ்ப் புத்தாண்டன்று சென்னை - தாம்பரத்தில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கலை இரவு நடந்தது. அதில் வாஜ்பாயியை அம்பலப்படுத்தும் ம.க.இ.க.வின் பாடலைத் ‘‘தங்கள் பாடல்’’ என்று அறிவித்துப் பாடினர். கைதட்டல் பலமாக இருக்கவே ‘‘நாளை நடப்பதை இன்றே முன்னறியும் சமூக விஞ்ஞானிகள் நாங்கள் என்பதற்கு இந்தப் பாடலே சான்று’’ என்று முழங்கினார்கள் அந்தத் திருடர்கள்.

இந்தச் செய்தியையும் வெளியிட்டு ‘‘தற்போது ஜெ.யுடன் கூடிக்குலவும் சூழலில், வாஜ்பாயி - ஜெயா இருவரையும் அம்பலப்படுத்தும் அந்தப் பாடலைப் பாட முடியுமா?’’ என்று கேட்டிருந்தோம். முடியும் என்று நிரூபித்திருக்கிறார்கள் மார்க்சிஸ்டுகள்.

சென்ற ஆகஸ்டு மாதம் நெய்வேலியில் சி.ஐ.டி.யு. தலைவர் சவுந்திரராசன் பேசிய மார்க்சிஸ்டுக் கட்சியின் தேர்தல் பொதுக் கூட்டத்தில் த.மு.எ.ச.வின் புதுவை கலைக்குழு ‘வாஜ்பாயி’ பாடலைப் பாடியது. பாடிய பாடல்களிலேயே அந்தப் பாடலுக்குத்தான் மிகுந்த வரவேற்பு என்பது ஒருபுறமிருக்கட்டும். என்ன செய்தார்கள் தெரியுமா? பாடலில் ‘‘எக்குனா பார் ஜெயலலிதா எதுகையும் மோனையும் கொழும்பிப் போச்சு’’ என்று ஜெயலலிதாவைத் தாக்கும் வரிகளை மாற்றி மம்தா பானர்ஜி (திருணாமுல் காங்கிரசு) என்று பாடினர். இப்படியொரு மானங்கெட்ட பிழைப்பு நடத்துவதற்குப் பதில் தங்கள் கட்சி செயலாளர் இனி சங்கரய்யா இல்லை, புரட்சித் தலைவிதான் என்று அறிவித்துவிடலாம்.

சுயமரியாதையும், நாணயமும் உள்ள நபர்கள் யாரேனும் மார்க்சிஸ்டு கட்சியில் இருந்தால் அவர்களைக் கேட்கிறோம். அடுத்தவன் பாடலைத் திருடி, திருடிய பாடலைத் தனக்கேற்பத் திருத்தி, அதையும் தன்பாடல் என்று கம்பீரமாக அறிவித்துக் கொள்ளும் இந்த நபர்களைக் கண்டாலே உங்களுக்கு அருவெறுப்பாக இல்லையா? தன்மானமுள்ளவனுக்கு அந்தக் கட்சியில் வேலையில்லை என்பதற்கு இந்த ஒரு காரணம் போதாதா?

மலத்தைச் சுவைத்துக் கொண்டிருக்கும் நாய், சோற்றைக் கண்டால் அதிலும் வாய் வைக்கும். நாய்களுக்குப் புரிய வைக்க கல்லெடுத்து அடிப்பதுதான் ஒரே வழி. ●

# அறிவிப்பு

○ சென்ற இதழ் தலையங்கத்தில் ‘காஷ்மீரில் 90 சதவீத மக்கள் முஸ்லீம்கள்’ என்று வருகிறது. இது காஷ்மீர் பள்ளத்தாக்கை மட்டும் குறிக்கும். காஷ்மீர், ஜம்மு, லடாக் மூன்றையும் சேர்ந்தால் முஸ்லீம்களின் சதவீதம் 60 முதல் 70 வரைதான் இருக்கும்.

○ ‘தேசபக்தீ’ கட்டுரையில் வரும் முர்டோச், (ரூபர்ட் முர்டோச்) அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் அதிபர். உலகெங்கும் பத்திரிக்கைகள், தொலைக்காட்சிகள், திரைப்படத் தயாரிப்பு போன்றவற்றை ஆதிக்கம் செய்யும் இவர் இந்தியாவில் ஒளிபரப்பாகும் ‘ஸ்டார் டி.வி. நெட்ஒர்க்’ நிறுவனத்தின் அதிபரும் ஆவார்.

○ ‘நாயனார் அழைக்கிறார்’ கட்டுரையில் இ.எம்.எஸ். லாட்டரியை அறிமுகப்படுத்திய ஆண்டு 1956 என்று வருகிறது. அது தவறு. 1957-இல் தான் அவர் பதவி ஏற்றார். லாட்டரியை அறிமுகப்படுத்திய ஆண்டு 1967 ஆகும்.

○ கஜினி முகமது கட்டுரையில் ‘பாட நூல் புரட்டு’ என்ற பெட்டிச் செய்தியில் வரும் மெட்ரிக்குலேசன் பாடத்திட்டம் என்பது உண்மையில் சி.பி.எஸ்.இ. பாடத் திட்டத்தையே குறிக்கும்.

தவறுகளுக்கு வருந்துகிறோம்.
— ஆசிரியர்.



படிப்பகம்

www.padippakam.com

# சிறுகதை:

# பிராமீன்

## துரை. சண்முகம்

"மாங்கா... மாங்கா..."

மீனாட்சி மாமி எட்டிப் பார்த்தவுடன், செல்லத்துரை குரலை மேலும் உயர்த்தினான். "மாங்கா... மாங்கா, ருசியான மாங்கா" மங்களத்து மாமியும் பக்கத்து வீட்டு மாமிகளும் வாசலுக்கு வந்துவிட்டதைப் பார்த்த செல்லத் துரைக்கு முகத்தில் சிரிப்பு ததும்பியது.

"என்ன மாமி எல்லோரும் பாத்திரத்தோடு வந்துட்டிங்க. இன்னைக் குன்னு பாத்து சரக்கு வேற கம்மியா போட்டுட்டு வந்துட்டேன். ஆளுக்கு ரெண்டு கிலோ போடட்டா?"

"ஏண்டா கூறுகட்டி விக்கறது போயி கிலோ கணக்குல விக்கிற அளவுக்கு நோக்கு கிராக்கி முத்திடுச்சோ! கிட்டக்க வா மொதல்ல கூடய பாப்போம்"

சைக்கிள் அருகில் வந்ததும், கூடையிலிருந்து வந்த நாற்றத்தை மூச்சில் இழுத்த பார்வதி மாமி கூன் விழுந்த முதுகை நிமிர்த்தி அவனைச் சந்தேகத்துடன் பார்வையால் அளந்தாள்.

"ஏண்டா வீணா போன மாங்காயா கொண்டாந்துருக்கியோ! இந்த நாத்தம் நார்றது"

"நல்ல மீனுன்னா இப்படித்தான் மாமி நாறும், வேணும்மா பாருங்க," கூடைக்கு மேல் மூடியிருந்த சாக்கைத் திறந்தான்.

"திருட்டு முழி முழிச்சிண்டு அவன் சிரிக்கறப்பவே நெனச்சேன். கிராதகம் பண்ணுவான்னு. மற்றவர்களும் வசவை ஆரம்பித்தனர்.

"பாவி கம்மனாட்டி, கோகுலாஷ்டமியும் அதுவுமா, இப்படி பண்றியே (மாங்காண்ணா நாங்க பாத்திரத்தோட வந்தோம்) நோக்கே நன்னாருக்கா இப்படி பண்றது" அதுக்கு மேல் மீன் நாற்றத்தில் நிற்க விரும்பாமல் சரேலென்று திண்ணைக்கு ஓடி வாயை வளைத்தும் நெளித்தும் முணுமுணுத்த வண்ணமிருந்தனர்.

வெக்கு வெக்கென்று சிரித்துக் கொண்டிருந்த செல்லத்துரையைப் பார்த்து பொரிந்து தள்ளினாள் பார்வதி மாமி.

"அந்தக் கண்றாவிய, தண்ணிய கொட்டிண்டு இன்னும் ஏண்டா நிக்கற? மொதல்ல சைக்கிள நகர்த்து. போடா! போனா போறது உங்கப்பன் காலத்லேந்து அக்கிரகாரத்த நம்பி பொழச்ச குடும்பமாச்சேன்னு உன்கிட்ட கறிகா வாங்கிண்டிருந்தோம். இந்த கண்றாவிய கொண்டாந்து வச்சிண்டு மாங்கான்னு எங்களவாள நக்கல் பண்ணியோ, இனிமே யாரும் ஒன்னிட்ட எதுவும் வாங்க மாட்டா. நீ போடா மொதல்ல."

"சும்மா பயப்படாதீங்க மாமி, மெட்ராசுல போயி பாருங்க உங்க ஆளுங்க மாட்டுக்கறிய என்னா போடு போடுறாங்கண்ணு."

"நீ காலங்காத்தால தண்ணி போட்டுட்டு வந்துட்டியா? போடா மொதல்ல"

"கோவிச்சுக்காத மாமி. வெறும் தயிறு சோற திங்கறதுனாலத்தான் கொற வயசுலேயே தலை ஆடுது. கூன் விழுது எங்கள மாதிரி எலும்பையும், மீனையும் கடிச்சு பாருங்க. இடுப்பு என்னமா நிக்குதுன்னு. என்னா போடட்டா ஒரு கிலோ?"

"இல்ல இல்ல, இவன் நம்ப பேச்சுக் குப் படியமாட்டான். ஏய்! ராமமூர்த்தி இங்க வாயேன்..."

"தே! மாமி அந்தாள இழுத்து வுட்றாத. திருக்கைய உப்புல வச்சி தேக்கிற மாதிரி, வாயாலயே வச்சி தேச்சிடுவாரு தேச்சி" சிரித்துக் கொண்டே, கால் சட்டைக்கு மேலே கைலியை தூக்கிவிட்டவாறு சைக்கிளை ஒரு மிதி மிதித்து "மாங்கா... மாங்கா... மீனு... மீனு" என்று சிரித்தபடியே புறப்பட்டான்.

"மாங்கா மாங்கான்னு சத்தம் வந்துதேன்னு வடாம் போட்ட கையோட அப்படியே வந்தேன். கட்டயிலே போறவன் மீன் கூடய வச்சிண்டு என்ன பேச்சு பேசறான் பார்த்தேளா!" மங்களத்து மாமியின் பொருமலோடு பார்வதியும் ஒத்திசைத்தாள்.

"எல்லாம் அழியறத்துக்கு காலம்டி, ஒரு காலத்துல இந்த அக்கிரகாரத்துல கால வைக்கவே நடுங்னவாள் லாம் இப்ப நம்பளவாள நக்கல் பண்ணிண்டு போறா."

"கேக்க ஆள் இல்லியோன்னோ அதான், கண்டதும் நம்பள நக்கல் பண்றது. மொதல்ல இந்த போஸ்ட் ஆபீஸ் வந்தது. ஒரு சேரி ஆள் வந்தான். அடுத்து தெருவுல இந்த தாய் சேய் விடுதி வந்தது சூத்திரவாள் வந்தா. இப்ப இது அக்கிரகாரமாவா இருக்கு... க்கூம்."

"இந்த முத்துசாமி அய்யர் மெட்ராசோட போறேனிட்டு காசுக்காக சூத்திரன் கிட்ட வீட்ட வித்துட்டு போயிட்டார். நம் பளவாளே சரியில்லாதப்போ யார குத்தம் சொல்றது."

"சரி போயி ஆத்துல வேலைய பாருங்கோ" பார்வதி மாமி வழிமொழிய கலைந்தனர்.

●●●

"வாசு வாங்க என்ன ஹாயா உட்கார்ந்திட்டேள்" ராமமூர்த்தி அய்யர் வழக்கமான வெண்பொங்கல் சிரிப்பை பரிமாறினார்.

மாலைநேர சுலோகங்களை முடித்துக் கொண்டு திருநீறு, சந்தனம் மணக்க ராமமூர்த்தி அய்யர் திண்ணையில் வந்து உட்கார்ந்தால், யாரும் பக்கத்தில் போகவே பயப்படுவார்கள். ஏதாவது கேள்வி கேட்டு பாகவதம் பாடி "இது கூட தெரியாதா? என்னத்த எம்.எஸ்சி. ட்டிக்கிறேள்" என்று மடக்குவதும், ஏதாவது ஒரு ஆங்கில வார்த்தையைச் சொல்லி அர்த்தம் கேட்டு தெரியாமல் விழிப்பவர்களைப் பார்த்து "என்ன கான்வென்ட் படிப்போ எழவோ! ஒரு மண்ணும் தெரிய மாட்டேங்கறது" என்று பலருக்கும் முன் அவமானப்படுத்தி "இத்தனைக்கும் நான் அந்தக்கால பத்தாவது" என்று அவர் சிரிக்கும் சிரிப்புக்கு எதிர் நிற்க முடியாமல் பலரும் பயந்து ஒதுங்குவார்கள்.

என்னை மட்டும் அளவுக்கு அதிகமாக மரியாதை கொடுத்து அவர் அழைப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இதுவரை அவரது பேச்சுக்கு ஒத்துப் போகாமல் எதிர்கேள்வி கேட்கும் என்னை முழுவதுமாகப் பணியவைக்க வாதத்தை ஆரம்பிப்பது அவரது வழக்கம்.

இவ்வளவு ஆர்வமாக வரவேற்க காரணம் என்னவாயிருக்கும்? காலையில் தெருவில் நடந்த சம்பவத்தை நினைவில் வைத்துக் கொண்டு ராமமூர்த்தி அய்யர் பக்கம் போனேன்.

"என்ன சார் ஏதும் முக்கியமான விசயமா?"

"என்ன இருந்தாலும் நானெல்லாம் ஓல்டு ஜெனரேஷன். உங்கள மாதிரி புதுமை, பகுத்தறிவெல்லாம் நேக்குத் தோண மாட்டேன்றதே!"

சுற்றி வளைத்து எங்கு வருகிறார் என்பது புரிந்தது. மௌனமாகச் சிரித்துக் கொண்டேன். "சொல்லுங்கோ வேற என்ன நியூஸ், ஏதாவது ராமசாமி நாயக்கர் புக் படிச்சிருப்பேளே பிராமின்ஸ குத்தம் சொன்னா உங்களுக்கு வெல்லம்.. ஹி... ஹி..."

"என்ன சார் நீங்க வேற, காரணம் இல்லாம ஒருத்தர திட்டுனா ஏத்துக்க முடியுமா? தேவையானத தெரிஞ்சுக்க



படிப்பகம்

www.padippakam.com

வேண்டியதுதான்.''

''ஜாடையா எங்களவாள திட்றத சரிதான்றேள். காலைல தெருவுல நடந்ததை பாத்தேளா, யாரு தப்பு பண்றா, சொல்லுங்கோ.''

''ஓ! அந்த செல்லத்துரையா?''

''என்ன சாதாரணமா ஓ போடறேள். நீங்கதான் பகுத்தறிவு பாக்குற ஆள். அவன் செஞ்சது சரியா சொல்லுங்கோ! என்னபேசிண்டே இருக்கேன், சிரிக்கிறேள்'' உணர்ச்சிகரமானார் அய்யர்.

''இது அக்கிரகாரம்னு தெரியும், இங்க இருக்கிறவா பிராமின்னு தெரியும். இங்க வந்து மீனு, மீனுன்னு கத்தறான், ஆளுக்கு ரெண்டு கிலோ வேணுமான்னு கேக்கறான்னா, எவ்ளோ இன்டீசென்ட் பிகேவியர். இங்க இருக்கிற நான்பிராமின்ஸ் பாத்து சிரிச்சிட்டுதானே இருந்தாள், யாராவது அந்த படவாவ கண்டிச்சாளா? பிராமின், நான்பிராமின் பேதம் பாக்காம எவ்ளோ டீசென்டா இருந்துண்டு இருக்கோம். அடுத்தவாளுக்குப் புடிக்காததை செஞ்சி அதுல ஆனந்தம் அனுபவிக்கிறான்னா அவனோட புத்திய என்ன சொல்றது? இத எந்த பகுத்தறிவும் கேட்காதோ?'' ஆவேசமும், ஆலோசனையுமாக பேச்சு நீண்டது.

''சொல்லுங்க வாசு, இது அசிங்கமில்லையா? எங்கள வாதான் மேனியில பூணூல் போட்டாலே தப்புன்னு வாதம் பண்றேள்! அடுத்தவா வேணாம்னு ஒதுக்குறத அடுத்தவா மேல அத்துமீறி நடந்துக்குறதுக்கு யாரு தப்பு சொல்றது. இதுதான் டெமாக்ரசியா? சொல்லுங்கோ.''

பேசிக் கொண்டே போனவர், தெருப்பக்கம் கவனித்தவாறு ''தோப்பனார் தேடறார் போல இருக்கு. போயிட்டு வாங்கோ, நீங்களும் நானும் எங்க போயிடப் போறோம், ஆற அமர பேசலாம். கொஞ்சம் சாமர்த்தியமா யோசிக்கிற ஆளாச்சேன்னு உங்க காதுலயும் போட்டேன் அவ்வளவுதான், '' சிரித்த முகத்துடன் அனுப்பி வைத்தார்.

● ● ●

முதல் நாள் இராமமூர்த்தி அய்யரிடம் மேற்கொண்டு பேச நினைத்ததைப் பேச இயலாது போயிற்று. காலையிலிருந்து தெருப்பக்கம் அவரைத் தேடிக் கொண்டிருந்தன எனது கண்கள். வீட்டிலிருந்து தென்படுவார் என எதிர்பார்த்தேன். இராமமூர்த்தி அய்யர் தெருவிலிருந்து வீட்டுப்பக்கம் வழக்கத்தைவிட வேகமாக நடந்து வந்தார். அவரது வட்டவடிவமான தொந்தியும், பூணூலும் புவியீர்ப்பு விசையோடு போராடுவது போல அசைந்து கொண்டிருந்தது.

''என்ன சார்! இவ்ளோ வேகமா வரீங்க. ஏதும் அவசரமான வேலையா?''

''என்ன தெரியாதது போல கேக்கறேள்! கம்மாளத் தெருவுல புதுசா கட்டுன வினாயகர் கோவிலுக்கு இன்னிக்கு மகா சம்புரோட்சணமோன்னோ! அதான் பாராயணத்துக்கு காத்தாலயே போயிட்டேன். அபிஷேகத்துக்கு சந்தனம் வாங்கி ஆத்துலேயே மறந்து வச்சிட்டு போயிட்டேன், அதான் வேகு வேகுன்னு கொண்டு போயி கொடுத்திட்டு வர்றேன். அப்பாடா... நாராயணா... நமச்சிவாயா...'' துண்டால் தொந்தியில் வழிந்த வியர்வையை ஒற்றியபடி திண்ணையில் உட்கார்ந்தார்.

''அப்புறம் என்ன சேதி, ஊரே அங்க தெரண்டு நிக்கறது. நீக மட்டும் வரமாட்டேள்''

''ஓ! அதானா காலைலேர்ந்து நமகா, நமகான்னு சத்தம் கேட்டுச்சு''

''நீங்க காத்தால கேட்டது என்னோட வாய்ஸ்தான். வேதபாராயாணம் உங்களுக்கு நக்கலா படுதா''

''இல்ல சார் நேத்து நீங்க சொன்ன மாதிரியே நல்லா யோசிச்சு பாத்தேன். செல்லத்துரை செஞ்சதையே இப்ப நீங்களும் செய்யறீங்களே, அதான், என்ன சொல்றதுன்னே தெரியல''

''அந்த மீன்காரன் மாதிரி நானா? என்னது குண்டதூக்கி போடறேள்'' பரபரத்தார் இராமமூர்த்தி.

''வாங்கப் புடிக்காதவங்க கிட்ட மீனு மீனுன்னு கத்தறது தப்புன்னா, சமஸ்கிருதம்னா என்னன்னு தெரியாதவங்க கிட்ட போயி மைக்செட்டு போட்டு நீங்க நமகா, நமகான்னு கத்தறது மட்டும் சரியா? நீங்களே யோசிச்சு பாருங்க. அந்தத் தெருவுல இருக்கறவங்களுக்கு தமிழைத்தவிர வேறெதுவும் தெரியாது. நீங்க கர்நாடக சங்கீதம் கச்சேரி வேற வெச்சிருக்கீங்க. இப்படி அவங்க விருப்பத்த மதிக்காம இதுதான் பாட்டு, இது தான் வேதம்னு நீங்க திணிக்கறது மட்டும் எந்த வகையில சார் டெமாக்ரசி?''

''ஹி... ஹி... யாரோ எழுதி வச்சத படிச்சுட்டு தப்பாப் பேசறேள். உங்களுக்குப் புரிய வைக்க நம்மால ஆகாது. சரி. அந்த சாப்டர விடுங்கோ. கொஞ்சம் கட்டையை சாச்சிட்டு திரும்பவும் பாராயணம் பண்ண போகணும்.''

''அப்ப திரும்பவும் மீன் விக்க போறீங்கன்னு சொல்லுங்க.''

ஆவேசமாகி வாதம் பொறி பறக்கப் போகிறதென்று எதிர்பார்த்தேன்.

''ஆஹா... ஹா... ஹா... ஓங்களுக்கு அனுபவம் பத்தாது. அதான் தெரியாம பேசறேள். சாதாரண மேட்டர போயி ரொம்ப சீரியசா எடுத்துக்கறேளே. போயி நீங்களும் ரெஸ்டு எடுங்கோ. ஏன் இந்த வெயில் நேரத்துல சும்மா பேசிண்டு. திண்ணைல வேற காத்த காணோம். ரொம்ப புழுங்கறது...'' போய்க் கொண்டே இருந்தார்.

இதற்கு முன், நழுவிச் செல்வதில் இப்படியொரு உயிரினத்தை இதற்குமுன் பார்த்திராத அதிர்ச்சியில் வாயடைத்து நின்றேன்.

●





படிப்பகம்




# ● வாசகர் கடிதம் ●

முதலாளிய சமூகத்தில் பொருள்கள் எப்படி மனிதர்களை ஆளுமை செய்கிறதோ, அதுபோல கலை இலக்கியங்களும் மனிதர்களை ஆளுமை செய்வதாக உள்ளது. மனிதகுல நாகரீகத்திற்காக கலை, இலக்கியங்கள் என்பது மாறி, கலை இலக்கியங்களை நுகர்வதற்காக மனிதர்கள் என்ற நிலை ஏற்பட்டு வருகிறது. இத்தகைய போக்குகளைப் புரிந்து கொள்ளவும், கலை இலக்கியத் தளத்திலிருந்து முறியடிக்கும் வழிகளையும் 'புதிய கலாச்சாரத்தில்' எதிர்பார்க்கிறேன்.

— இ.சி. இர்ரமச்சந்திரன், ஈரோடு

● 'தேசபக்தீ' - உரைவீச்சுக் கட்டுரையை பல தொழிலாளர்கள் படித்துப் பாராட்டினர். 'சி.பி.ஐ' - கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் அக்கட்டுரையை நகலெடுத்து பலரிடமும் விநியோகத்திற்காகக் கொடுத்தனர்.

கேரளத்தில் 1957 - இல்தான் நம்பூதிரிபாடு முதல்வராகப் பதவியேற்றார். லாட்டரி கட்டுரையில் 1956 ஆம் ஆண்டில் இ.எம்.எஸ் லாட்டரியை அறிமுகப்படுத்தினார் என்று வருகிறது. விளக்கம் தேவை!

— முகுந்தன், பு.ஜ.தொ.மு, சென்னை.

● 'கண்ணீரே ஆயுதமாக' என்று ஒரு கட்டுரை பல வருடங்களுக்கு முன்னர் 'புதிய கலாச்சாரத்தில்' வந்திருந்தது. அதை நினைவூட்டிய 'கண்ணீர்' கவிதை, பொதுவுடமைச் சிந்தனையுள்ள எந்த மனிதனும் சுயநலம், பாசம், சொந்தம் போன்ற தனியுடமை வலையில் சிக்கமுடியாது என்பதைச் சிந்திக்க வைத்தது.

— மீனா,
பெண்கள் விடுதலை முன்னணி,
சென்னை.

● இதுவரை எல்லையில் நடத்திய போர் போதும். இனிமேல், போர் நடத்த வேண்டியது நம் நாட்டுக்குள்ளேதான் — அதாவது தேசபக்தி என்று நாடகமாடி நாட்டையே விற்றுவரும் துரோகிகள் மீதும், அவர்களின் எஜமானர்கள் மீதும்தான் என்பதை 'கார்கில்' குறித்த கட்டுரையும், கவிதைகளும் மறுக்கமுடியாமல் உணர வைத்தன.

— கு. வளவன், சென்னை.

● ''ஒரு நாடு என்ற வகையில் 20 - ஆம் நூற்றாண்டில் உருவான இந்தியாவின் மீது 11 - ஆம் நூற்றாண்டின் கஜினி முகமது எப்படிப் படையெடுக்க முடியும்?'' என்ற கேள்வி ஆர்.எஸ்.எஸ். கும்பல் தனது முசுலீம் எதிர்ப்பு வெறிக்காகவே கஜினி வரலாற்றைத் திரித்திருப்பதைப் படம்பிடித்துக் காட்டியது, கஜினி முகமது கட்டுரை.

— வா. தேவன், சென்னை.

● 'மார்க்சிஸ்ட்டுகளை' தாங்கள் விமரிசிக்கும் போதெல்லாம் மனவதைக்கு உள்ளான நான், 'நாயனார் அழைக்கின்றார்' என்ற கட்டுரையை என் மனதில் பதியவைத்த பின் மனம் புழுங்குகிறேன். காரணம், இந்திய அரசியல் வானில் 'மார்க்சிஸ்ட்டுகளே' மாற்றுக் குறையாத மாணிக்கங்கள் என மடமையாக இவ்வளவு காலம் எண்ணிவிட்டோமே என்பதுதான். என்னைப் போன்ற பல்லாயிரக் கணக்கான தோழர்கள் 'மார்க்சிஸ்ட்டுகளுக்கு' பல்லக்குத் தூக்கும் மாயை அகலவும், மார்க்சிஸ்ட்டுகளின் கம்யூனிச விரோத போக்குகளை வெளிப்படுத்தவும், இதழ் தோறும் விடாது எழுதுங்கள்.

— முகவை ஜெகன், இராமநாதபுரம்

● இதழ் வாங்கியவர்கள் முதலில் அட்டையை மட்டும் நிமிடக் கணக்கில் பார்த்து யோசித்தனர். தேச பக்தி பஜனையில் புதைந்து கிடந்த மூளைக்கு ஒரு நெம்புகோல்!

தேசபக்தி கட்டுரையில் தேசபக்தி என்பது கோடிக்கணக்கான மக்கள் நலனைப் பாதுகாப்பதுதான், ஒரு சில முதலைகளைப் பாதுகாப்பதல்ல என்பதற்கு, உண்மையில் பெயர் வெளியில் தெரியாமல், சன்மானம் பெறாமல் மறைந்த ஆயிரக்கணக்கான நக்சல்பாரித் தியாகிகளை இனம் காட்டியிருக்கலாம்.

'மண்புழு நாகரீகம்' இன்றைய சமூக வாழ்வின் சமரசங்களுடன் வாழ்ந்து கொண்டே புரட்சிபேசும் தோழர்கள்/நபர்களின் சிந்தனையை கழுவி சுத்தம் செய்வது போல இருந்தது.

— இளம்பிறை, தேனி.

● 'வானத்தில் இருந்து சிரிக்கிறார் முர்டோச்' இவர் யாரெனத் தெரியவில்லை, விளக்கம் தேவை. 'அமெரிக்கப் பள்ளி மாணவர் வன்முறை' அங்கே மட்டுமல்ல, உலகம் முழுவதும் பரவாமல் இருக்கப் போவதில்லை. பாதிக்கப்படும் போது மட்டும் புலம்பும் நடுத்தரவர்க்கத்தின் முணுமுணுப்பை இப்போதே கேட்க முடிகிறது.

— தொ.பி.குழு, நெய்வேலி.

● கோவில்களுக்கு வரும் பக்தர்களைக் கொள்ளையடித்த குறுநில இந்து மன்னர்களைப் பற்றி மௌனம் சாதிக்கும் இந்து வெறியர்கள், கஜினி முகமதுவைப் பற்றி மட்டும் பிரச்சாரம் செய்வது ஏன்? ஒரு வேளை 'இந்துக்களே இந்துக்கடைகளில் மட்டும் பொருட்களை வாங்குங்கள்,' என்பது போல 'இந்துக்கள் மட்டும் இந்து பக்தர்களைக் கொள்ளையடிப்போம்' என உரிமை கொண்டாடுகிறார்களோ?

கம்ப்யூட்டரில் காதல் செய்யக் கற்றுக் கொடுக்கும் கதிர் போன்ற கழிசடைக் கோமாளிகள் உருவாக்க நினைக்கும் நாகரீகத்தின் இறுதிவடிவம் எப்படியிருக்கும் என்பதை 'அமெரிக்கப் பள்ளி வன்முறை கட்டுரை தெரிவிக்கிறது. இணக்கமற்ற சமூகத்தை உருவாக்கியிருக்கும் முதலாளித்துவ சமூகத்தில் வன்முறை தவிர்க்க இயலாதது என்பதை அதன் சமூகக் காரணங்களிலிருந்தே விளக்கியது அருமை.

இந்தியாவிலேயே முறையாக பரிசுச்சீட்டை அறிமுகப்படுத்தியவர் இ.எம்.எஸ் நம்பூதிரிபாட் என்பது அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது. மேலும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, வரிசையில் லாட்டரிச்சீட்டையும் அறிமுகம் செய்த 'அறிஞர்' அண்ணாவையும் அவருடன் சேர்த்திருக்கலாம்.

பெண் தோழர்கள் புதிய கலாச்சாரம் விளம்பரச் சுவரொட்டி ஒட்டச் சென்ற போது, பலர் ''ஏம்மா உங்க கட்சியில போஸ்டர் ஒட்ட ஆம்பளைங்களே இல்லையா'' என்றனர். ''எங்க கட்சியில் எல்லாரும் எல்லா வேலையையும் செய்வோம்'' என்று விளக்கிய பின்னர் உற்சாகப்படுத்தினர்.

பேருந்து விற்பனையின் போது 'லாட்டரி' விவகாரத்தைப் பேசியபோது 'திருச்சி லாட்டரி மன்னன், அண்ணன் கே.ஏ.எஸ். ராம்தாசின்' ஏஜெண்டுகள் கோபம் பொங்க நம்மிடம் தகராறு செய்தனர். நாம் இன்னார் என்பதை உரிய மொழியில் விளக்கியவுடன் 'நீங்கள் என்று தெரியாமல் பேசிவிட்டோம், நீங்கள் பேசுங்கள்' என்று சென்றுவிட்டனர்.

— சுரேஷ், வாசகர் வட்டம், திருச்சி.

www.padippakam.com

-2 ஆம் பக்கத் தொடர்ச்சி...

விவசாயிகளின் போராட்டம், 1857 முதல் சுந்திரப் போர் என்று என்று பல ஏகாதிபத்திய எதிர்ப்புக்களாக அக்குமுறல்கள் வெடித்தன.

பிரிட்டாஷாருக்கு எதிராகக் கலகங்களைத் தூண்டி விட்டவர் லாலன் என்று கூடச் சொன்னார்கள். அதற்கான முழுவிவரங்கள் ஏதுமில்லை; அவரது பாடல்களிலும் கணிசமான ஆதாரங்கள் தெரியவில்லை. ஆனால் ஜமீன்தார்களின் அநீதிகளுக்கெதிராகத் தனது சீடர்களைத் தூண்டிவிட்டார் லாலன் என்று செய்திகள் சில உண்டு.

குறிப்பாக மக்களைப் பிளவுபடுத்தும் ஜாதி, மத விஷ விதைகளைத் தேய்த்து அழிக்க வேண்டும் என்றார் லாலன். அந்த வகையில் மதவெறிக்கு எதிராக மட்டுமல்ல; மதத்தின் அடிப்படையையே அவர் சிந்தனைகள் கேள்விக்குட்படுத்தின. அதேசமயம் மிகப் பின்தங்கிய அவரது நெசவாள - விவசாய குடும்பப் பின்னணியில் பார்க்கும் போது அவர் மாற்றுச் சிந்தனையாக உள் ஒளியை - அரூபமான ஒரு கடவுள் தேடலை முன் நிறுத்தினார். கடவுளை மையமாக வைத்த சடங்குகள், நிறுவனங்கள், மடாதிபதிகள், மேல்சாதிக்காரர்கள் ஆகியோர் நடைமுறையில் 'உன்னத' குணங்களுக்கு நேரெதிரான கொடூரமான சுரண்டலாளர்களாக இருப்பதைப் பார்த்த லாலன் மனிதனை மையமாக வைத்த 'சாதனா' நடைமுறைக்கு மிக இயல்பாகத் திரும்பினார்.

அவரது சிந்தனைகள் போட்ட கேள்விகள், சித்தரது, சில சூபிக்களின் கேள்விகளை ஒத்தது; இயல்பானது; எதார்த்தமானது.

அதே கட்டத்தில் சிதைந்து கொண்டிருந்த கைவினைஞர் மற்றும் நெசவாளர் குடும்பங்களிலிருந்து இத்தகைய கலைஞர்கள் தோன்றினார்கள். ராமதாஸ், கபீர், சைதன்யர் போன்றவர்கள் இத்தகையவர்களே. பிற்காலத்தில் இப்படிப்பட்ட இயக்கத்தவரை இந்து வேத நிறுவனங்களில் அய்க்கியப்படுத்திக் கரைத்துவிட்டார்கள்.

லாலன் போன்ற கவிஞர்களை, பல சூஃபி துறவிகளை - கவிஞர்களை, பல சித்தர்களை இந்தப் பொது நீரோட்டம் ஒதுக்கிவிட்டது. அவர்களின் சிந்தனை, எழுந்து கொண்டிருந்த போர்க் குரல்களின் ஏதோ ஒரு பிரதிபலிப்பாக இருந்ததே ஒதுக்கியதற்குக் காரணம். பழைய வேத மரபில் வந்த சடங்குகள், வாழ்க்கை முறைகளை எதிர்த்தவர்களை பொதுப்பட்டியலில் சேர்க்க முடியாது என்று மேல்சாதி மேல்வர்க்கத்தவர் மூர்க்கமாக இருந்தார்கள்.

''லாலன் வேதத்துக்கும் எதிரி, மவுல்வி - மவுலானாக்களுக்கும் எதிரி. மனிதனை மையமாக வைத்த நாட்டுப்புறக் கலாச்சாரத்தில் ஒரு பகுதி'' என்று ஆராய்ச்சியாளர்களும் மக்களும் சொல்கிறார்கள்.

''லாலன் ஓயாது பெருக்கெடுத்தோடிய ஆறு'' என்கிறார் ஒருவர். லாலனே சொல்லிக் கொள்வாராம்: ''ஓ சீடர்களே ஓடி வாருங்கள். எனக்குள்ளே கடலின் ஆழத்திலிருந்து இளங்குஞ்சு மீன்கள் ஓடி வருகின்றன'' என்று. அவர் மீன்குஞ்சுகள் என்று சொன்னது அவரது பாடல்களை. அவரது சீடர்கள் அருகே வந்து பாடல்களை எழுதிக் கொள்வார்களாம்.

அவரது, ஒரு சில பாடல்களைக் கீழே தருகிறோம்.

● ○ ●

**ஒன்று**

''லாலன் எந்த மதம்?''
அவர்கள் கேட்கிறார்கள்.
சாதியின் ரூபமெதுவும்
புரியவில்லை என்கிறான் லாலன்.

சுன்னத் முசுலீமின் அடையாளம் என்றால்
முசுலீம் பெண்ணுக்கு
என்ன அடையாளம்?
பூணூல் பார்ப்பானின் அடையாளம் என்றால்
பார்ப்பாத்திக்கு
என்னடா அடையாளம்?

ஒருத்தன் கழுத்தில் மாலை போடுகிறான்
அடுத்தவன் மணியைக்
கையில் உருட்டுகிறான்
இந்தச் சடங்குகள் பிறந்தது - ஒருவனின்
பிறப்பிலா, இறப்பிலா?

ஓடுகிற தண்ணீர் -
குழியில் நிரம்பினால் கிணற்று நீர்
கங்கையில் நிரம்பினால் கங்கை நீர்
மூலத்தில் தண்ணீர் பலவல்ல ஒன்றுதான்
பானைகளில்தான் பேதம்
பானைகள் வேறு, தண்ணீர் ஒன்றுதான்.

★

**இரண்டு**

''ஒதுக்கிவை லாலனை''
அவர்கள் கத்துகிறார்கள்.
லாலனுக்கு இது விந்தை
அவர்கள் -
நீதிவழிமறுத்து
கண்ணாமூச்சி காட்டுகிறார்கள்.

நீ பிறந்தபோது என்ன சாதி
எனக்குக் கொஞ்சம் சொல்லேன்
செத்துப் போனால் அதே சாதி
என்னவாகும் எனக்குச் சொல்லேன்
பார்ப்பானை, சண்டாளனை,
சக்கிலியைப் புனிதப்படுத்துவது
ஒரு தண்ணீர்தானே?
நான் பார்ப்பதும் கேட்பதும்
மகிழ்ச்சியாயில்லை -
மனிதனுக்கும் மனிதனுக்கும் நடுவில்
அது என்ன செயற்கைச் சுவர்?
சண்டாளனுடன் சாப்பிட்டால்
மதத்துக்கு என்ன கேடு?
லாலன் சொல்கிறான்:
சாதி மதங்களில்
எத்தனைப் புளுகு உண்டோ
அத்தனையும் சரி செய்!

★

**மூன்று**

சாதிபேதத்தில்
நீதிசாட்சி செல்லுமோ!
ஒவ்வொரு நம்பிக்கை உள்ளவர்
தங்கள் மதமே முதல் என்றார்.
லாலன் சொல்கிறான்:
என்கையில் கிடைக்கட்டும் சாதி
எரித்து ஊதிடுவேன் சாம்பலாய் மீதி!

★

**நான்கு**

ஜவான் என்றும் காபிர் என்றும்
மக்கள் பிளந்து நிற்கும்போது - என்
கண்களில் நீர் வழிகிறது-
லாலன் சொல்கிறான்:
சாதிப் பெயரால் மதத்தின் பெயரால்
ஒன்றும் தெரியாமலும் மயக்கத்திலும்
யாரை நீ கொல்கிறாய்?

★

**ஐந்து**

நபிகள் பெருமானே!
ரசூலுக்கு விடைசொன்ன
கலீஃபாக்கள் எல்லோரும்
உனக்குப்பின் புனிதச் சேதி
ஒன்றுமில்லை என்றார்கள்.

உன்சட்டங்கள் எல்லாம்
பாதுகாக்கப்பட்டவை —
ஒழுங்கான விளக்கமில்லை எனில்
புரிந்து கொள்வது கடினம்
விளைவு பெருங்குழப்பம்.
உன் புனிதக் குரானில்
உருவகங்கள் அனேகம்.
தெளிவாக விளக்கி விட்டால்
சிக்கல் இல்லை அல்லவா?
பெயரில் தான் அத்வைதம்
உன் வாக்கியங்களோ
முரண் உள்ளவை
தெளிவில்லாதவை
வழக்கொழிந்தவை
''ஓ நபிகளே வாருங்கள்
அதன் பொருளைச் சொல்லுங்கள்''
— லாலன் கேட்கிறான்.

• குப்பண்ணன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்டர்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியா-பாக். எல்லையில் சாதியம், தேசியம், விவசாயம்

இதுவும் எல்லைக்கோடு பற்றிய பிரச்சினைதான். இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் அங்கிருந்து இங்கும் இங்கிருந்து அங்கும் ஊடுருவல்காரர்களை இரண்டு இராணுவங்களுமே சுதந்திரமாக அனுமதித்து வந்திருக்கின்றன. நம்ப முடியவில்லையா? சூலை 4 'இந்து' நாளேட்டில் இது வெளிவந்துள்ளது. தேசிய எல்லைக்கோட்டை ஊடுருவிச் செல்லும் சாதிய எல்லைக்கோட்டின் கதை இது.

எல்லையின் இரண்டு பக்கங்களிலுமுள்ள கிராமங்களில் வசிக்கும் இந்து, முஸ்லீம் மக்களிடையே சாதி மிக வலுவாக உள்ளது. எனவே 'தேசிய எல்லை' கடந்து பெண் எடுப்பதும் பெண்கொடுப்பதும் சகஜம். இந்தத் திருமணங்கள் பலவற்றிற்கு இரண்டு தரப்பு இராணுவ அதிகாரிகளும்கூட வந்திருக்கின்றனர்.

1971 போரின்போது பாகிஸ்தானிற்குள் 60 கி.மீ. தூரம் ஊடுருவிச் சென்றிருந்தது இந்திய ராணுவம். இந்திய ராணுவத்தின் தாக்குதலுக்கு அஞ்சி எல்லைப்புற கிராமங்களில் வாழ்ந்த பாகிஸ்தானி முஸ்லீம்கள் நாட்டின் உட்பகுதிக்கு ஓடிவிட்டனர். எஞ்சியிருந்தவர்கள் பாகிஸ்தான் இந்துக்கள் மட்டுமே.

இந்திய இராணுவம் வாபசான பிறகு பழையபடி கிராமத்துக்குத் திரும்பி வரும் முஸ்லீம் நிலவுடைமையாளர்கள் தங்களைத் தாக்கக் கூடும் என்று அஞ்சிய ஒரு லட்சம் பாகிஸ்தானி இந்துக்கள் இந்திய ராணுவத்துடன் சேர்ந்து இந்தியாவுக்குள் வந்துவிட்டனர். இந்துக்கள் என்று பொதுவாக அழைக்கப்படும் இவர்களில், இராசபுத்திரர், ஜாட் போன்ற 'உயர்' சாதியினர், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர் ஆகிய அனைவரும் அடக்கம்.

பாகிஸ்தானிலிருந்து வந்த இந்து அகதிகளுக்கு வீட்டுமனை, நிலம் ஒதுக்கியது அரசு. இராஜஸ்தான் கால்வாயின் பாசனப்பகுதிகளை இராசபுத்திரர்கள் அபகரித்துக் கொண்டனர். வீட்டு மனைகளில் மேட்டுப் பகுதியை இராசபுத்திரர்கள் பிடித்துக் கொண்டு பள்ளமான பகுதியைத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கினர்; ஆனால் தாழ்வான பகுதிகளில் அவர்களது குடியிருப்புக்கு அருகில் இருந்த நிலங்களை மட்டும் இராசபுத்திரர்கள் கைப்பற்றிக் கொண்டனர். அரசாங்கம் கட்டிய பொதுக் குடிநீர்த் தொட்டியிலிருந்து குழாய் போட்டு தங்களுக்கென்று தனித் தொட்டியும் கட்டிக் கொண்டனர், இராசபுத்திர சாதியினர்.

இந்தியாவிற்குள் நுழைந்தவுடனே இந்த ஆட்டம் ஆடும் இராசபுத்திரர்கள் பாகிஸ்தானில் இருந்தபோது என்ன செய்தார்கள்? தாழ்த்தப்பட்ட மக்கள் சொல்கிறார்கள்:

"அங்கேயும் சாதி இல்லாமல் இல்லை. முஸ்லீம்களுக்குள்ளும் ஏகப்பட்ட சாதி உண்டு. ஆனால் சாதிப் படிநிலையில் இராசபுத்திரர்கள் மூன்றாவது நான்காவது நிலையில்தான் இருந்தனர். என்ன பிரச்சினையானாலும் தீர்ப்பு சொல்வது உள்ளூர் காஜிதான்." அங்கேயும் முஸ்லீம் பண்ணையார்கள் அடிமைத் தொழிலுக்கும், கட்டாய உழைப்புக்கும் தாழ்த்தப்பட்டவர்களைத்தான் ஏவுவார்கள். இராசபுத்திரர்களை ஏவமாட்டார்கள். எனினும் அங்கே இராசபுத்திரர்கள் எங்களை அடிமையாக நடத்த முடியாது."

அப்படியானால் பாகிஸ்தானை விட்டு இந்தியாவுக்குள் நுழைந்தவுடனே இராசபுத்திர சாதியினர்க்கு என்ன ஆயிற்று என்ற கேள்விக்கு கவிதையைப் போல பதில் சொல்கிறார் ஒரு தாழ்த்தப்பட்டவர் - "ஏனென்றால் இந்தியாவுக்குள் நுழைந்தவுடனே அவர்கள் இராசபுத்திரர்களாக மாறிவிட்டார்கள்!"

இந்திய எல்லைக்குள் நுழைந்த ஒரு லட்சம் பேரில் ஒருவர்கூட இந்தியராக 'மாறவில்லை' போலும்!

எல்லையில் சாதியின் கதை இப்படியிருக்க, தேசிய அடையாளத்தின் கதையைப் பார்ப்போம். கார்கிலுக்கு அருகே கட்டுப்பாட்டுக் கோட்டுக்கருகில் ஹண்டர்மான் எனும் கிராமம் இருக்கிறது. 50 ஆண்டுகளில் இக்கிராமத்தின் தேசம் மூன்று முறை மாறியிருக்கிறது. 47 - பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தானியர்களாகக் கருதப்பட்டார்கள். 24 வருடங்கள் கழித்து 71 - இல் இந்த ஊரைக் கைப்பற்றிய இந்திய இராணுவம், 'பாக்.'கைத் தோற்கடித்த கதையைக் கூற, மக்கள் தங்களை இந்தியர்கள் என அறிந்து கொண்டார்கள்.

அன்று வெற்றிச் செய்தியை அறிவித்த சீக்கிய அதிகாரியிடம் 'ராம், ராம், இந்துஸ்தான் ஜிந்தாபாத்' என்று முழக்கமிட்டதை நினைவுகூறும் குலாம் அகமது, "பிரச்சினைகளைத் தவிர்க்க நாம் எதையும் செய்ய வேண்டும்" என்கிறார். நாடே கார்கிலில் மூழ்கியிருக்கும் போது இம்மக்கள் என்ன நினைக்கின்றனர்? "இந்தப் போர் பற்றிய பரவசம் எதுவும் எங்களிடமில்லை. எதற்காக இருவரும் சண்டை போடுகிறார்கள் என்பது ஆச்சரியமாக உள்ளது. இதுவரை இந்தப் போரினால் எவருக்கும் பலன் கிடையாது."

நாட்டின் பிற இடங்களில் கார்கில் பிரச்சினை ஒரு தேர்தல் விவகாரமாக ஆனாலும், கார்கிலில் அப்படி இல்லை. தைரியம் உள்ள தேசபக்திக் குஞ்சுகள் அங்கேபோய் தேசபக்தி என்று கத்தினால் மக்களே அடித்து விரட்டுவார்கள். இன்றும் அங்கே குண்டுகள் விழுந்து வெடிக்கின்றன. "மே, 16 ஊரைவிட்டு காலி செய்து இன்றுதான் திரும்பினேன். 27 ஆடுகளைக் காணோம். கடையில் இருக்கும் வெடிக்காத பாக் குண்டை இராணுவம் இன்னும் எடுக்கவில்லை" என்று கோபப்படுகிறார் 70 வயது ஷாம்சுதின்.

சாமலியா கிராமத்தைச் சேர்ந்த பகதூர்சிங், எல்லைப்புற விவசாய சங்கத்தின் தலைவராக இருக்கிறார். அவரது குமுறலைக் கேளுங்கள்: "இரண்டு தரப்பும் போடுகிற சண்டையினால் ஒவ்வொரு வருடமும் அறுவடை செய்ய முடியவில்லை. பயிர்கள் கண்ணெதிரே அழிகின்றன. நட்டஈட்டிற்காக அரசு தரும் தொகையை உள்ளூர் அதிகாரிகள் சுருட்டுகின்றனர். பாக்கிஸ்தான் இராணுவத்தைவிட இவர்கள் தான் மோசமானவர்கள். எத்தனை நாள் இப்படி வாழ முடியும்? காஷ்மீருக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கண்டால் என்ன?"

• சூரியன்